# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 18 வியாழக்கிழமை (01.04.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 126

# சகலரையும் சமமாக மதிக்கும் அரசமைப்பு; வன்முறைக்கு முடிவு

## பிரிட்டன் வற்புறுத்துகிறது; இலங்கை அரசு சீற்றம்





கொழும்பு, ஏப்ரல் 01

இலங்கை அரசு உடனடியாகக் கருத்திலெடுத்துத் தீர்வு காணவேண்டிய மூன்று விடயங்கள் குறித்து வலியுறுத்தும் ஒளிநாடா அறிக்கையொன்றை பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிபாண்ட் புதன்கிழமை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கைப் பொதுத் தேர்தலுக்கு முன்பாக பிரிட்டிஷ் இவ்வாறான அறிக்கையை வெளியிடுவது குறித்து இலங்கை அரசு சந்தேகம் வெளியிட்டுள்ளது.

(24ஆம் பக்கம் பார்க்க)

## ஏப்ரல் முட்டாள் தினம் இன்று

இன்று ஏப்ரல் மாதம் முதலாம் திகதி. ஏப்ரல் முட்டாள் தினம். உங்கள் நண்பர்கள், உற்றார்கள் உங்களை முட்டாளாக்க முயற்சிப்பார்கள்.

ஆகவே உஷாராக இருங்கள்! கவனமாகவும், எச்சரிக்கையாயும் நடந்து கொள்ளுங்கள்!

### மாணவன் கபிலநாத் படுகொலை தொடர்பாக

## பிடியாணை விதிக்கப்பட்டுத் தேடப்படும் ஜீவன் சாவகச்சேரி ஈ.பி.டி.பி. முகாமில் இயங்கியவர்!

### பொறுப்பாளரான அக்கட்சி வேட்பாளர் சாள்ஸின் கீழ் செயற்பட்டவர்

சாவகச்சேரி,ஏப்.1

சாவகச்சேரி மாணவன் கபிலநாத் படுகொலை தொடர்பாக சாவகச்சேரி நீதிமன்றம் விதித்த பிடியாணையின் பேரில் தேடப்பட்டு வரும் குமாரசிங்கம் கேசவன் (ஜீவன்) என்பவர் சாவகச்சேரி ஈ.பி.டி.பி. முகாமுக்கு பொறுப்பாகவுள்ள சூசைமுத்து அலெக்சாண்டர் (சாள்ஸ்) என்பவரின் கீழ் செயற்பட்டு வந்தவர் எனத் தெரிய வந்திருக்கின்றது.

மேற்படி மாணவன் படுகொலை தொடர்பாக நேற்று சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்ற பூர்வாங்க விசாரணைகளின் பின்னர் நீதிவான் த.பிரபாகரன் விடுத்த உத்தரவில் இந்த விவரம் இடம்பெற்றுள்ளது.

தேடப்படும் ஜீவனைக் கைது செய்வதற்கான பிடியாணை கடந்த 24ஆம் திகதி முதல் பிறப்பிக்கப்பட்டுள்ளமையை தமது நேற்றைய உத்தரவில் மீண்டும் ஞாபகமூட்டியுள்ள நீதிவான் ஜீவனை

(02ஆம் பக்கம் பார்க்க)

### மாணவர் கபிலநாத் கொலை வழக்கு விசாரணை

## தேடப்படும் ஜீவனின் தாயும் சகோதரியும் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில்

யாழ்ப்பாணம்,ஏப்.1

சாவகச்சேரி, பெரிய அரசடிப் பகுதியில் கடந்த 14ஆம் திகதி கடத்தப்பட்டுப் பின்னர் கடந்த 27ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்ட மாணவனும் பிரபல வர்த்தகர் ஒருவரின் மகனுமான திருச்செல்வம் கபிலநாத்(வயது 16) கொலை வழக்கின் பூர்வாங்க விசாரணை நேற்று சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் சுமார் 5 1/2 மணி நேரம் நடைபெற்றது.

இந்த விசாரணையின் போது இந்தக் கொலை தொடர்பான முதலாவது சந்தேக நபராகத் தேடப்பட்டு வரும் குமாரசிங்கம் கேசவன் அல்லது ஜீவன் என்பவரது தாயாரான குமாரசிங்கம் திருப்பதி அம்மா, சகோதரியான குமாரசிங்கம் சுகன்ஜா ஆகியோரை, சாவகச்சேரிப் பொலீஸார் கைது

(24ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.நகரில் அதிகாலை வானங்கள் எரிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.1

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளர் இ.அங்கஜனுக்கு ஆதரவான சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த அவரது ஆதரவாளர்கள் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டதோடு இரண்டு வாகனங்களும் எரிக்கப்பட்டதாக இன்று அதிகாலை கிடைத்த பிந்திய தகவல்கள் தெரிவித்தன.

சுவரொட்டிகளை ஒட்டுவதில் ஈடுபட்டிருந்தவர்கள் மூவர் கடத்தப்பட்டனர் என்றும் -

''பிக்கப்'' வாகனம் ஒன்றும் வான் ஒன்றும் எரிக்கப்பட்டதாகவும் - மேலும் அறியப்பட்டது. வேட்பாளர் அங்கஜன் மயிரிழையில் தப்பியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இன்று அதிகாலை ஆரியகுளத்தை அண்டிய ஒரு பகுதியில் இச்சம்பவம் நடைபெற்றதாகத் தகவல்கள் தெரிவித்தன. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று யாழ்ப்பாணத்துக்கு தேர்தல் பிரசாரத்துக்கு விஜயம் செய்யவிருக்கும் வேளையில் அவரது ஐ.ம.சு.முன்னணி வேட்பாளரின் ஆதரவாளர்கள் தாக்கப்பட்டும் வானங்கள் எரிக்கப்பட்டும் உள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டது. (அ)

## கூட்டமைப்பைத் தடை செய்யக் கோரும் கோத்தபாயவின் கூற்று சரியானதே!

### அரச தரப்பில் அமைச்சர் சிறிசேன தெளிவாக்குகிறார்

கொழும்பு,ஏப்.01

நாட்டைப் பிளவு படுத்தும் வகையில் செயற்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற கட்சிகள் தடைசெய்யப்பட வேண்டும் என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அண்மைக்காலத்தில் தெரிவித்திருந்த கருத்து சரியானது என்று அரசு இப்போது கூறியுள்ளது.

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாட்டைப் பிளவுபடுத்தும் வகையில் கருத்துக்களை வெளியிடாது இனியாவது பொறுப்புடன் செயற்பட வேண்டும்

(24ஆம் பக்கம் பார்க்க)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி. வடக்கு மக்கள் வாழ்வா, சாவா என்ற நிலையில் ஜனாதிபதியின் வருகையால் இம்முறையாவது விடிவு கிட்டுமா?

## மிகவும் ஆவலுடன் காத்திருக்கிறார்கள் அவர்கள்

யாழ்ப்பாணம், ஏப்.1

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த ஜனவரியில் யாழ்ப்பாணம் விஜயம் செய்திருந்தார். இந்த விஜயத்தின்போது வலி. வடக்கு மக்களுக்கு 'நல்ல செய்தி'யை அறிவிப்பார் என்று எதிர்பார்த்திருந்தனர். ஆனால் யாழ். வந்த ஜனாதிபதி இந்த விடயம் பற்றி வாய் திறக்கவில்லை.

மீண்டும் யாழ்ப்பாணம் வருகிறார் ஜனாதிபதி. அவர் ஊடாக இம்முறை யாவது தங்களுக்கு விடிவு கிட்டுமா? என்று இடம்பெயர்ந்த வலி. வடக்கு மக்கள் ஏங்கித் தவித்த வண்ணம் உள்ளனர்.

இதுகுறித்து வலி. வடக்கு மீள் குடியேற்றம் புனர்வாழ்வுக் குழு "ஜனாதிபதி வருகையை ஆவலுடன்- எதிர்பார்த்திருக்கும் வலி. வடக்கு மக்கள் - இம்முறை விடிவு கிட்டுமா?" என்ற தலைப்பில் செய்திக் குறிப்பு ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

அதில் கூறப்பட்டுள்ளதாவது :-

கடந்த 20 வருடங்களுக்கு மேலாகத் தமது சொந்த மண்ணில் வாழும் உரிமை மறுக்கப்பட்ட நிலையில் வலி. வடக்கு மக்கள் வாழ்ந்து வருகின்றனர். தமது வயிற்றில் நெருப்பைக் கட்டியவாறு சுமார் ஒரு லட்சம் மக்கள் இன்று விரக்தியின் எல்லையில் இவ்வாறு வாழ்ந்து வருகின்றனர்.

வலி. வடக்கு மீள்குடியேற்றப் புனர்வாழ்வுக்குழு எடுத்த முயற்சியின் விளைவாக 06.01.2010 அன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஜனாதிபதியின் செயலாளர் பஸில் ராஜபக்ஷவும், வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறியும் எழுந்துநின்று, வலி.வடக்கு மக்களின் 75 வீதமான பிரச்சினைகள் தீருமென்று உறுதியளித்தனர். முதற்கட்டமாகக் காங்கேசன் துறை வீதிக்கு மேற்குப் புறத்தில் உள்ள 12 கிராம சேவையாளர் பிரிவுகளில் உடன் மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்படுவதாகவும், ஏனைய கிராமங்கள் தோறும் உள்ள கோயில்களுக்கு மக்கள் சென்று வழிபாடாற்ற முடியும் எனவும் கூறியிருந்தனர்.

இது பற்றி 10.01.2010இல் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ள ஜனாதிபதி அறிவிப்பு விடுப்பார் என்றும் முன்பு கூறியிருந்தனர். ஆனால், யாழ். வந்த ஜனாதிபதி இவ் விடயம் பற்றி வாய் திறக்காமையால் மக்கள் படு ஏமாற்றம் அடைந்தனர்.

வலி.வடக்கு மீள்குடியேற்றப் புனர்வாழ்வுக் குழு மேற்கொண்ட தொடர் முயற்சியால் ஆளுநர் சந்திரசிறியும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் கூடிக் கால்நடையாக மக்களை மாவிட்டபுரத்திற்கு அழைத்துச் சென்று மேற்குறிப்பிட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் அன்று முதல் மக்கள் குடியேறலாம் என்று அறிவித்தனர். மக்கள் சந்தோஷத்தோடு தங்கள் வாழ்விடங்களுக்குச் சென்றுவந்தனர்.

ஆனால் ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த ஓரிரு வாரங்களில் ஏதோ சில காரணங்களைக் காட்டி மக்கள் இப்பகுதிகளுக்குச் சென்று குடியேறுவது முற்றாகவே தடுக்கப்பட்டது.

குந்தியிருக்க நிலமின்றி செய்யத் தொழிலின்றி, தேடுவாரற்ற நடைப்பிணங்களாக வாழும் இம்மக்கள் இன்று வாழ்வா?, சாவா? என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இவர்களுடைய பிரச்சினைகளுக்குத் ஜனாதிபதியின் தற்போதைய வருகையின் போது என்ன சொல்லப் போகின்றார் என ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

வலி.வடக்கு மக்களுடைய பிரச்சினைகள் பற்றிக் கடந்த 23ஆம் திகதி அன்று ஜனாதிபதிக்கு வலி.வடக்கு மீள்குடியேற்றப் புனர்வாழ்வுக்குழு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது - என்றுள்ளது. (ஓ)

## பிடியாணை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடனடியாகக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு சாவகச்சேரி சிரேஷ்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் சனத்குமாரவுக்கு நேற்றுத் திரும்பவும் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மேற்படி ஈ.பி.டி.பி. முகாமுக்குப் பொறுப்பாகவுள்ள சூசைமுத்து அலெக்சாண்டர் (சாள்ஸ்) என்பவருக்கு அவரது முகாமில் இருந்து செயற்பட்டு வந்த ஜீவன் என்பவரால் தொலைபேசி அழைப்பு மூலமாக கிடைத்த தகவலின் பிரகாரம் சம்பந்தப்பட்ட சடலம் புதைக்கப்பட்ட இடம் அடையாளம் காணப்பட்டு அது தோண்டி எடுக்கப்பட்டது என்பதை பொலிஸார் குறிப்பிட்டமையை நீதிவான் தமது நேற்றைய உத்தரவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் ஈ.பி.டி.பி. முகாமுக்கு பொறுப்பாகவுள்ள சூசைமுத்து அலெக்சாண்டருக்கு (சாள்ஸுக்கு) இந்த வழக்கின் சந்தேக நபரான ஜீவனால் கூறப்பட்ட விக்கி தொடர்பாகவும், செல்வம் தொடர்பாகவும் அவர்களுக்கு இந்த வழக்கில் ஏதேனும் விதத்தில் சம்பந்தம் உள்ளதா என்பது தொடர்பாகவும் இவ் வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ள இரண்டாவது சந்தேக நபரான லோகேஸ்வரன் சாந்தீபனின் வாக்கு மூலத்தை சிறையில் வைத்து பதிவு செய்யவும் நீதிவான் நேற்று உத்தரவு பிறப்பித்தார்.

நீதிமன்றின் நேற்றைய உத்தரவில் குறிப்பிடப்பட்ட ஈ.பி.டி.பி. சாவகச்சேரி முகாம் பொறுப்பாளர் சூசைமுத்து அலெக்சாண்டர் (சாள்ஸ்) என்பவர் ஈ.பி.டி.பி. சார்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பட்டியலில் - வெற்றிலைச் சின்னத்தில் இந்தப் பொதுத் தேர்தலில் போட்டியிடுபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதே சமயம், இந்தப் படுகொலைச் சம்பவம் தொடர்பாக 'உதயன்', 'சுடர்ஒளி' நாளிதழ்கள் கடந்த திங்களன்று 'சாவகச்சேரி மாணவன் படுகொலை; ஈ.பி.டி.பி. உறுப்பினருக்குப் பிடியாணை! நாட்டை விட்டு வெளியேறவும் தடை' என்ற தலைப்பில் செய்தி வெளியிட்டன.

அந்தச் செய்தி குறித்து 'உதயன்', 'சுடர்ஒளி' நாளிதழ்கள் மீது வழக்குத் தொடரப்போகின்றார் என அன்றைய தினமே அறிக்கை வெளியிட்ட ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா மேற்படி செய்தியானது தமது கட்சி மீது திட்டமிட்டு சுமத்தப்படும் ஒரு பொய்யான குற்றச்சாட்டு என்றும் வசை பாடியிருந்தார் என்பது தெரிந்ததே.

மேலும் மேற்படி இரு விடயங்களிலும் தமது கட்சி மீது சுமத்தியிருப்பது திட்டமிடப்பட்ட அவதூறுப் பிரசாரங்களே அன்றி இதில் உண்மைத் தன்மை எதுவும் இல்லை என்றும் அவர் அந்த அறிக்கையில் அடித்துக் கூறியிருந்தார்.

"அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாகப் பரப்பப்பட்டு வரும் இது போன்ற மோசமான அவதூறுப் பிரசாரங்களால் நடந்து முடிந்த படுகொலையின் சூத்திரதாரிகளை கண்டு பிடித்து விடமுடியாது" - என்றும் கூட அவர் வியாக்கியானம் அளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஆசிரியர் குறிப்பு

மேற்படி செய்திகள் தொடர்பாக இடம் பெற்ற இரண்டு விடயங்களை வாசகர் கவனத்துக்கு கொண்டு வருவது முக்கியமானது எனக் கருதுகின்றோம்.

01. மேற்படி படுகொலை தொடர்பாக ஈ.பி.டி.பி. உறுப்பினருக்கு பிடியாணை என்ற செய்தி திங்களன்று வெளியானமையை அடுத்து, அடுத்த நாள் செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணத்தில் 'உதயன்' அலுவலகத்துக்கும், கொழும்பில் 'உதயன்', 'சுடர்ஒளி' ஆசிரியரின் கைத்தொலைபேசிக்கும் தொடர்பு கொண்ட சிலர், கொழும்பில் உள்ள அரச சார்புப் பத்திரிகையின் செய்தியாளர்கள் இருவரின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்கள் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டு மேற்படி செய்தி தொடர்பாகத் தாங்களும் கட்டுரை ஒன்று வரைய உள்ளனர் எனத் தெரிவித்தனர். அதனால் அந்தச் செய்தியின் மூலத்தை தெரியப்படுத்தும்படி 'நைசாக' அவர்கள் கதை விட்டனர். ஆனால் அவர்கள் அழைத்த 0772622638 என்ற தொலைபேசி இலக்கம் சம்பந்தப்பட்ட கொழும்புச் செய்தியாளர்களுடையது அல்ல என்பதையும் அதில் பேசும் குரல்கள் அச் செய்தியாளர்களுடையவை அல்ல என்பதையும் 'உதயன்', 'சுடர்ஒளி' ஆசிரியர் நேரடியாக சுட்டிக்காட்டி செய்தி மூலத்தை அறிய சிலர் எடுத்த முயற்சியை முறியடித்தார்.

02. அதே சமயம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணப்பிரிவு பொலிஸ் அத்தியட்சகர் அஜித் சமரக்கோன் பெயரில் ஒப்பமிட்டு றப்பர் ஸ்டாம்ப் பொறிக்கப்பட்ட கடிதம் ஒன்று 'உதயன்' ஆசிரியருக்கு முகவரியிடப்பட்டு 'உதயன்' யாழ்.அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது.

2010.03.29ஆம் திகதி 'உதயன்' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட தவறான செய்தி தொடர்பான விடயம்' என அதற்குத் தலைப்பிடப்பட்டிருந்தது.

அத்தோடு அதில் "மேற்படி குற்றம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரோ அல்லது கைது செய்யப்படவுள்ள சந்தேக நபரோ ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி.) தொடர்புள்ளவர்கள் என்றோ அன்றி அக் கட்சியின் பிரதிநிதிகள் என்றோ இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணைகளில் இருந்து தெரியவரவில்லை. எனவே கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் ஈ.பி.டி.பி. உறுப்பினர் என்ற வகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள செய்தி உண்மைக்கு புறம்பானது என்பதைப் பொறுப்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன். எனவே அச் செய்தியின் பிழையை சரி செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்" - என்று அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்தோடு அதன் பிரதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் சில பொலிஸ் அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன எனவும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தக் கடிதம் தொடர்பில் பின்வரும் விடயங்களையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்:

அ) ஈ.பி.டி.பியைக் காப்பாற்றுவதற்காக இத்தகைய உண்மைக்கு முரணான விடயம் அடங்கிய கடிதத்தை 'உதயன்' அலுவலகத்துக்கு அனுப்ப வேண்டிய தேவை பொலிஸ் அத்தியட்சகருக்கு இல்லை. அத்தோடு இவ்வாறு மறுப்பு பிரசுரிக்கும்படி கோரும் அதிகாரமும் அவருக்குக் கிடையாது. ஆகையினால் இவ் விடயம் தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து 'உதயன்', 'சுடர்ஒளி' நாளிதழ்கள் ஆராய்ந்து வருகின்றன.

ஆ) தூய தமிழில் நல்ல கணனி தட்டச்சில் இக் கடிதம் யாழ்.பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்திலிருந்து எமக்கு கிடைத்தது மகிழ்ச்சியே.

ஆனால் அந்தக் கடிதத்தின் கணனி எழுத்து அளவும், கடிதத்தின் தலைப்புக்கான எழுத்து அளவும் வகையும் (Font Size and Type) வழமையாக ஈ.பி.டி.பி. அலுவல்கத்திலிருந்து அனுப்பப்படும் பத்திரிகை அறிக்கைகளில் உள்ளவற்றை அப்ப டியே ஒத்திருந்தன. அது இக் கடிதத்தின் மூலம் குறித்து 'எங்கேயோ இடிக்கின்றதே.....!' என்ற கருத்தை நம்மிடம் ஏற்படுத்தவும் தவறவில்லை. (ஆ-ர்)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுப்பிரமணியம் இராசபூபதி

நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் இராசபூபதி நேற்று (31.03.2010) புதன்கிழமை மாலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - முத்தாச்சி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கதிர்வேலு சுப்பிரமணியத்தின் (மணங்குளாய்பிள்ளையார் தர்மகர்த்தா) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - சின்னப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை வல்லிபுரத்தின் (கற்குழி) சகோதரியும் கந்தையா, கனகரத்தினம், பராசக்தி (கனடா) ஆகியோரின் மைத்துனியும் சோமசுந்தரம், காலஞ்சென்ற பொன்னையா ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும் புஸ்பா (புத்தளம்), சுதா (லண்டன்), துளசி ஆகியோரின் அன்புத் தாயாரும் பத்மநாதன் (புத்தளம்), பாஸ்கரமூர்த்தி (லண்டன்), யோகலிங்கம் (யோகன் களஞ்சியம், சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு மாமியும் வாணி, விசாளி, சிந்து, விசாகன், கல்யாணி, சரணி, கவிசன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2010) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு காந்தளம் பிட்டி மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நுணாவில் மேற்கு,*
*சாவகச்சேரி.* T.P.: 0776630497

தகவல்:
மக்கள், மருமக்கள்.

### சின்னத்தம்பி துரைராசா



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், கட்டுவன் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி துரைராசா (ஓய்வு பெற்ற சுங்க அதிகாரி) நேற்று (31.03.2010) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கந்தவனத்தின் மருமகனும், காலஞ்சென்றவர்களான முத்தம்மா, சின்னம்மா மற்றும் பாக்கியலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, தர்மலிங்கம், செல்லையா, பாலசிங்கம், சுந்தரலிங்கம், அமுதலிங்கம், கணேசலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2010) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கட்டுவன் தெற்கு,*
*கட்டுவன்.* (96271)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### முத்தையா சிவசுப்பிரமணியம்

*(பவுண்றி மணியம்)*



**தலைவர், நொதேண் விளையாட்டுக் கழகம் (துரைசிங்கம் கம்பனி)**

சட்டநாதர் வீதி, திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் 74/1, சட்டநாதர் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா சிவசுப்பிரமணியம் (பவுண்றி மணியம்) நேற்றுமுன்தினம் (30.03.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சண்முகம்பிள்ளை - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் நகுலேஸ்வரியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/ நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்) பாசமிகு கணவரும் காலஞ்சென்ற இராகுலன் மற்றும் தமிழ்ச்செல்வியின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சிவசுந்தரத்தின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம், தர்மராசா, செல்வராசா, பரமேஸ்வரன், சுந்தரம்பிள்ளை, பத்மநாதன் மற்றும் செந்தில்மதி, மகேஸ்வரி, இராமச்சந்திரன், தங்கம்மா, சுந்தரம், நிர்மலன் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், கமலபூசணி, கனகம்மா, கமலாதேவி, பரமேஸ்வரி மற்றும் கிரேஸ், மனோன்மணி, மகேஸ்வரி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் செல்வரட்ணம் ஆகியோரின் சகலனும் கலாராணி, சிவகுமார், கலாவதனி, ஞானகுமார், இராஜ்குமார், சூரியகுமார், ஜெயக்குமார், ஜெயந்தி, சுகந்தி, சாந்தி, கிருசாந்தி, காலஞ்சென்ற சிவபாலன் ஆகியோரின் சிறிய தந்தையும் சந்திரலிங்கம், ஸ்ரீந்திரன், ஜெயக்குமார், வசந்தி, றோகான், மனோ, ஆனந்தி, உமாகாந்தன், திருமாறன், சிவமாறன், றொஜ்ஷன், சத்தியநாதன், பாலேந்திரா, கணேசலிங்கம், நாகபூசணி, வாசுகி, ஜெயானந்தன், தயானந்தன், கேசவி, ஜெகநாதன், பவானி, கமலநாதன், லோகநாதன், காலஞ்சென்ற ரங்கமலர் ஆகியோரின் மாமனாரும் குகதர்சன், பிரகாசினி, பிரியதர்சன், நீபஜன், நேமினா, ஜனகன், சாரங்கன், தசாங்கன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2010) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*74/1, சட்டநாதர் வீதி,*
*நல்லூர்.*
தொ.பே. 0214921699 (சி/566330

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 • தொலைநகல்.: 222 9944

## சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் பாதிக்கப்படாமல் உறுதிசெய்யவேண்டும்

தேர்தல் வன்முறைகளில் பெரும்பாலானவை உட்கட்சி மோதல்கள் அல்லது ஒரு தரப்புக் கூட்டணிக்குள் இடம் பெறும் வன்செயல்கள் எனப் பொலிஸார் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

இதுவரை தேர்தல் வன்முறைகள் தொடர்பாக செய்யப்பட்ட முறைப்பாடுகளில் அரைவாசிக்கு மேற்பட்டவை ஆளும் கட்சிக் கூட்டமைப்புக்குள் இடம்பெற்ற குத்து வெட்டுகளின் அடிப்படையில் நிகழ்ந்தவை என்ற உண்மையைப் பொலிஸ் மா அதிபரே போட்டுடைத்திருக்கின்றார்.

இவ்வளவும் விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறையின் கீழான விருப்பு வாக்குகள் தெரிவுமுறை தந்த பரிசுதான் என்பதில் சந்தேகமில்லை.

விருப்பு வாக்குகளைப் பெறுவதற்கான போட்டா போட்டி - இழுபறி - ஒரு கட்சிக்குள்ளேயே அல்லது ஒரு கூட்டமைப்புக்குள்ளேயே பெரும் சச்சரவுகளையும், குழப்பங்களையும், வன்முறைகளையும், குரோதங்களையும், விரோதங்களையும் தூண்டிப் பல குளறுபடிகளுக்கு வித்திடுகின்றது என்பது இந்தத் தேர்தல் முறைமையின் கீழ் நாடு சந்தித்த பட்டறிவாகும்.

விருப்புவாக்கு முறையைப் பிரதான அங்கமாகக் கொண்ட இந்தத் தேர்தல் முறைமையை மாற்றாவிட்டால் இத்தகைய தேர்தல் வன்முறைகளை நிறுத்தவே முடியாது என்பது தெளிவானது.

உட்கட்சிகளிடையேயே வன்முறையையும், வன்மத்தையும், குரோதத்தையும், விரோதத்தையும் தூண்டிவிடும் இத்தகைய முறைமையை மாற்றி அமைப்பது குறித்து சிந்திக்கத்தான் வேண்டும். ஆனால் அந்த நடவடிக்கை 'எடுத்தேன், கவிழ்த்தேன்' என்ற பாணியில் ஒருதலைப்பட்சமாக - ஒரு தரப்பினால் மட்டும் - முன்னெடுக்கத்தக்கதல்ல.

கண்டி, மடவளையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற - அரசுத் தரப்பின் - பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய மின்சக்தி அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே விகிதாசார அடிப்படையில் நடத்தப்படும் கடைசிப் பொதுத் தேர்தல் இதுதான் என அடித்துக் கூறியிருக்கின்றார்.

'இத்தேர்தலில் அரசு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை நாடாளுமன்றில் பெறும். அந்தப் பெரும்பான்மையை வைத்துக்கொண்டு, நாடாளுமன்றத்தில் உரிய சட்டங்களைக் கொண்டுவந்து, அரசமைப்பைத் திருத்தி, இந்தத் தேர்தல் முறைமைகளையும் நாம் மாற்றியமைப்போம்.' - என்று அந்தப் பொதுக் கூட்டத்தில் வைத்து முழங்கியிருக்கிறார் அமைச்சர் அளுத்கமகே.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அரசமைப்பு மாற்றப்படும் என்கின்றார்கள் ஒரு சாரார்.

தேர்தல் முறைமையை சீரமைத்து ஒழுங்குபடுத்துவதற்காக அரசமைப்பை மாற்றுவோம் என்கின்றனர் இன்னொரு சாரார்.

பிறிதொரு சாராரோ நல்லாட்சி, ஊழல் - மோசடியற்ற அரச நிர்வாகம் போன்றவற்றை உறுதிப்படுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்ட அரசமைப்பின் 17ஆவது திருத்தத்தை ஒழுங்குமுறையாக நடைமுறைப்படுத்துவதை உறுதிசெய்கின்றமைக்கான அரசமைப்பு மாற்றங்களை ஏற்படுத்துவோம் என்று முழக்கமிடுகின்றனர்.

எது, எப்படியென்றாலும் - தலையால் கிடங்குவெட்டியேனும் - நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற்று, அதன்மூலம் அரசமைப்பை மாற்றுவதற்கு ஆட்சித் தரப்பு - அரசுத் தலைமை - துடியாய்த் துடிக்கின்றது என்பது மட்டும் அப்பட்டமான உண்மை.

அரசுக்கு - தென்னிலங்கை ஆட்சிப்பீடத்துக்கு - அத்தகைய மக்கள் அனுமதியும், அங்கீகாரமும் எடுத்த எடுப்பிலேயே இத்தேர்தலில் கிட்டுவது என்பது சிறுபான்மையினரைப் பொறுத்தவரை மிக ஆபத்தான விடயமாகும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வை நடைமுறைப்படுத்தல், நல்லாட்சிக்கான அரசமைப்பு ஏற்பாடுகளை உறுதிப்படுத்துதல் என்ற அம்சங்களுக்கு அப்பால், தேர்தல் முறைகளில் மாற்றம் கொண்டுவருவது என்பது சிறுபான்மையினரைப் பொறுத்தவரை மிகமிக உன்னிப்பாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

சிறுபான்மை இனங்களைப் பொறுத்தவரை - குறிப்பாக மலையகத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களைப் பொறுத்தவரை - தற்போதைய விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் அடிப்படையிலான தேர்தல் முறைமை அவர்களுக்குக் கணிசமான நாடாளுமன்றப் பலத்தை ஏதோ ஒரு வகையில் உறுதிப்படுத்தி நிற்கின்றது என்பது கண்கூடு.

இந்நிலையில், சிறுபான்மை இனத்தவர்களின் நியாயமான அபிலாஷைகள், நீதியான எதிர்பார்ப்புகளை ஏற்க மறுத்து, அவர்களை மூன்றாந்தரப் பிரஜைகள் போல ஏற்கனவே நடத்திவரும் இந்த ஆட்சித் தரப்பிடம், அரசமைப்பை மாற்றுவதற்கான நாடாளுமன்றப் பலத்தை இத்தேர்தல் மூலம் மக்கள் ஒருதலைப்பட்சமாக ஒப்படைப்பார்களானால் -

இவ்விடயத்தில் தனித்துத் தனது பெரும்பான்மையினக் கூட்டமைப்பின் செல்வாக்கோடு மட்டும் அரசமைப்பை மாற்றிக்கொள்ளக்கூடிய பெரும்பான்மைப் பலத்தை அரசுத் தரப்பு ஈட்டுமானால் -

அது, இத்தீவில் அனைத்து சிறுபான்மை இனங்களினதும் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்துக்கு வேட்டுவைக்கும் விதத்திலான ஏற்பாடுகளை ஒருதலைப்பட்சமாக அந்த அரசு கொண்டுவந்துவிடும் ஆபத்தை ஏற்படுத்திவிடும். அது, சிறுபான்மை இனங்கள் அனைத்துக்குமே பெரும் விபரீதத்தை உருவாக்கிவிடும்.

ஆகவே, இந்த ஆட்சித் தரப்புக்குத் தனித்து, தன்னிஷ்டப்படி அரசமைப்பை மாற்றும் அதிகாரம் - செல்வாக்கு - ஒருதலைப்பட்சமாகக் கிட்டாமல் பார்த்துக்கொள்வது சிறுபான்மை மக்களின் கடமையாக இருக்கின்றது.

# ஆஸி.யில் புலிகளுக்கு நிதி வழங்கிய குற்றத்தை ஒப்புக்கொண்ட மூன்று ஈழத்தமிழர்கள் விடுவிப்பு

சிட்னி, ஏப்.01

விடுதலைப் புலிகளுக்கு நிதியுதவி வழங்கிய குற்றச்சாட்டின் கீழ் 2007இல் கைது செய்யப்பட்ட- ஆஸ்திரேலிய வாசிகளான - மூன்று இலங்கைத் தமிழர்களை ஆஸ்திரேலிய உயர் நீதிமன்றம் நேற்று விடுதலை செய்துள்ளது.

விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு நிதி வழங்கிய குற்றச்சாட்டை அவர்கள் ஒப்புக்கொண்ட பின்னரும், நன்னடத்தைச் செயற்பாட்டிற்கான அவர்களின் உறுதியை ஏற்றுக்கொண்டு நீதிமன்றம் அவர்களை விடுவித்தது.

ஆஸ்திரேலியாவில் உள்ள ஒரு தொண்டு நிறுவனத்தின் பெயரைப் பயன்படுத்தியே நிதி சேகரிக்கப்பட்டு தமிழ்ப் புலிகளுக்கு அனுப்பப்பட்டது என்று நீதிமன்றுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

குற்றஞ்சாட்டப்பட்டவர்களுள் ஒருவர் இலத்திரனியல் கருவிகளைப் புலிகள் இயக்கத்துக்கு அனுப்பி வைத்தமையை ஒப்புக்கொண்டார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் மூவரும் இலங்கையின் வடபகுதியில் உள்ள தமிழர்களுக்கு உதவும் எண்ணத்துடனேயே இந்த நிதியை வழங்கியிருக்கலாம் என்றும் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. ஆறுமுகன் ரஜீவன் (வயது - 44), ஆரூரன் விநாயகமூர்த்தி (வயது -35), சிவராஜா யாதவன் (வயது - 39) ஆகிய மூவரும் 2002 முதல் 2005 வரையான காலப்பகுதியில் விடுதலைப் புலிகளுக்கு நிதிவழங்கிய குற்றத்தை ஒப்புக்கொண்ட பின்னர் அவர்களை நன்னடத்தைப் பிணையில் செல்வதற்கு நீதிமன்றம் அனுமதித்தது.

மூவரும் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்பதை ஏற்றுக்கொண்ட நீதிவான் போல் கொக்லான், 'விடுதலைப் புலிகள்' பயங்கரவாத அமைப்பு எனக் கருதப்படுகின்றமை தெரிந்தும் அதற்கு இவர்கள் உதவிசெய்தனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், இவர்கள் இலங்கையின் வடபகுதியிலுள்ள தமிழ் சமூகத்திற்கு உதவும் விருப்பத்திலேயே இவ்வாறு செயற்பட்டிருக்கலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

''உங்களது நடவடிக்கைகள் முற்றுமுழுதாக மனிதாபிமான நோக்கம் கொண்டவை எனத் தெரிவிக்க மாட்டேன். எனினும் நீங்கள் பயங்கரவாத செயற்பாட்டிற்கு உதவுவதற்காக இதனைச் செய்யவில்லை எனக் கருதுகிறேன்'' - என்றும் நீதிவான் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்தவேண்டிய அவசியம் ஆஸ்திரேலியாவுக்கு உள்ளமையையும் சுட்டிக்காட்டிய நீதிவான் குறிப்பிட்ட மூவரும் நிதி திரட்டிய காலத்தில் இலங்கையில் யுத்தநிறுத்தம் நடைமுறையில் இருந்தமையைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.(ஒ-சி)

# பொன்சேகாவின் உண்மை நிலையை அறிய பத்திரிகையாளர்களை அனுமதியுங்கள்!

## அவரது மனைவி அரசிடம் மன்றாட்டம்

கொழும்பு,ஏப்.1

ஜெனரல் சரத் பொன்சேகாவின் உடல்நிலை தொடர்பான உண்மை நிலையைக் கண்டறிவதற்காக அவர் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு ஊடகவியலாளர்கள் செல்வதற்கு அரசு அனுமதி வழங்கவேண்டும் என்று அவரது பாரியார் அனோமா பொன்சேகா அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொன்சேகாவின் இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

எனது கணவரின் உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. பேசுவதற்குச் சிரமப்படுகின்றார். பத்து வார்த்தைகள் கூறினால் அவற்றுள் ஒன்றுதான் தெளிவாக இருக்கின்றது. அவரது நுரையீரலில் சளி பிடித்திருக்கின்றது.

ஆனால், அவர் நல்ல தேகாரோக்கியத்துடன் இருக்கின்றார் என்று இராணுவப் பேச்சாளர் கூறுகின்றார். விசேட வைத்திய நிபுணர் எனது கணவரின் உடல்நிலையைச் சோதித்துப் பார்த்தார் என்று அரசு கூறுகின்றது. கடற்படை வைத்தியர் ஒருவர்தான் சோதித்துப் பார்த்துள்ளார்.

எனது கணவரின் நுரையீரலில் சளி எதுவும் இல்லை என்று அவரைப் பரிசோதித்துப் பார்த்த அந்த வைத்தியர் கூறியுள்ளார். ஆனால், சளி இருப்பதைத் தன்னால் உணரமுடிகிறது என்றும் அதனால் பேச முடியாதுள்ளது என்றும் எனது கணவர் கூறுகின்றார்.

எனது கணவர் மாதத்திற்கு ஒரு தடவை உடலைப் பரிசோதித்துக் கொண்டு வந்தார். அவ்வாறு செய்யும்படியே வைத்தியர்களும் ஆலோசனை வழங்கியிருந்தனர். ஆனால், இப்போது அந்தப் பரிசோதனை எதுவும் இல்லை.

நல்ல சுவாசம் தேவை என்று வைத்தியர்கள் கூறினர். அதற்காகவே நாம் காற்றோட்டமுள்ள சுகாதார சூழலை ஏற்படுத்திக் கொடுக்குமாறு அரசிடம் கோரினோம்.

நான் தினமும் எனது கணவரைப் பார்த்துவிட்டு வருவதால் அவரது உண்மைநிலை என்னவென்று எனக்குத் தெரியும். ஆனால், அரசு அவர் நல்ல தேகாரோக்கியத்துடன் இருக்கிறார் என்று சொல்கிறது. இதன் உண்மைத் தன்மையை அறிய அரசு ஊடகங்களுக்கு அனுமதி வழங்கவேண்டும். - என்றார். (அ-சி)

## வரதராஜப்பெருமாள் தமது ஆதரவாளருடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.1

வடக்கு-கிழக்கு முன்னாள் முதலமைச்சர் அ. வரதராஜப்பெருமாள் நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

வரதர் தமது கட்சி முக்கியஸ்தர்கள், உறுப்பினர்களுடன் குடாநாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்து கலந்துரையாடியுள்ளார் என்றும், தேர்தல் பிரசார நடவடிக்கைகள் குறித்தும் விரிவாகக் கேட்டறிந்து கொண்டார் என்றும் பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ். அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கட்சி அலுவலகத்தில் நேற்று ஆதரவாளர்கள், பொதுமக்களுடனும் வரதராஜப்பெருமாள் கலந்துரையாடி, அவர்களின் கருத்துக்களையும் அறிந்து கொண்டார்.

இன்றும் அவர் பல்வேறு தரப்பினரைச் சந்திக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று கட்சிப்பிரமுகர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (ஒ)

## நாளை

பங்குனி 19 02.04.2010
வெள்ளிக்கிழமை

| | |
|---|---|
| திதி | : சதுர்த்தி பி.இ. 4.05 வரை |
| நட்சத்திரம் | : விசாகம் மு.இ.09.12 வரை |
| சுபநேரம் | : 06.11-07.41 வரை |
| ராகுகாலம் | : 10.41-12.11 வரை |



தந்தை செல்வாவின் 112 ஆவது பிறந்த தினமான நேற்று யாழ்.நகரில் உள்ள நினைவுச் சதுக்கத்தில் அவரது சிலைக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியபோது எடுக்கப்பட்ட (படம் : சுகந்தன்)

20 வருடங்களின் பின்னர்

# குர்ஆன் மதரஷா ஆரம்பப் பாடசாலை யாழ். நாவலர் வீதியில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.1

கடந்த இருபது வருடங்களின் பின்னர் யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள குர்ஆன் மதரஷா ஆரம்பப் பாடசாலை கடந்த சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இப்பாடசாலையில் முன்னாள் அதிபர் ஷகாப்தீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முஸ்லிம் கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் வை.எல்.எம். நவவியும் சிறப்பு விருந்தினர்களாக இலங்கை ஐ.ஐ.ஆ.ஒ. நிறுவனப் பணிப்பாளர் எஸ்.எல்.நவ்பர், இலங்கை ''வாமி'' நிறுவனப் பணிப்பாளர் ஓமார் இட்ரீஸ், ''ஸபா'' நிறுவனப் பணிப்பாளர் எம்.எஸ்.எம். ரசீட், ''ஸபா'' நிறுவனப் பதில் பணிப்பாளர் எம்.எஸ்.எம். ஸவ்பர் மற்றும் யாழ். மாநகர மேயர் யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர்கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய மாநகர மேயர் யோ. பற்குணராசா தெரிவிக்கையில் :-

கடந்த காலங்களில் நிகழ்ந்த கசப்பான சம்பவங்களை மறந்து ஒரு நாட்டு மக்களாக நாம் வாழ்வோம் எனக்குறிப்பிட்டார். அத்துடன் யாழ். குடாநாட்டுக்கு வருகைதரும் வெளிநாட்டு உயர்ஸ்தானிகர்களை முஸ்லிம் மக்கள் வாழும் இப்பிரதேசங்களுக்கும் அழைத்து வந்து இப்பிரதேசங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் உறுதி அளித்தார்.

இந்த நிகழ்வில் விருந்தினர்கள் பலரும் உரையாற்றியதோடு இப்பாடசாலைச் சிறார்களுக்கான இலவச புத்தகப் பைகளையும் வழங்கினர். (ஒ-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

மன்ற அங்கத்தவர் மு.சிறிச்சந்திரன்
(உரிமையாளர் தமயந்தி சில்க்) அவர்களது தாயார்

**திருமதி முத்தையா செல்லாச்சி**

29.03.2010 இல் காலமானார். அன்னாரின்
மறைவிற்கு மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கிறது.

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.**

(சி/566328)

## எங்கள் நெஞ்சுருகும் அப்பாவின் முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 16 ★ 08 ★ 1944



ஆண்டவன் அடியில் 14 ★ 03 ★ 2009

### அமரர் கு.நாகநாதன் கந்தசாமி

(ஓய்வு பெற்ற கிராம அலுவலர், நயினாதீவு)

ஆண்டொன்று ஆனது அப்பாவின் அன்பான திருவதனம் மறைந்திங்கு
இன்னும் ஆறவில்லை எம் துயரம், அருகிருந்து ஆறுதல் பல தந்து
அன்பாகப் பாடம் பல சொல்லி ஆசையாய் பண்பாக வளர்த்தீர்கள் - அப்பா
சுற்றத்தார் சூழ்ந்திருந்து தேறுதல் தந்தாலும் ஆறவில்லை அப்பா எம் உள்ளம்
அம்மாவின் துன்பமதைப் பார்த்திட மனம் பொறுக்கவில்லை அப்பா
உங்கள் உடன் பிறப்புக்கள் துன்பக்கடலலையில் நீந்துவதைப் பார்க்க
கண்ணீர் உதிர்ந்து கதிகலங்கி நிற்கின்றேன் அப்பா
மீண்டும் பிறப்பு உண்டேல் எங்கள் தலைவனாய் பிறந்திட வேண்டுமென்று
செம்மணத்து ஐம்புலத்து
வீரகத்தி விநாயகனை வேண்டுகின்றேன்.

நயினை அம்பாளின் பாதக் கமலமதில் வீற்றிருந்து நாம் வாழ
நல்லருளைத் தந்து வழி காட்டிடுவீர்கள் அப்பா!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(சி/562665)

குடும்பத்தினர்,
க.தாட்சாயினி (மகள்).

## Personal Class

தரம் 1-A/L வரையான மாணவர்களுக்கு English Personal Class உம் Spoken with Grammar கற்கவிரும்பும் மாணவர்களுக்கும் வீடுகளில் வந்து கற்பித்து கொடுக்கப்படும் (அனுமதி மட்டுப்படுத்தப்பட்டவை).

தொடர்பு: ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். T.P.: 0778716113

## தவறிவிட்டது

செல்வமதி மலர்நாயகி என்பவரது தேசிய அ.அட்டை (418340851v), விசேட அ.அட்டை மற்றும் முக்கிய ஆவணங்கள் என்பன 26.03.2010 அன்று யாழ்.நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

**T.P.: 0789149157**

## லொறிச் சாரதி தேவை

உள்ளூரில் பொருள்கள் டெலிவரி செய்வதற்கு லொறிச் சாரதிதேவை. சாரதி அனுமதிப்பத்திரத்துடன் நேரில் வரவும் (வடமராட்சியில் வசிப்பவர்கள் மட்டும்)

**ஜமுனா எலெக்ரோனிக்ஸ்,**
*299, யாழ்.வீதி, நெல்லியடி.*
*T.P.: 226 2150,*
*0777422604*

## ILTS

### யாழில்

பலரின் விருப்பத்திற்கமைய
(போக்குவரத்து வசதி)
வகுப்புக்கள் நடைபெறும்
இடத்தை K.K.S. Road
கொக்குவிலில் இருந்து 216,
நாவலர் வீதி, IDM இற்கு
மாற்றியுள்ளோம்
என்பதையும் ஏப்ரல் 3ஆம்,
4ஆம் திகதிகளில் 9 மணிக்கு
வகுப்புக்களுக்கு பதிவு
செய்து கொள்ளலாம்
என்பதையும்
அறியத்தருகிறோம்.

(96244)

**T.P.: 0776022546**

## நூற்றாண்டு விழா (1910-2010)

*யா/ மகாஜனக் கல்லூரி-தெல்லிப்பழை*

### வீரர்களின் 10ஆவது துடுப்பாட்டப் போர்

மகாஜனா V ஸ்கந்தா

இடம் : யா/ மகாஜனக் கல்லூரி மைதானம்
காலம் : 02.04.2010 வெள்ளி காலை 8.30
03.04.2010 சனி காலை 8.30

தலைமை வகிப்போர்:
திருமதி சிவமலர் அனந்தசயனன் (அதிபர், யா/ மகாஜன கல்லூரி)
ஆறு. திருமுருகன் (அதிபர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

பிரதம விருந்தினர் : ஏ.கோபாலகிருஷ்ணன்
(மக்கள் வங்கி ஓய்வுபெற்ற முகாமையாளர்) (மகாஜனன்)

சிறப்பு விருந்தினர் : பொறியியலாளர் எஸ்.சிறிஸ்கந்தராஜா
பிரதம பொறியியலாளர் ஸ்பிறிங் ஜெல் ஹோம்ஸ் (ஸ்கந்தாவின் மைந்தன்)
திரு.என்.தனபாலசிங்கம் (அதிபர், யா/ உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம் ஆனைக்கோட்டை) (மகாஜனன்)

### நாயகர்களின் துடுப்பாட்டப் போர்

இடம் : யா/ மகாஜன கல்லூரி மைதானம்
காலம்: 04.04.2010 ஞாயிறு காலை 8.30

மகாஜனா V ஸ்கந்தா

பிரதம விருந்தினர்: திரு.V. ராஜேந்திரன் (மகாஜனன்)

சிறப்பு விருந்தினர்: திரு.K.சிவாஜி (ஓய்வுபெற்ற அதிபர் யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்)

அனைவரும் வருகை தந்து எமது பழைய மாணவர்களை ஊக்குவிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

யா/ மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.

(சி/566317)

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
சுன்னாகம்.

## மரண அறிவித்தல்



### *இராமர் செல்லையா*

தில்லையம்பதி, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட இராமர் செல்லையா நேற்று (31.03.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் நடேஸ்வரியின் அன்புக் கணவராவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(96260)

தகவல்:
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



எம் நெஞ்சமதில்
21.06.1934

எம் நெஞ்சகலாத் தீபமாய்
02.03.2010

நேற்றுவரை எம் உறவில் கலந்து - இன்று
எம் உயிரினிலே நிழலாகிய உத்தம நல்லாசிரியர்

### உயர்திரு. சுப்பையா நடராஜன்

பாசத்தின் இலக்கணமான எங்கள் அப்பா - எம்மை
அன்போடும் பண்போடும் வளர்த்தெடுத்து மகிழ்ந்தீரப்பா - இவ்
வையத்தில் உயர்வாக வாழ வழி வகுத்தீரப்பா
ஆயிரம் உறவுகள் இருந்தும் என்னப்பா - இவ்
உலகில் அப்பா போல் யாருமே இல்லையப்பா....
அன்பாலும் பண்பாலும் எம்மை மட்டுமன்றி - உயர்
நல்பல மாணவ மணிகளை உருவாக்கிய நல்லாசானே
ஏன் சென்றீர் எம்மைவிட்டு சடுதியாக - நீங்கள்
சென்ற முகவரி இல்லாமல் தவிக்குதப்பா - எம்மனம்
மாதமொன்று ஆனதப்பா எம்மை நீங்கள் தனிமையில் - விட்டுச்சென்று
தாங்க முடியவில்லை - அப்பா உங்கள் பிரிவு - நாம்
இனி காண முடியாதா எங்கள் அன்பு அப்பாவை ??? - எம்
நினைவெல்லாம் உங்கள் நின் நிழலுருவாய் -
நீக்கமற வீற்றிருக்கும் அப்பா - உங்கள்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

" திருத்தணிகை"
மடத்தடி வீதி, சாவகச்சேரி.

(96255)

அன்பு மனைவி,
பிள்ளைகள்.

## ஓராண்டு நினைவினிலே...

தோற்றம்
01 ★ 10 ★ 1940



மறைவு
12 ★ 04 ★ 2009

### அமரர் சின்னையா புலேந்திரன்

திதி: திருதியை 01.04.2010

அப்பா! அப்பா! என்றழைத்த எமக்கு
அன்பு மொழி பேசியவரே
நிழலாய் இருந்து எங்களை
வழிகாட்டிய எம் தெய்வமே!
இன்று நிழற்படமாய் போனதெங்கே?
ஆண்டொன்று சென்றாலும்....
ஆறுதில்லை எங்கள் மனம்!
எம்மை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவினிலே
பின் தொடருமே! எங்கள் மனம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கும்...

(96256)

*"ரஜனிமஹால்",*
*புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.*

மனைவி,
மகன்மார், மகள்,
மருமகள், பேரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவன் கபிலநாத் கொலையுடன் தொடர்புபட்ட குற்றவாளிகள் சட்டத்தின்முன் நிறுத்தப்படவேண்டும்

## நீதியான விசாரணை தேவையென வேட்பாளர் ஈ. சரவணபவன் அறிக்கை

சாவகச்சேரியில் வர்த்தகர் ஒருவரின் மகனான சிறுவன் கடத்தப்பட்டு, கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சூத்திரதாரிகளைக் கண்டுபிடித்துச் சட்டத்தின்முன் நிறுத்தவேண்டும் என்று இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளரும், 'உதயன்' நிறுவனத்தின் நிர்வாக இயக்குநருமான ஈ.சரவணபவன்.

மேற்படி சம்பவம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

சாவகச்சேரியில் கடந்த் சுமார் இரு வாரங்களுக்கு முன்னர் கடத்தப்பட்ட பாடசாலைச் சிறுவனான திருச்செல்வம் கபிலநாத் என்பவர் கடத்தல்காரர்களால் ஈவிரக்கமற்ற முறையில் படுகொலை செய்யப்பட்டு, புதைக்கப்பட்டிருக்கின் றமை இரத்தத்தை உறையவைக்கின்றது; இந்தச் செயல் மிகவும் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

வர்த்தகரின் மகனைக் கடத்திய கடத்தல்காரர்கள் தொலைபேசிமூலம் வர்த்தகரிடம் தொடர்புகொண்டு மூன்று கோடி ரூபா பணத்தை வழங்கினால் கபில்நாத்தை விடுவதாகத் தெரிவித்துள்ளனர்.

பணத்திற்காக பச்சிளம் பாலகர்களைக் கூடக் கொடூரமாகக் கொலை செய்யும் வக்கிர மனோபாவம் கொண்டவர்கள் தமிழர் தாயகத்திலும் இருக்கின்றார்கள் என்பதை நினைக்கும் போது மிகவும் வேதனையாகவும், அவமானமாகவும் இருக்கின்றது.

தமிழ்மக்கள் நிம்மதியாகவும் சுபீட்சமாகவும் சுதந்திரமாகவும் வாழ வேண்டும் என்பதற்காகத் தங்களையே அர்ப்பணித்த புனிதர்கள் பிறந்த மண்ணில், சுயநலத்திற்காக- பணத்திற்காக- சிறு பிள்ளைகளையே கொலை செய்பவர்களும் பிறந்திருக்கின்றார்கள் என்பது எமது இனத்தின் சாபக்கேடுதான்.

வன்முறைகள் ஓய்ந்து, யாழ். மக்கள் ஓரளவு அமைதிப்பெருமூச்சு விடத் தொடங்கியிருக்கும் நேரத்தில், இந்தச் சம்பவம் மீண்டும் பயப்பீதியில் உறைய வைத்திருக்கின்றது. இந்த நிலைமை இனியும் தொடரக் கூடாது. தமிழர் தாயகத்தில் கடத்தல்களுக்கும் கொலைகளுக்கும் முற்றுப் புள்ளியாக மாணவன் கபிலநாத் விளங்கட்டும். அநியாயமாக அப்பாவிகளைக் கொலை செய்வதை சம்பந்தப் பட்டவர்கள் இனியாவது கைவிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

அரசாங்கம் சுதந்திரமான முறையில் உரிய விசாரணைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். நேர்மையான - பக்கச்சார்பற்ற - முறையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, குற்றவாளிகள் இனங்காணப்பட்டு, சட்டத்தின்முன் நிறுத்தப்படுவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும். - என்று உள்ளது.

## ஆங்கிலப் போட்டிப் பரீட்சையில் யாழ்.மாணவர்கள் முன்னணியில்

இலங்கை மேல்நாட்டு இசை மற்றும் பேச்சு நிறுவனம் (Institute of Western Music and Speech) இவ்வாண்டு ஜனவரிமாதம் நடத்திய பரீட்சைகளில் யாழ்.மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.

சிவாம்சன் சிவகோணேசனும் எஸ்.ஸி.கிறிஷேலும் ஆரம்ப ஆங்கிலப் பேச்சுப் பரீட்சையில் நூற்றுக்கு நூறு புள்ளிகள் பெற்றுள்ளார்கள்.

ஆரபி யோகநாயகம் இதே பரீட்சையில் இலங்கையில் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளார். அத்துடன் ஆரம்ப ஆங்கில எழுத்துப் பரீட்சையில் நூற்றுக்கு நூறு புள்ளிகள் எழுத்துள்ளார். இவர்கள் சுண்டிக்குளியைச் சேர்ந்த திருமதி எஸ்.கதிர்காமரின் மாணவர்கள் ஆவர். (அ)

## ஏழாலையில் நண்பியின் நகைகளை திருடிய பெண்ணுக்கு விளக்கமறியல்

வலி வடக்கு,ஏப்.1

ஏழாலையில் நண்பியின் வீட்டில் தங்கியிருந்து சுமார் நான்கு லட்சம் ரூபா பெறுமதியான தாலிக்கொடி, சங்கிலி உட்பட ஏனைய தங்க நகைகளை அபகரித்துச் சென்ற மூன்று பிள்ளைகளின் தாயை விளக்க மறியலில் வைக்குமாறு மல்லாகம் மாவட்ட நீதிபதியினால் கட்டளையிடப்பட்டுள்ளது.

அபகரித்த நகைகளுடன் அவரது வசிப்பிடமான கண்டிக்குச் செல்ல பஸ்ஸில் பயணம் செய்த வேளையில் சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்து இப்பெண் ஓமந்தை சோதனை நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். சுன்னாகத்திற்கு அழைத்து வரப்பட்ட குறிப்பிட்ட பெண் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

தொடர்ந்து மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட அந்தப் பெண்ணை நீதிபதி விளக்க மறியலில் இரு வாரகாலம் வைக்குமாறு பணித்தார். (ஒ-86)

## கல்விமாணி விரிவுரைகள்

யாழ்ப்பாணம்,ஏப்.1

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விமாணி மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆரம்பமாகி நடைபெறும் எனத் தேசிய கல்வி நிறுவகத்தின் இணைப்பாளர் எஸ்.ஆர்.சத்தியேந்திரம் பிள்ளை அறிவித்துள்ளார். (ஒ)

## பாடசாலைகளுக்கு தொலைக்காட்சிகள்!

யாழ்ப்பாணம்,ஏப்.1

யாழ்.குடாநாட்டில் உள்ள பதின் மூன்று பாடசாலைகளுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இந்தத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி நாளை வெள்ளிக்கிழமை சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு விநியோகிக்கவுள்ளதாக யாழ். மேலதிக கல்விப் பணிப்பாளர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கென கொழும்பில் இருந்து தொலைக்காட்சிப் பெட்டிகள் எடுத்து வரப்பட்டுள்ளன. (ஒ-224)

## பொதுசன உதவிப்பணம் இன்று முதல் பெறலாம்

யாழ்ப்பாணம்,ஏப்.1

வலிகாமம் கிழக்கு, கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இயங்கும் தபாலகங்கள், உபதபாலகங்கள் மூலம்மாக வழங்கப்பட்டு வரும் பொதுசன மாதாந்த உதவிப்பணம், நோய் உதவிக் கொடுப்பனவுகள் என்பவை சித்திரைப்புத்தாண்டை முன்னிட்டு இன்று முதல் வழங்கப்படவுள்ளது என்று கோப்பாய் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஒ)

## யாழ்.நகர மக்களுக்கு விரைவில் சுடச்சுட சுவையான ஒடியல் கூழ்!

### பனை அபிவிருத்திச்சபை வழங்கும்

யாழ்ப்பாணம், ஏப்.1

யாழ் நகரில் பனை அபிவிருத்திச்சபை பனம் ஒடியல் கூழை விரைவில் சுடச்சுட நுகர்வோருக்கு விநியோகிக்கத் தயாராகி வருகிறது.

ஒடியல் கூழை தயாரித்து விநியோகிப்பதற்கு வசதியான இடத்தை தேடி வருகின்றனர். பனை அபிவிருத்திச்சபையினர் சைவ, அசைவ ஒடியல் கூழ் விரைவில் யாழ் மக்கள் குடிக்க முடியும் என்றும் குடாநாட்டுக்கு நாளாந்தம் படையெடுத்து வரும் சுற்றுலாப்பயணிகளும் இந்த ஒடியல் கூழை மிகவும் விருப்பத்துடன் ரசித்துக் குடிக்கும் வாய்ப்பு ஏற்படும் என்றும் பனை அபிவிருத்திச் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முன்னர் பனை அபிவிருத்தி சபையினர் தயாரித்த இந்த ஒடிய்ல் கூழுக்கு பெரும் கிராக்கியும் வரவேற்பும் கிடைத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## முன்பள்ளிச் சிறார்களின் கண்காட்சி

நல்லூர்,ஏப்.1

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற முன்பள்ளிச் சிறார்களின் கண்காட்சி இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாநகராட்சி மன்ற முன்பள்ளியில் நடைபெறும்.

இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிவரை நடைபெறும் இக்கண்காட்சியை யாழ்.மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா திறந்து வைக்கவுள்ளார். (ஒ-111)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## தையல் இயந்திரங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.1

குடும்பத் தலைவரை இழந்த இரு குடும்பங்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

சமூக சேவைகள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்ட தையல் இயந்திரங்கள் நாவற்குழி தெற்கு, நாவற்குழி வீடமைப்புத் திட்டம் ஆகிய இடங்களைச் சேர்ந்த இரு பெண்களுக்கு வழங்கப்பட்டன. (207)

## மருதனார்மடம் சந்தைக்கு எடுத்துவரும் பொருள்களின் நிறுவையில் மோசடி

### விவசாயிகள் முறைப்பாடு தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.1

மருதனார்மடம் சந்தையில் விவசாய உற்பத்திக்கான விற்பனைக்குக் கொண்டு செல்லும் விவசாயிகள் பல்வேறு இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றனர். வியாபாரிகள் பொருள்களை அதிகளவு கழிவுக்குட்படுத்துவதுடன் விலையிலும் ஏமாற்றுவதாகக் கூறப்படுகின்றது.

அதேசமயம் சந்தையில் மேற்கொள்ளப்படும் நிறுவையிலும் விவசாயிகள் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.


இதனால் விவசாயத் தொழில் முயற்சிகளில் நஷ்டம் ஏற்படுவதாக விவசாயிகள் முறையீடு செய்கின்றனர். இவ்விடயத்தில் செயலக அலுவலர்கள், பிரதேசசபை அலுவலர்கள் உரிய நடவடிக்கை எடுத்து நிறையைச் சரியாக மதிப்பிட்டுக் கூறுவதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்ய வேண்டும் என அவர்கள் எதிர்பார்க்கின்றனர். (ஒ-267)

## 'மூலதன சந்தையில் முதலீடு' சனியன்று கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஏப்.1

யாழ்ப்பாண முகாமையாளர் சங்கம் நடத்தும் வழமையான கருத்தரங்கு வரிசையில் நாளை மறுதினம் சனிக்கிழமை நண்பகல் 3 மணிக்கு '' மூலதன சந்தையில் முதலீடு'' என்ற தலைப்பில் கருத்துப் பரிமாறல் நடைபெறவிருக்கின்றது.

நல்லூர் 'யூரோ'வில் மாநாட்டு மண்டபத்தில் சனிக்கிழமை நடைபெறவிருக்கும் இந்நிகழ்வில் நாமல் மூலதன முகாமைத்துவ நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி எஸ்.ஜெயவர்மன் மேற்படி தலைப்பில் உரையாற்றுவார்.



சேர் பொன்.இராமநாதன் ஞாபகார்த்த நினைவுப்பேருரை நேற்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்த நிகழ்வில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தலைமை உரை நிகழ்த்துவதை முதற்படத்திலும், தமிழ்நாடு தமிழ்ப் பல்கலைக்கழக தத்துவ மையத்தின் இயக்குநர், மெய்யியல் பேராசிரியர் கணபதி பாஸ்கரன் நினைவுப்பேருரை நிகழ்த்துவதை இரண்டா வது படத்திலும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதை மூன்றாவது படத்திலும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்-சுகந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு ஒழிப்பில் படையினர்

கோப்பாய், ஏப்.1

கோப்பாய், நீர்வேலிப் பிரதேசங்களில் படைத்தரப்பினர் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வுப் செயற்பாட்டை கடந்த திங்கட் கிழமை தொடக்கம் ஆரம்பித்துள்ளனர்.

பிரதான வீதிகள் மற்றும் உள் சிறுவீதிகள் அனைத்திலும் ஒலி பெருக்கிகள் மூலம் டெங்கு ஒளிப்புப் பற்றி பிரசாரம் செய்தும் மற்றும் பிரசுரங்கள் ஒட்டியும் விநியோகிக்கும் படையினர் விழிப்புணர்வுச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் வீடு வீடாகச் சென்றும் பிரசாரத்தில் ஈடு பட்டுவருகின்றனர்.

(ஓ-72)


## உழவு இயந்திரம் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள MASSEY FERGUSON MF 240 உழவு இயந்திரம் 37 ஸ்ரீ 4xxx (Brand New) உடன் விற்பனைக்கு உண்டு. தொ.பே: 0775101092

## விற்பனைக்கு

கன்னிசினை பசு, கறவைப்பசு, கன்று ஈன்று சிலநாள்கள் உள்ள பசு, பால் கூடிய தரமான 30 பசு மாடுகளும் கன்றுக் குட்டிகளும் (03.04.2010) சனிக்கிழமை 8.00 AM - 5.00 PM வரை விற்பனைக்குண்டு. தொ.பே: 0774064031

தொடர்பு : இ.பஞ்சலிங்கம் , பண்டாரக்குள பிள்ளையார் கோயில், அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம், நல்லூர்.

## விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் உள்ள மாருதிக் கார் விற்பனைக்குண்டு.

பார்வையிடும் நேரம் பி.ப 2மணிக்குப் பின் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல: 0777736607

859/18,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (96202)

## பாராட்டி வாழ்த்துகின்றேன்

### தில்லைநாயகம் ஜெரிமில்ரன்

(ஆலோசகர்-HNB ASSURANCE JAFFNA )



யாழ்.பல்கலைக்கழத்தில் நடைபெற்ற 25 ஆவது பட்டமளிப்பு விழாவில் (28.03.2010) ஞாயிற்றுக்கிழமை நுண்கலைமாணி (B.F.A) பட்டம் பெற்றமைக்காக அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துவதுடன், மேலும் கல்வித்துறையிலும், புரியும் தொழில் துறையிலும் வளர்ச்சிபெற இறைவனை வேண்டுகின்றேன்.

வாழ்த்துபவர்:
திரு.பே.அலன் கியூமர்
(AGFM) HNB ASSURANCE JAFFNA.

(சி/566313)


# சத்தியத்தின் பாதையில் சென்றால் வெற்றி நிச்சயம்

''ஆத்மீக போராட்டத்தின் மூன்று படிகளில் மனிதன் வாழ்கின்றான். சாதாரண மனிதன் - ஆத்மீகத்தை அடைய முயற்சிப்பவன்- ஆண்டவனோடு ஆண்டவனாக ஒன்றுபட்டிணைந்தவன். முதலில் உலகம், ஜீவராசிகள், ஆண்டவன் என்னும் மூலவஸ்துக்கள் மூன்றுள. பின் அவை ஜீவராசிகள் - ஆண்டவன் என இரண்டாகின்றன. இறுதியில் ஒன்றாகி இறைவன் மட்டுமே எஞ்சி நிற்கின்றான்''.

ஒரு சிறு கண்ணாடியின் மையத்தில் கதிரவனின் கிரணங்களை குவியச்செய்வதால் நெருப்புண்டாகின்றது. இவ்வாறு ஆண்டவனது அருட்கிரணங்களை குவியச்செய்வதால் ஆத்மஞான ஒளி பெறுகின்றது''

''ஆண்டவன் துக்கத்தை நியமித்துள்ளான். ஏனெனில், துக்கமின்றேல் மனிதன் ஆண்டவனைத்தேட மாட்டான். இது ஒரு மருந்தைத்தரும் வைத்தியன் தன் மருந்து தொழிற்படுதற்கு வேண்டிய உணவு வகைகளையும் அனுமானத்தையும் பத்தியத்தையும் வரையறுப்பதற்குச் சமானமாகும்''.

''தியானிக்கும் போது உதடும், நாவும் அசையக் கூடாது. தியானம் மனத்தாற் செய்யப்பட வேண்டும்.சத்தியத்தின் பாதையில் நீங்கள் சென்றால் தோல்விகள் தோல்யாகத் தோன்றாது-துன்பம் துன்பமாகத் தோன்றாது''.

''உன் மனத்தை யாராவது நோக வைத்தால் கோபத்திற்கு இடம் அளிக்காதே . விவேகத்திற்கும் பகுத்தறிவுக்கும் முதலாம் விரோதி கோபமாகும். தனித்த இடத்திலிருந்துகொண்டு சிறிதுநேரம் ஆண்டவனைத் தொழுக! அல்லது உரத்த சத்தத்தில் ஆண்டவனைப்பற்றிய கீதங்களைப் பாடுக. அல்லது இவை இரண்டையும் செய்ய முடியா விட்டால் உனது படுக்கையை விரித்து நித்திரையைக் கொள்''.

''உனது சொந்த அனுபவமே உண்மைக்குரிய உனது உத்தரவாதமாகும். மற்றவர்கள் தங்கள் அனுபவத்தைக் கூறுவதைக்கேட்டு அதன்படி நடக்காதே, உன்னுடையதைப்போல வேறெதுவும் உண்மையாயிருக்காது. தைரியம், நம்பிக்கை, ஆர்வம் ஆகியவற்றை வளர்த்துக்கொள். இவை உனது லௌகீக ஆத்மீகத்துறைகளில் துணையாக இருக்கும்''.

''உலகிலே எங்குமுள்ள மனிதன் சஞ்சலத்தினாலும் தொல்லைகளினாலும் குழப்பப்பட்டுள்ளான். அந்த வேதனையை அதிகரிக்கச்செய்வது சரியா? கடல் ஏற்கெனவே கொந்தளித்துக் கொண்டிருக்கின்றது. அதன் மீது ஒரு சூறாவளியை உண்டாக்க உனக்கு மனம் ஏவுமா? முகத்திற்கு முகம் புன்னகையைப் பரப்புவதற்குப் பழகு. உனது சொந்தக் கஷ்ட, துன்பங்களின் கதைகளைக் கூறி ஒப்பாரிவிட்டு துக்கத்தில் சூழ்ந்துள்ள உலகை ஏன் மேலும் துக்க சாகரத்துள் ஆழ்த்துவான். ஆண்டவனின் நாமத்தைச் சொல்லி -ஆண்டவனின் உருவத்தை உள்ளத்தில் வகித்துச் சிந்தித்து உனது துக்கத்தைச் சாந்தப்படுத்து. உனது துக்கத்தை வெற்றிகொண்டு மற்றவர்களுக்கு உதாரணமாக விளங்குக''.



## சாயி சிந்தனை


## நாடாளுமன்றத் தேர்தல்-2010



மக்களுக்கு மாசற்ற பணியாற்றும்
எங்கள் ஆசிரியர்
கே.எஸ்.முத்துலிங்கத்திற்கே
எமது வாக்குகள்
மக்களின் நம்பிக்கையான உதயம்

X 6 தமிழர் விடுதலைக் கூட்டணி


## கண்ணீர்க் காணிக்கை

எமது பாடசாலையின் சக ஆசிரியர்
பெ.இ.அகிலநாயகம் அவர்களின் அன்பு மாமனார்
சுவாம்பிள்ளை மலக்கியாஸ்
அவர்கள் 26.03.2010 அன்று இறைவனடி சேர்ந்துள்ளார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ கைதடி சேது காவலர் வித்தியாலயம், கைதடி.

(96192)


# பாராளுமன்றத் தேர்தல் 2010 யாழ் மாவட்டம்



**மீளக்குடியமர இருக்கும் எமது மக்களுக்கு!**

1. கடந்த கால தமிழ்த்தலைமைகளின் தூரநோக்கற்ற சிந்தனையினால் விளைந்த போரும் அதன் அதன் பெறுதிகளும் சொந்தக் கிராமத்திலிருந்து தூக்கி தூர வீசியெறியப்பட்டவர்களில் நானும் ஒருவன் - உங்களில் ஒருவன் - போர்க்காலக் குழந்தை. கடந்த 20 வருடங்களாக வலி வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து வதிவிடம் தேடி உலகின் மூலை முடுக்கெல்லாம் அலைந்து, இடம் பெயர்வின் வலிகளையும் வேதனைகளையும், இடர்பாடுகளையும் சுமந்து நொந்தவன். இடம்பெயர்ந்தவர்களின் மனநிலையை அறிந்தவன் உங்களோடு இணைந்து நானும் எனது வீட்டுக்கு வர காத்திருப்பவன்.
2. மீளக்குடியமர்தலுக்கான தீர்வை வழங்கக் கூடிய வலிமை தற்போது மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களுக்கே உண்டு. ஜனாதிபதி அவர்களால் நேரடியாக தேர்தல் களத்தில் இறக்கப்பட்ட நேரடி வேட்பாளர் என்ற வகையில் அவருடன் நேரடியாகப் பேசி எனது மக்களை வலிவடக்கிலும் வன்னிப் பெருநிலப்பரப்பிலும் சகல வசதிகளுடனும் மீளக் குடியமர்த்தும் வல்லமை எனக்குண்டு.
3. வந்து போன தேர்தல்களிலெல்லாம் மீளக்குடியமர்வை அரசியலாக்கி மக்களின் மனதில் ஆசையை மூட்டி ஏமாற்றி விட்டு, பசப்பு வார்த்தைகளால் அடிப்படைப் பிரச்சினைக்கு அரசியல் சாயம் பூசும் சுயலாப அரசியலில் எனக்கு உடன்பாடில்லை. இனிவரும் தேர்தலில் 'மீளக்குடியமர்வு' சுயலாப அரசியலுக்கு பயன்படக் கூடாது என்ற அவாவில் உள்ளவன். இந்தத் தேர்தலுடன் 'மீளக்குடியமர்வு' முற்றாக செயல்ப்படுத்தப்பட வேண்டும் என்ற முடிவுடன் இருப்பவன்.
4. யாழ்ப்பாணக் குடா நாட்டிலும், வன்னிப் பெருநிலப் பரப்பிலும் உயர்பாதுகாப்பு வலயங்களின் பரப்பளவை சுருக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதோடு, மீண்டும் அங்கு குடியேறும் எனது மக்களுக்கு கல்வி மேம்பாடு, அபிவிருத்தி சுகாதார மேம்பாடு சகலவற்றுக்குமான முன்னுரிமையை வழங்குவேன்.
5. 20 ஆண்டு காலத்திற்கு முன்னர் எமது மக்கள் இடம்பெயரும் முன்னர் அனுபவித்த வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவேன். மீளக்குடியமரும்போது அடிப்படைத் தேவைகளான வதிவிடவசதி, சாலைகள் மேம்பாடு, சுயதொழில் முயற்சி ஊக்குவிப்பு, உற்பத்திப் பொருட்களின் சந்தைப்படுத்தல், புனித தலங்களின் புனரமைப்பு என்பவற்றின் மூலம் கலாச்சார விழுமியங்களையும் பாரம்பரிய அடையாளச் சின்னங்களையும் பாதுகாப்பேன்.
6. மலினப்படுத்தப்பட்ட ஆயுதக் கலாச்சாரத்தின் ஆபத்துக்களை நன்கு உணர்வேன். தலைவிரித்தாடும் ஆயுத கலாச்சாரத்தினால் சிவில் நிர்வாகம் 100% வினைத்திறனுடன் இயங்கவில்லை என்பதையும் தெளிர்ந்துணர்ந்தவன். எமது மக்கள் மீளக்குடியமரும் வலி வடக்கு, வன்னிப்பெரு நிலப்பரப்பு மாத்திரமல்லாமல் தமிழ் பேசும் மக்கள் வாழும் சகல பிரதேசத்திலும் சிவில் நிர்வாகத்தின் வினைத்திறனைக் குலைக்கும் வகையில் நிகழ்ந்துகொண்டிருக்கும் நேரடியான, மறைமுகமான ஆயுததாரிகளின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் முற்றுப்புள்ளி வைப்பதன் மூலம் எமது மக்களுக்கான சிவில் நிர்வாகத்தை முன்னெடுக்க உறுதி பூண்டுள்ளேன்.
7. வலிவடக்கிலிருந்து இடம்பெயர்ந்து தற்போது பல்வேறு இடங்களில் சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கும் என் இனிய உறவுகள் பற்றி சனாதிபதி அவர்களுடன் தனிப்பட்ட முறையில் அவரது நேரடி வேட்பாளர் என்ற ரீதியில் பேசிய போது எனது மக்களின் மீள்குடியேற்றம் துரிதப்படுத்தப்பட வேண்டும் என வற்புறுத்தி அழுத்தம் கொடுத்தேன். மக்களின் நீண்ட கால இடர்களை புரிந்துகொண்ட சனாதிபதி அவர்கள் மீளக்குடியேற்றத்தை துரிதப்படுத்துவதாக வாக்குறுதி அளித்துள்ளதுடன் அதற்கான அறிவிப்பையும் வெகுவிரைவில் வெளியிடவுள்ளார் என்பதை என் இனிய மக்களுக்கு அறியத்தருகிறேன்.

இப்படிக்கு
இ அங்கஜன்
அங்கஜன் இராமநாதன்

## அங்கஜன் இராமநாதன்

**Angajan Ramanathan** B.ENG(HON) MBA

www.angajanramanathan.com

X 1

இளமை-துடிப்பு-செயற்றிறன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேலணைப் பிரதேச செயலகப் பிரிவுல் புங்குடுதீவின் இறுப்பிட்டிப் பகுதியில் உள்ள மிகவும் பழமை வாய்ந்த பெருக்கு மரம் அமைந்துள்ள பகுதியினை சுற்றுலாப் பிரதேசமாக மாற்ற வேலணைப் பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. முதலாவது படத்தில் பெருக்கு மரத்தின் முழுமையான தோற்றத்தினையும், அதனைப் பார்வையிட வந்த மாணவர்களையும், இரண்டாவது படத்தில் உதவி அரச அதிபர் பெருக்கு மரத்தினைப் பார்வையிடுவதனையும், மூன்றாவது படத்தில் வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலனுடன், பிரதேச செயலக அலுவலர்கள் பெருக்கு மரத்தினை பார்வையிடுவதனையும் காணலாம். படங்கள்: லக்ஸ்மன்

# வேலணை-வங்களாவடி வீதியை போக்குவரத்துக்கு திறந்துவிடுக!

## பிரதேச மக்கள் வேண்டுகோள்

ஊர்காவற்றுறை.ஏப் 1

வேலணை-வங்களாவடி வீதியை பொதுமக்கள் போக்குவரத்துக்குத் திறந்து விடுமாறு இப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வேலணை-வங்களாவடி வீதி கடற்படையினரின் முகாம் ஊடாக செல்வதால் இவ்வீதியூடாக பொதுமக்கள் போக்குவரத்துக்கு கடந்த பல வருடங்களாக கடற்படையினர் தடைவிதித்துள்ளனர்.

எனினும் வங்களாவடிச் சந்தியிலே பல அரச திணைக்களங்கள், வங்கிகள் என்பன அமைந்துள்ளன. இதனால் சரவணை, புளியங்கூடல், வேலணை, ஊர்காவற்றுறை, நாரந்தனை பிரதேசங்களில் வசிப்பவர்கள் வங்களவடிச் சந்திக்கு செல்வதனால் மாற்றுப் பாதையூடாக பலமைல் சுற்றியே பயணிக்க வேண்டியுள்ளது.

எனவே சமாதான சூழல் நிலவிவரும் இவ்வேளையிலும்கூட குறித்த வீதி பொதுமக்கள் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படாதது குறித்து தீவுப் பகுதி மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

எனினும் குறித்த வீதியூடாக பாடசாலை மாணவர்கள் சென்று வருவதற்கு கடற்படையினர் அனுமதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-21)

# நடமாடும் வியாபாரிகள் குறித்து பொதுமக்களுக்கு எச்சரிக்கை

## கையில் கிடைப்பதை எடுத்துச்சென்று விடுவர்

கொழும்புத்துறை.ஏப் 1

கிராமங்களில் நடமாடும் வியாபாரங்களில் ஈடுபட்டுவருவோர் வசதியேற்படும் போது கையில் கிடைப்பதை அபகரித்துச் சென்றுவிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறானதொரு சம்பவம் அண்மையில் கொழும்புத்துறையில் நடை பெற்றுள்ளது.

சுடுதண்ணீர்ப் போத்தல்கள் மற்றும் மின்சார பாவனைப் பொருள்களைச் சுமந்தவாறு இப்பகுதிக்கு வந்து விற்பனையில் ஈடுபட்டிருந்தார் ஓர் இளைஞர்.

குறிப்பிட்ட ஒரு வீட்டுக்கு வந்த அவர் தனது பொருள்களைப் பரப்பி வைத்து விளம்பரப்படுத்தி விற்பனை செய்துவிட்டு மீண்டும் தமது பொருள்களை எடுத்துச் சென்றுவிட்டார்.

அவர் சென்று சிறிது நேரத்தில் வீட்டார் அழைப்பொன்றை மேற்கொள்வதற்காக கைத்தொலைபேசியைக் குறிப்பிட்ட இடத்தில் தேடியுள்ளனர். தொலைபேசி வைத்த இடத்தில் இருக்கவில்லை. அது மாயமாகியிருந்தது. வியாபாரி தொலைபேசிக்கு அருகில்தனது பொருள்களை வைத்து விற்பனைசெய்துவிட்டுதந்திரமாகக் கைத்தொலைபேசியையும் சேர்த்து எடுத்துச் சென்றமை தெரியவந்தது. (ஒ-135)

## வங்களாவடிச் சந்தி இலங்கை வங்கியில் சனியன்றும் சேவை

ஊர்காவற்றுறை.ஏப் 1

வங்களாவடிச் சந்தியில் அமைந்துள்ள இலங்கை வங்கிக் கிளையின் செயற்பாடுகள் சனிக்கிழமைக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

இதனால் தீவுப் பகுதியில் உள்ள வங்கியின் வாடிக்கையாளர் சனிக்கிழமை தோறும் வங்கிச் சேவையை பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது.

அதுமட்டுமன்றி புங்குடுதீவு, நயினாதீவு பிரதேசங்களில் உள்ள வாடிக்கையாளர் நலன் கருதி மாதத்திற்கொரு தடவை வங்கியின் நடமாடும் சேவையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (21)

## எள்ளு, பயறு விதைப்பதில் விவசாயிகள் ஆர்வம்

சுழிபுரம்.ஏப் 1

பொன்னாலை, சுழிபுரம் பகுதியிலுள்ள நெல் வயல்களில் அரிவு வெட்டைத் தொடர்ந்து எள்ளு, பயறு, சணல் ஆகிய சிறு தானியங்களை விதைக்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

அதிகமானோர் எள்ளு, பயறு வகைகளையே விதைத்து வருகின்றனர். (ஒ-28)

யாழ்ப்பாணச் செய்திகள்


# நாடாளுமன்றத் தேர்தல் - 2010

(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - TNA)



எங்கள் இனத்தின் குரலாக துணிந்து குரல் கொடுக்கக்கூடிய
தொழிலதிபர் ஈ.சரவணபவனை
நாடாளுமன்றத்துக்கு அனுப்புவோம்.

யாழ்.மக்களுக்கு 25 வருடங்களாக
உண்மையை உரைத்த உன்னதமானவரை
வெற்றிபெறச்செய்வோம்.

வீட்டுக்கு அருகே புள்ளடி இட்டு உங்கள் விருப்பு
வாக்கை ஈ.சரவணபவன் (இலக்கம் 6) இற்கு
வழங்குங்கள்.

வட்டுக்கோட்டை வாழ் மக்கள்.

X

இலங்கைத் தமிழரசுக் கட்சி

உதயன்
நிர்வாக இயக்குநர்
தொழிலதிபர்
ஈ.சரவணபவன்

1 2 3 4 5 6 7 8 9 10
11 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துகின்றோம்



திரு.திருமதி செல்லத்துரை கிருபராஜா
அவர்களின் புதல்வி
செல்வி சாரா டிவினா டிலோஜனா
அவர்கள் 28.03.2010 அன்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற 25ஆவது பட்டமளிப்பு விழாவில் விஞ்ஞான இளமாணி (B.Sc. First Class) பட்டம் பெற்றதையிட்டு இவரையும் இவரது பெற்றோர்களையும் பாராட்டுவதுடன், இவருடைய எதிர்காலம் சிறப்புற அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தெ.இ.திருச்சபை,
யாழ்.ஆதீனமிஷன் வைத்தியசாலைகள் சமூகம்.

(96222)

## வீடு வாடகைக்கு

யாழ்.மாநகர எல்லைக்குள் அத்தியடி புது வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு (கம்பனி அல்லது நிறுவனமொன்றுக்கு) வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: 0779218122 (96174)

## தவறிவிட்டது

மல்வம், உடுவில், சுன்னாகம் எனும் முகவரியுடைய மாணிக்கம் தவராசா என்பவருடைய தே.அ.அட்டை (622352885V) யாழ்.நகரில் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும். 0215100295, 0776407684

## මහජන සම්පත / மஹஜன சம்பத / Mahajana Sampatha

30.03.2010

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2223

வெற்றி எழுத்து: Q
வெற்றி எண்கள்: 5 7 5 5 2 7

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | | | | | | | | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | Q | 5 | 7 | 5 | 5 | 2 | 7 | ரூபா.13,865,368/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 5 | 7 | 5 | 5 | 2 | 7 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | | | 7 | 5 | 5 | 2 | 7 | ரூபா. 100,000/= | பரிசுகள் 12 |
| 3 பரிசுகள் | | | | 5 | 5 | 2 | 7 | ரூபா. 10,000/= | பரிசுகள் 126 |
| 4 பரிசுகள் | | | | | 5 | 2 | 7 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1244 |
| 5 பரிசுகள் | | | | | | 2 | 7 | ரூபா. 100/= | பரிசுகள் 12204 |
| 6 பரிசுகள் | | | | | | | 7 | ரூபா. 20/= | பரிசுகள் 120320 |
| இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு | | | | | | | | | |
| 7 பரிசுகள் | | 5 | 7 | 5 | 5 | 2 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 12 |
| 8 பரிசுகள் | | 5 | 7 | 5 | 5 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 124 |
| 9 பரிசுகள் | | 5 | 7 | 5 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1206 |
| 10 பரிசுகள் | | 5 | 7 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 12023 |
| 11 பரிசுகள் | Q | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 48192 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 11,260,390.00

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு Rs. 14,856,641.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk

அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும்

## குடிசன மதிப்பீட்டு தொடர்பான மாணவர் சுவரொட்டிப் போட்டி

பருத்தித்துறை, ஏப். 1

அடுத்த ஆண்டு நடத்தப்படவுள்ள இலங்கையின் 14 ஆவது குடிசனம் மற்றும் வீட்டு வசதிகள் தொகை மதிப்பீட்டினையொட்டி பாடசாலை மாணவர்கள் மத்தியில் சுவரொட்டிப் போட்டி நடத்தப் படவுள்ளது.

இப்போட்டி பாடசாலை மாணவர்களிடையே இரண்டு பிரிவுகளாக நடத்தப்படவுள்ளது. தரம் 6 தொடக்கம் 9வரையுள்ள மாணவர்கள் கனிஷ்ட பிரிவுப் போட்டியிலும் தரம் 10 தொடக்கம் தரம் 13 வரையுள்ள மாணவர்கள் சிரேஷ்ட பிரிவுப் போட்டியிலும் தோற்றமுடியும்.

சுவரொட்டிக்குப் பொருத்தமான சொற்றொடரை போட்டியாளரே தெரிவு செய்ய முடியும்.

இப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெறும் போட்டியாளருக்கு எட்டாயிரம் ரூபாவும், இரண்டாம் இடத்தைப் பெறுபவருக்கு ஆறு ஆயிரம் ரூபாவும், மூன்றாம் இடத்தைப் பெறுபவருக்கு நான்காயிரம் ரூபாவும் அத்துடன் சான்றிதழ்களும் பரிசில்களாக வழங்கப்படவுள்ளன. ஒரு போட்டியாளர் எத்தனை சுவரொட்டிகளையும் அனுப்ப முடியும். இப்போட்டிக்கான இறுதித் திகதி மே மாதம் 30 ஆம் திகதியாகும்.(ப-190)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் கல்விசாரா ஊழியர் திரு. ஆபிரகாம் நேசகுமார் அவர்களின் அன்புத் தந்தை S.ஆபிரகாம் அவர்கள் 30.03.2010 செவ்வாய்க்கிழமை காலமாகிய செய்தி கேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன், அவரின் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

## அஞ்சலித்தோம்




அமரர்
சுவாம்பிள்ளை மலக்கியாஸ்
(இளைப்பாறிய அதிபர், யா/ நாவாந்துறை றோ.க. வித்தியாலயம்)

எம் வித்தியாலயத்திற்காக தன்னை அர்ப்பணித்து அரும்பணியாற்றி 26.03.2010 இல் அமரத்துவம் அடைந்த எம் முன்னாள் அதிபர் அமரர் சு.மலக்கியாஸ் அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிற்காகப் பிரார்த்திக்கின்றோம்.. பிரிவுத் துயரால் வருந்தும் அவரது குடும்ப உறவுகளின் உணர்வுகளில் ஒன்றிக்கின்றோம்.

அதிபர், பிரதி அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மழலைச் சிரிப்பில்
10 ✱ 06 ✱ 1999



அகோரப் பிடியில்
12 ✱ 04 ✱ 2009

செல்வன் சிவகலை சாருஜன்

பிறப்பும் இறப்பும் நியதிதான் - இந்த
பசுங்குருத்தைப் பாதியிலே பறித்தது நீதியோ?
மடிந்தவர் மண்மீது வந்ததுதான் உண்டோ?- நீ
மண்ணிலின்றி போனால் என்ன? - எங்கள்
கண்களிலே என்றும் வாழ்வாய்.

சிவகலை தவமணி
(பரிசாரகர்,
அரசினர் வைத்தியசாலை, பளை).

குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ. சங்கப் பணியாளர் திரு.இ.இடபாகருடன் அவர்களின் அன்புத் தாய்
இராசநாயகம் அன்னலட்சுமி
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ. சங்க
ஊழியர் நலன்புரி சங்கம்.

(சி/566289)

## தேவை

சாரதி,விநியோகப் பையன் உடன் தேவை.
தொடர்பு: சண்முகன் களஞ்சியம்
இல.308, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## வேலையாள் தேவை

பிரபல்யமான நிறுவனத்திற்கு சமையல் மற்றும் இதர வேலைக்கு ஆள் தேவை.
வயதெல்லை 35-50. தனிநபர் விரும்பத்தக்கது. தங்கி நின்று வேலை செய்பவராக இருத்தல் வேண்டும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: இல.31, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.

## STUDY IN INDIA

EST. 1968
ISO 9001 - 2000 Certified

**East West College Bangalore**

AFFILIATED TO BANGALORE UNIVERSITY, VTU, RGUHS, Accredited by NBA -NewDelhi

க.பொ.த (உ/த) பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியடைந்துள்ளீர்களா? கவலை வேண்டாம்!! நீங்களும் பட்டதாரியாகலாம்!!!

**Spot Admissions & Career Guidance**

உடனடி அனுமதிகளை பெற்றுக்கொள்ள எங்கள் கல்லூரியின் அதிபர்
**Prof. B. Purusotham M.Sc, PGDBA, Mphil, Phd.**
அவர்களை எங்கள் **Jaffna Admission Center** இல் நேரில் சந்திக்கலாம்.
திகதி: **01-04-2010** முதல் **03-04-2010** வரை
நேரம்: **10.00AM - 6.00PM**

**East West Admission Center :**

Colombo
#67, 1/1, Galle Road, Dehiwala. 011-564 0787

Jaffna
#5, 1st Floor, New Market Building, Jaffna.
Tel: 011-3050111

**0777-168-777**

**SCHOLARSHIPS for BBM / BCA / B.Sc**

COURSES OFFERED AT EAST WEST

Professional Degrees (A/L 2 Pass + English)
Bachelor of Computer Applications (BCA),
Bachelor of Business Management (BBM)
B.Sc-(BioTecnogy/Gene/MicroBio/BioChe)

Bachelor of Engineering(A/L - C,2S - Maths)
Electronics & Communications, Mechanics,
Computer Sci, Information Technology, Civil.

Dip. in Engineering (O/L with Maths)
Electronics & Communications, Mechanics,
Computer Sci, Information Technology, Civil.

Paramedical
Bachelor of Pharmacy,
B. Sc - Nursing,
Diploma in Medical Lab Technician,
Diploma in Pharmacy

## மரண அறிவித்தல்

கனகசபை தியாகராஜா
(முன்னாள் தலைவர், வேம்படி முருகமூர்த்தி கோயில், கொக்குவில்)



தாவடி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை தியாகராஜா நேற்று(31.03.2010) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை-இராசமணி தம்பதியரின் அன்பு மகனும்,காலஞ்சென்றவர்களான இராசையா-இராசம்மா தம்பதியரின் அருமை மருமகனும் தவமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம்,இரத்தினம், பாக்கியம், கண்மணி, நாகம்மா,நல்லம்மா, இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், சின்னத்துரை, இராசையா, நடேசு, செல்லம்மா, இராசலிங்கம், குணரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரஞ்சனா தேவி, கணேசமூர்த்தி(ஜேர்மனி), நடேசமூர்த்தி (ஜேர்மனி), சத்தியமூர்த்தி (நோர்வே), கைலாயநாதன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும் அருந்தவராசா (முன்னாள் லிகிதர், மின்சாரசபை, யாழ்ப்பாணம்), குமுதினி (ஜேர்மனி), காலஞ்சென்ற கிருசாந்தி மற்றும் ஜெயலட்சுமி, இந்துமதி, சுகந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், செந்தூரன், நிருபா, நித்திலன், கிபிலன், பிரியந்தி, நிவேந்தினி, வருண், டினோசன், விபுசன், இந்துஜன் ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவடி தெற்கு,
கொக்குவில்.

தகவல்:
தி.சத்தியமூர்த்தி(மகன்)
T.P -0213734555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1178 நிலம்

30-03-2010

கும்பம் 21 27 38 48

ஜக்போட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 204,659 | 20/- | 4,093,180/- |
| 2 இலக்கங்கள் | 18,769 | 40/- | 750,760/- |
| 1 இல. + லக்கினம் | 18,535 | 60/- | 1,112,100/- |
| 2 இல. + லக்கினம் | 1,762 | 200/- | 352,400/- |
| 3 இலக்கங்கள் | 500 | 1000/- | 500,000/- |
| 3 இல. + லக்கினம் | 37 | 10,000/- | 370,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,000,000/- | |
| மொத்தம் | | | 7,778,440/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 244,270 | | 8,278,440/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

ஆலிந்தயே வாசனாவ

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| மாத்தளை | 401117766-9-15 |
| மாத்தறை | 401116410-8-28 |
| குருநாகல் | 401112220-5-20 |
| மட்டக்களப்பு | 401119944-1-26 |
| புத்தளம் | 401128937-7-48 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை



சுதந்திரம் மிக்க வளமான வாழ்வு

SLFP



என்றும் தங்களுக்காக அர்ப்பணித்த சேவையில்
யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரி அதிபர்
கலாநிதி.ந.யோகராஜன்



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக் கழகத்தில் கடந்த 27.03.2010 சனிக்கிழமை நடைபெற்ற 25 ஆவது பொது பட்டமளிப்பு விழாவில் சிறந்த B.Sc.(Agric) பட்டமும், மூன்று தங்கப் பதக்கங்களையும் பெற்ற

**காமலிற்றா நிசாந்தினி யோகபாலன்**

அவர்களை மனமகிழ்ச்சியுடன் வாழ்த்துவதோடு, மேலும் பல பட்டங்களும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

(96230)

31, புது வீதி, முதலாம் ஒழுங்கை, கொய்யாத்தோட்டம்.

வாழ்த்துவோர்: (அக்கா குடும்பம்) விஜயன்-றதி, பிள்ளைகள்.


## கலை விழா

யாழ்ப்பாணம்,ஏப்.1

உரும்பிராய் கிழக்கு செல்லப்பா முன்பள்ளியின் கலை விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி மண்டபத்தில் த.சிவலோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.விமலநாதன், உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தின் ஓய்வு பெற்ற உபஅதிபர் திருமதி திருநாவுக்கரசு மதுரநாயகி ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (204)


இனி இல்லை நெஞ்சு வலி

FAIR PHARMA (PVT) LTD

மருத்துவ ஆலோசனைகளுக்கு
திகதி : 04.04.2010


## மங்கையர்க்கரசியின் மனம் நெகிழஞ்சலி



எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியர்

**வினாசித்தம்பி திருச்செல்வம்**

அவர்களின் திடீர் மறைவை வெண்ணித் துயரடைகின்றோம். அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நல்லூரர் மங்கையர்க்கரசி வித்தியாலயக் குடும்பம். (96233)


# நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2010 யாழ்.மாவட்டம்

## தமிழ் தேசியக் கூட்டமைப்பு
## இலங்கை தமிழரசுக் கட்சி





எங்கள் குரல்களையும்
ஆதாரமான வாக்குகளையும்
நிரந்தரமான உரிமைகளையும்
போராடிய வாழ்வையும்
இழக்கமுடியாத பூர்வீக தாயகத்தையும்
எங்களுடையவை என்பதை
எங்களது வாக்குகளால் நிரூபிப்போம்!



(96591)

# சிவஞானம் சிறீதரன்

அதிபர், கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம் (கனிஸ்ரா)

எமது உரிமைக்காக குரல் கொடுப்போம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் பணிபுரியும்
அபிவிருத்தி உதவியாளர்
திருமதி [illegible] கணேஸ்வரன் அவர்களின்
பாசமிகு அன்னை
திருமதி பங்கஜவல்லி பரமானந்த
சிவாச்சாரியார்
அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து
அதிர்ச்சியடைந்தோம். இவ் ஈடு
செய்யமுடியாத இழப்பால் துயருற்றிருக்கும்
அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன்,
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிராந்தியக் கணக்காளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
பிராந்திய கணக்கீட்டு அலுவலகம், தபால் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

(96226)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**செல்வராணி திசைவீரசிங்கம்**

தோற்றம்: 03.06.1952
மறைவு: 12.04.2009
திதி: 01.04.2010

என் அருமை மகளே! சகோதரியே!
எம்மை விட்டுப் பிரிந்து சென்று
ஓராண்டானாலும் உங்கள்
பசுமை நினைவுகள் என்றும்
எம்மை விட்டகலாது.

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.

திருமதி சிவபாக்கியம் பாலசிங்கம் *(தாய்)*,
திருமதி இந்திராணி பாலசுப்பிரமணியம் *(சகோதரி)*.

(96007)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
24 . 08 . 1982



ஆண்டவன் அடியில்
12 . 04 . 2009

### அமரர் சண்முகம் கங்காதரன்

வேலணைத் துறையில்
வெளிநாடு சென்றவுன்னை
காலனவன் பறித்தானோ...
ஆண்டு ஒன்று ஆனபின்னும்
அகலவில்லை கங்கா உன் நினைவு
என்றும் எம்முடன் வாழ்கின்றாய்...

நீங்காத நினைவுகளுடன்.....
குடும்பத்தினர் மற்றும் உறவுகள்.

கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

(96210)

ஓம் கணபதி துணை

## முதலாம் ஆண்டு நினைவலையில்...

ஜனனத்தின் மடியில்
15 . 08 . 1956



மரணத்தின் பிடியில்
12 . 04 . 2009

### அமரர் சின்னத்துரை யோகேஸ்வரன்

திதி: பூர்வபக்க திருதியை (01.04.2010)

அர்ச்சிக்கும் மலர்கள்- எப்போதும்
மண்ணில் மடிந்து போவதில்லை
எத்திக்கும் பாராமல் மீண்டும்
எழுந்து வருகின்றன
பூஜைக்கு வாசனையாய்
தேசத்தின் யாசிப்பில்
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கும்.....

யோ.செல்வராணி (மனைவி)
மற்றும் பிள்ளைகள்.

சண்டிலிப்பாய் மேற்கு,
சண்டிலிப்பாய்.

(96225)

# சுற்றுலாப் பயணிகளைக் கவரும் மணற்காட்டு இயற்கை வனப்பு

பருத்தித்துறை,ஏப்.1.

வடமராட்சி கிழக்கிலுள்ள மணற்காட்டுப் பிரதேசத்தினை பார்வையிடுவதற்காக தென்னிலங்கையிலிருந்துவரும் சுற்றுலாப் பயணிகள் பெரும் எண்ணிக்கையில் வந்து செல்கின்றார்கள்.

மணற்காட்டுப் பிரதேசத்திலுள்ள உயரமான மணற்குன்றுகள், நீண்டு பரந்து காணப்படும் சவுக்கு மரத்தோப்பு, பரந்து காணப்படும் புல் நிலம், மணலினால் மூடப்பட்டிருக்கும் புராதன தேவாலயம், கடற்கரைக் காட்சி ஆகியன சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் கவர்வதாகவுள்ளன.

யுத்தம் தொடங்குவதற்கு முன்பும் வெளிநாட்டு, உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் கவரும் பிரதேசமாக மணற்காட்டுப் பகுதி திகழ்ந்துள்ளது. இப்பகுதியின் இயற்கை வனப்பை மையமாக வைத்து முன்பு தென்னிலங்கை படப்பிடிப்பாளர்களால் திரைப்படங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன.

(190)

# குமுதினிப் படகு குறிகாட்டுவான் பகுதியில்

நெடுந்தீவு, ஏப்.1

நெடுந்தீவில் நீண்ட நாள்களாக எவ்வித கவனிப்பின்றி இருந்த குமுதினி மோட்டார் படகு திருத்த வேலைக்காக கடந்த வாரம் நீலங்காடு படகு திருத்த நிலையத்துக்குக் கொண்டுசெல்லப்பட்ட போதும் தற்சமயம் குறிகாட்டுவான் பகுதியில் தரித்து நிற்கின்றது.

மேற்படி படகு நீலங்காட்டுக்குக் கொண்டு செல்வதற்குப் பதிலாகக் குறிகாட்டுவான் துறைமுகத்தில் வைத்தே உரிய பழுது பார்க்கும் வேலைகளை மேற்கொள்ள முடியும் என இப்போது தகவல்கள் கசிகின்றன. இதுவரை மேற்படி படகு, திருத்த வேலைகளுக்கு உட்படுத்தப்படவில்லை எனவும் தெரிகின்றது.

(111)

# நெடுந்தீவில் அடிசல்லி கற்களுக்குத் தட்டுப்பாடு

நெடுந்தீவு, ஏப்.1

நெடுந்தீவில் அடிசல்லி கற்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் முக்கியமான பல வேலைகள் பூர்த்திசெய்ய முடியாத நிலையில் உள்ளன. நெடுந்தீவில் மேற்கொள்ளப்படவுள்ள வீட்டுத்திட்டத்தில் 242 வீடுகள் கட்டப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்ட போதும் 212 வீடுகளுக்கான அனுமதியே கிடைத்துள்ளது. எனினும் அடிசல்லி கிடைக்காமையினால் குறிப்பிட்ட வீடுகளைக்கட்டிக் கொள்ள முடியாத நிலையில் தாங்கள் உள்ளதாக குடியிருப்பாளர்கள் கூறுகின்றார்கள்.

நெடுந்தீவில் கல்லடிக்கும் கிறேஸர் இரண்டு உள்ள போதும் அடிசல்லிக் கற்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவது குறித்தும் அதிருப்தி தெரிவிக்கப்படுகின்றது.

(20-111)

# வடமராட்சி வலய தமிழ்த்தினப் போட்டி

பருத்தித்துறை, ஏப்.1

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டி எதிர்வரும் 5,10, 11 ஆம் திகதிகளில் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 5ஆம் திகதி எழுத்தாக்கப் போட்டியும் 10ஆம் திகதி பேச்சு, கதை கூறல், பா ஓதல் , வாசிப்பு, இசையும் அசைவும் , இசை (தனி), நடனம்(தனி), விவாதம், நாட்டார் பாடல்கள் ஆகிய போட்டிகளும் 11ஆம் திகதி நடனம் (குழு), நாட்டிய நாடகம் (திறந்தவெளிப் போட்டி), இசை (குழு) வில்லுப்பாட்டு, நாடகம், தமிழறிவு வினா விடை ஆகிய போட்டிகளும் நடைபெறவுள்ளன.

(190)

## 9ஆம் ஆண்டு நினைவலைகள்



செல்வி
**சிந்தாமணி ஸ்ரீ ஜெயதேவி**

தோற்றம்: 19.02.1971
மறைவு: 01.04.2001

எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உம்மை என்றும் மறவோம்.

**குடும்பத்தினர்.**
சீரளன் வீதி,
இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.

(96193)

## கண்ணீர் அஞ்சலி



**அமரர் ம.க.நடராசா**

யாழ்.கரந்தன் இராமுப்பிள்ளை
வித்தியாலயம் அமையப் பெறுவதற்கு
முதன்மையாகச் செயற்பட்டவரும்,
இப்பாடசாலையின் முதலாவது அதிபராகப்
பணியாற்றியவரும், பாடசாலையின்
வளர்ச்சியில் அர்ப்பணிப்புடன்
சேவையாற்றியவருமாகிய ம.க.நடராசா
அவர்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திப்பதோடு,
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்.
யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், நீர்வேலி.

(96205)

## ஓராண்டு நினைவு

தோற்றம்
19 ★ 05 ★ 1924



மறைவு
01 ★ 04 ★ 2009

### அமரர் நீக்கிலான் வின்சன்ட் போல்
(அண்ணாவியார்)

அன்புடனும் பாசத்துடனும் எம்மை வளர்த்த ஐயாவே!
பாரினில் உயர்வுடன் வாழ்ந்து காட்டினீரே!
இறைவனடி சேர்ந்து ஆண்டு ஒன்று ஆகிவிட்டது
நின் நினைவுகள் எம்மைவிட்டு நீங்கவில்லை.

நின் ஆன்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்.

கடற்கரை வீதி,
நாவாந்துறை,
யாழ்ப்பாணம்.

என்றும் உம் நினைவில்:
மனைவி, பிள்ளைகள்.

(96090)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண் மகிழ
02 ★ 10 ★ 1928



கண் நெகிழ
03 ★ 03 ★ 2010

### அமரர் அருணாசலம் சின்னையா

திதி: திருதியை (01.04.2010)

கடந்த 03.03.2010 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் இன்று (01.04.2010) வியாழக் கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கோயிலாமனை,
கொடிகாமம்.

**குடும்பத்தினர்.**

(95997)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

## மேடம்



பொது விடயங்களில் ஈடுபட்டு புகழ் சேர்க்க முற்படுவீர்கள். பலமுறை அலைய நேரிடும் என நினைத்த வேலை ஒன்று சுலபமாக முடிவுக்கு வரும். விருப்பமான உணவு வகைகளை சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். உறவுப் பெண்கள் அல்லது மனைவி வழியில் சிறு தொகையை செலவிடலாம். சுறுசுறுப்பு கூடும்.

## இடபம்



நல்ல காரியங்களுக்காக சிறிதளவு பணத்தை செலவு செய்வீர்கள். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். அரசியல் தொடர்புடையவர்கள் திடீர் பயணங்கள் செல்லலாம். அடுக்கடுக்காக பல வேலைகளை திட்டமிட்டு செய்வீர்கள். உதவி செய்தவருக்கு பதில் உதவி செய்வீர்கள்.

## மிதுனம்



ஏட்டிக்குப் போட்டியாக சில வேலைகளைச் செய்து மற்றவர்களின் கோபத்திற்கு ஆளாகலாம். மாமன், மைத்துனர்கள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். சில விடயங்களில் முந்திக் கொண்டு செயற்படுவதன் மூலம் பண இழப்புகளைச் சந்திக்கலாம். பணிபுரிவோர் திடீர் விடுப்பு எடுக்க நேரிடலாம்.

## கடகம்



உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனை சொல்லலாம். கடுமையான பேச்சுக்கள் மூலம் சிலரின் அதிருப்திக்கு ஆளாகலாம். உங்களின் செயற்பாடுகளை பார்த்து மற்றவர்கள் பொறாமைப்படலாம். பயணங்களால் செலவு, அலைச்சல் ஏற்படலாம். நன்றி மறந்த ஒருவரை நினைத்து வருத்தம் அடைவீர்கள்.

## சிங்கம்



நினைத்ததை சாதித்து சந்தோஷம் அடையும் நாள். வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருந்த சிலரைச் சந்திப்பீர்கள். சிலர் தொழில் நிமித்தம் வெளியூர் பயணங்கள் செல்லலாம். சிறிதளவு ஆதாயத்தை எதிர்பார்த்த வேலை ஒன்றில் கணிசமான பொருள் வரவுகளைப் பெறலாம். சகோதரர்கள் விடயங்களில் கவனம் அவசியம்.

## கன்னி



சிலருடன் வீண் பேச்சுக்கள் பேசி, அரட்டை அடித்து நேரத்தை வீணடிப்பீர்கள். மற்றவர்களுக்கு நடந்து, உங்களுக்கு நடக்காத ஒரு விடயத்தை பற்றி யோசித்து ஆதங்கப்படுவீர்கள். வழக்கத்திற்கு மாறாக நீண்ட நேரம் ஓய்வெடுப்பீர்கள். தொலைபேசி வழியில் சில முக்கியமான செய்திகளைக் கேட்கலாம்.

## துலாம்



எந்தக் காரியத்தையும் மற்றவர்கள் பாராட்டும் வகையில் செய்வீர்கள். வியாபாரிகள் சில பொருள்கள் விற்பனை மூலம் கூடுதல் ஆதாயம் பெறலாம். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாக அமைந்தாலும், அதுவும் நன்றாகவே அமையும். வண்டி வாகனங்களை கையாளும் போது கவனம் அவசியம்.

## விருச்சிகம்



இறை வழிபாடுகள் மூலம் அமைதி பெற வேண்டிய நாள். நீண்ட நாள்களாக பார்க்காமல் இருந்த ஒருவரை திடீரென பாதையில் சந்திக்கலாம். தொழில் ரீதியாக சிலரின் கண்டிப்பதற்கு ஆளாகலாம். உடல் ரீதியான உபாதைகளால் உற்சாகம் குறையலாம். கடன் மிகுதிகளை சாக்குப் போக்குச் சொல்லி சமாளிப்பீர்கள்.

## தனுசு



நல்ல செய்திகள் வீடு தேடி வரும் நாள். சொல்வாக்கைக் காப்பாற்றி செல்வாக்குப் பெறுவீர்கள். உறவினர்களை உபசரிக்க கணிசமான பணத்தை செலவு செய்வீர்கள். உங்களின் தவறு ஒன்றை நினைத்து வருத்தம் அடைவீர்கள். குடும்ப உறுப்பினர்கள் தொடர்பான விடயங்களில் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. வசதி, வாய்ப்பு கூடும்.

## மகரம்



எதிர்ப்புகளை, போட்டிகளை சமாளிப்பீர்கள். எதிர்காலம் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். மற்றவர்கள் தயங்கும் சில வேலைகளை நீங்கள் துணிச்சலாகச் செய்வீர்கள். அரசியல் தொடர்புடையவர்கள் நினைத்த காரியங்கள் நடப்பதன் மூலம் மகிழ்ச்சி, உற்சாகம் பெறுவர். நல்ல செய்தி கேட்கலாம்.

## கும்பம்



வாய்ப்புகளை நழுவ விட்டு வருத்தம் அடைவீர்கள். மாமன், மைத்துனர்கள் உங்களுக்கு கை கொடுத்து உதவலாம். இரண்டு நாள்களாக தடைபட்ட வேலை ஒன்று இன்று நல்ல விதமாக முடியும். ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் செலவாகும். விரும்பாத ஒருவரை நீங்கள் செல்லும் இடத்தில் சந்திக்கலாம்.

## மீனம்



பிறரை நம்பி மற்றவர்களுக்கு வாக்குக் கொடுக்க வேண்டாம். ஒருவரின் வருகைக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம். உங்களிடம் உதவி பெற்ற சிலரே உங்களை விமர்சனம் செய்வது கண்டு எரிச்சல் அடையலாம். வீண் பழிகள் வராமல் இருக்க கவனம் அவசியம். சிக்கனமாக இருக்க நினைத்தாலும், ஏதாவது ஒரு வழியில் செலவு ஏற்படும்.


மணி மாஸ்டர் நிலையங்களில்
பரிசு பெறலாமா?



WESTERN UNION yes! money transfer




இப்பண்டிகை காலத்தில் வெஸ்டர்ன் யூனியன் மூலமாக அனுப்பப்படும் பணத்தினை எந்தவொரு மணிமாஸ்டர் நிலையங்களிலும் பெற்றுகொண்டு பெருமதியான பரிசு!* ஒன்றை பெற்றுக்கொள்ளுங்கள்.

- எந்தவித கட்டணமும் அறவிடப்படமாட்டாது!
- விடுமுறை நாட்களிலும் திறந்திருக்கும்!
- ஒரு சில நிமிடங்களில் பணத்தை பெற்றுக்கொள்ளலாம்!
- பாதுகாப்பான சேவை!

மேலதிக விபரங்களுக்கு - ஜெயதாஸ் (0777 915 543)

○ நிபந்தனைகளுக்கு உட்பட்டது. ○ இச்சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே

யாழ்குடாவில் வெஸ்டர்ன் யூனியன் மூலமாக அனுப்பப்படும் பணத்தினை கீழ்வரும் MMBL மணி மாஸ்டர் நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம்

யாழ்நகரில்
ஸ்ரீ முருகன் முகவர் தபால் நிலையம்.
குமார் முகவர் தபால் நிலையம்,
ராஜு ஸ்டோர்ஸ்,
சங்கீதா ஏஜென்சி
கதிரவன் ஜெம் சென்டர்,
சிற்றி பாமா,
DFCC வர்தன வங்கி,
சனச அபிவிருத்தி வங்கி,
டிஜிட்டல் இலக்ரோனிக்ஸ்
எக்ஸ்போ ஏவியேசன்.
யாழ்ப்பாணம் கிராமிய வங்கி.
சுண்ணாகம் நீதினி முகவர் தபால் நிலையம்.
குமரன்ஸ் குரூப்.
மானிப்பாய் தினேஸ் பேக் ஹவுஸ்.
கொக்குவில் சாருஜன் கொமினிகேசன்,
சண்டிலிபாய்
R.S.கொமினிகேசன்,
சங்கானை சரண்யா கொமினிகேஷ்.
வட்டுக்கோட்டை வட்டு சிவன் கொமினிகேஷன்,
பண்டத்தரிப்பு பண் சிற்றி
பொலிகண்டி ஓம் சரவன பவா கொம்
சாவகச்சேரி சாவகச்சேரி கிராமிய வங்கி
நெல்லியடி நியூ அம்பிகா ஸ்டோர்ஸ்.
மணி நெட் கொம்
பருத்தித்துறை கணேசா ஏஜென்சி,
ராஜன் சைக்கிள் வேக்ஸ்
நல்லூர் சந்தியா மல்டி கோட்யாட்
ஈச்சமோட்டை லக்ஸ்சன் கொமினிகேசன்
இணுவில் விக்னா கொமினிகேசன்,
கணேசா சென்டர்
உடுப்பிட்டி உடுப்பிட்டி கிராமிய வங்கி
கோண்டாவில் அஸ்வினி மல்டி பிளாஸா
திருநெல்வேலி திருமுருகன் கொம் நெட்
காரைநகர் ஸ்ரீ முருகன்
கைதடி வசந்தா முகவர் தபால் நிலையம்
அச்சுவேலி அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

MMBL Money Master
நம்பிக்கை,நாணயம்,பாதுகாப்பான சேவை

உடனடி அழைப்பிற்கு - 011 552 99 99


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# Anti Virus ஐப் பரீட்சிக்க ஒரு எளிய வழிமுறை

இவ்வாரச் சிறுதுணுக்கு

உங்கள் கணனியில் நிறுவப்பட்டிருக்கும் Antivirus உண்மையிலேயே இயங்குகின்றதா அல்லது பெயரளவிற்கு மட்டும் நிறுவப்பட்டுள்ளதா என்பது பலரதும் மனதளவிலான கேள்வி. கவலையை விடுங்கள். அதனைப் பரீட்சித்துப் பார்ப்பதற்குச் சுலபமான வழி இதுதான்! நீங்களே ஓர் Sample virus Code இனைப் பயன்படுத்தி உங்கள் Antivirus Scanner ஐப் பரீட்சித்துப் பார்க்கலாம். கீழே தரப்பட்டுள்ள Code ஐ ஓர் Notepad இல் Type செய்யுங்கள்.

```
X5O!P%@AP[4\PZX54(P^)7CC)7}$EICAR-STANDARD-ANTIVIRUS-TEST-FILE!$H+H*
```

பின் அதனை Text File ஆகவோ, Exe File ஆகவோ உங்கள் Desktop இல் சேமியுங்கள். நீங்கள் சேமித்த உடனே உங்கள் Anti virus Scanner கோப்பினை "Virus" எனக் காட்டி Detect செய்கிறதா?




அவ்வாறு Detect செய்கின்றது எனில் உங்கள் Antivirus Scanner உருப்படியாக வேலை செய்கின்றது என்று அர்த்தம். அவ்வாறு செய்யவில்லையா? நீங்கள் உங்கள் Antivirus Scanner இனை மாற்றியமைக்க வேண்டியது கட்டாயம்.

உண்மையிலேயே மேலே தரப்பட்ட Code ஒரு Virus அல்ல இது அனைத்து Antivirus Company களும் இணைந்து மக்கள் தங்கள் Antivirus Scanner களை இடையிடையே பரிசோதனை செய்து பார்க்க உருவாக்கிய coding ஆகும். இதனைப் பின்வரும் இணையத்தள முகவரியிலும் பதிவிறக்கம் செய்யலாம்.

http://www.eicar.org/anti_virus_test_file.htm

மு.நவநீதசர்மா.
யாழ்.இந்துக்கல்லூரி




# ".Com" க்கு வயசு 25




இணையத்தில் மிகவும் புகழ் பெற்ற டொட் கொம் (.com) என்ற பெயர் கடந்த மாசச் 15ஆம் திகதியன்று தனது 25 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடியுள்ளது.

1985 ஆம் ஆண்டு மார்ச் 15 அன்று முதல் முதலில் Symbolics.com என்ற பெயரில் ஓர் இணையத் தளம் பதிவு பெற்றது. அப்போது எந்தச் செய்தித் தாளிலும் அந்தச் செய்தி வெளிவரவில்லை. அந்த அளவிற்கு மக்களுக்கு முக்கிய நிகழ்வாக அது இல்லாமல் இருந்தது. 1985ல் சிம்பாலிக்ஸ் டொட் கொம் பதிவு செய்த பின்னர் இரண்டாவது தளம் ஒரு மாதம் கழித்தே பதிவு செய்யப்பட்டது. இரண்டு ஆண்டுகளில் மொத்த இணையத் தளப் பதிவுகளின் எண்ணிக்கை 100 ஐக் கூட எட்டவில்லை.

ஆனால் இன்று இந்தப் பெயரை இருபது கோடிக்கும் மேலான இணையத் தளங்கள் கொண்டுள்ளன.உலகில் நாள் தோறும் 6 லட்சம் இணையத் தளங்கள் "டொட் கொம்" பெயரால் பதியப்பட்டுத் தங்கள் பெயர்களைப் பெற்று வருகின்றன. இப்போது வர்த்தக உலகில் ஒரு பெரிய தூணாக டொட் கொம் இயங்குகிறது. இந்த பெயர் கொண்ட தளங்கள் மூலம் ஆண்டுக்கு 40 ஆயிரம் கோடி டொலர் மதிப்பில் வர்த்தகம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இன்னும் பத்து ஆண்டுகளில் இது 95 ஆயிரம் கோடியாக உயரும் என்றும் எதிர்பார்ப்புகள் உள்ளன.

இன்று உள்ள டொட் கொம் தளங்களில் ஒரு கோடியே 10 லட்சம் தளங்கள் ஒன்லைனில் வர்த்தக ரீதியாக, வர்த்தகத் தளங்களாக இயங்கி வருகின்றன. 43 லட்சம் தளங்கள் பொழுது போக்குக்காக இயங்குகின்றன. 18 லட்சம் தளங்கள் விளையாட்டு குறித்த தளங்களாக உள்ளன.

# Bluetooth என்றால் என்ன?

வயர்கள் எதுவுமில்லாமல், தானாகவே இணைப்பினை ஏற்படுத்திக் கொள்வதுதான் "புளுடூத்" (Blue tooth). நாம் கணனிகள், பொழுது போக்கு சாதனங்கள், தொலைபேசி ஆகியவற்றைப் பயன்படுத்தும் போது அவை தங்களுக்குள் பல வகைகளில் இணைந்து கொள்கின்றன. ஆனால் புளுடூத் சாதனங்கள் இணைப்பில் தனிவழி கொண்டுள்ளன. குறைந்த மின் சக்தி பயன்பாடு, ஒரே நேரத்தில் எட்டு சாதனங்களுடன் தொடர்பு கொள்ளக் கூடிய வசதி, எந்த வகையிலும் ஒன்றுக்கொன்று குறுக்கீட்டுச் செயல் இழக்காத நிலை, இணைந்திடும் சாதனங்கள் நேராக இருந்திடத் தேவை இல்லாத நிலை, 32 அடி வட்டத்தில் புளுடூத் தொழில் நுட்பம் கொண்ட எந்தச் சாதனத்தையும் கண்டு இணையும் லாவகம் எனப் பல plus point களை அடுக்கிக் கொண்டு செல்லலாம்.

புளுடூத் இயக்கப்பட்ட சாதனங்கள் அவற்றின் எல்லைகளுக்குள் இருக்கையில் யாரும் இயக்காமலேயே ஒன்றையொன்று புரிந்து கொள்கின்றன

ஒரு மின்னியல் உரையாடல் அவற்றுக்குள் ஏற்படுகிறது. இந்த சாதனங்களைப் பயன்படுத்துபவர் எந்த பட்டனையும் இதற்கென அழுத்த வேண்டியதில்லை. அந்தச் சாதனங்கள் தங்களுக்குள் ஒரு நெட்வேர்க்கினை ஏற்படுத்திக் கொள்கின்றன. இதை Personal Area Network எனக் கூறலாம். ஆங்கிலத்தில் இந்த நெட்வேர்க்கை PAN அல்லது pico net என அழைக்கின்றனர். இரண்டிற்கு இடையே ஏற்படும் இந் நெட்வேர்க் அதே அறையில் மற்ற இரண்டிற்கு இடையே ஏற்படும் நெட்வோர்க்கால் பாதிக்கப்படு[illegible] உறுதி செய[illegible]

இந்த இரண்டு சாதனங்களுக்கிடையே தகவல் பரிமாற்றம் ஏற்படுகிறது. இது ஒலி, போட்டோ, வீடியோ, பைல் என எதுவாகவும் இருக்கலாம்.

புளுடூத் ஹெட்செட்கள் உங்களுடைய மொபைல் போன், ரேடியோ ஆகியவற்றுடன் வயர் எதுவுமின்றி இணைப்புக் கொடுத்து செயல்படவைக்கின்றன. மொபைல் போனில் இந்த வசதியைப் பெற A2DP (Advanced Audio Distribution Profile) என்ற தொழில் நுட்பம் இருக்க வேண்டும். ஹெட்செட்டும் அதே தொழில் நுட்பத்துடன் வடிவமைக்கப்பட்டிருக்க வேண்டும். பாடலகளை மட்டுமல்ல போனுக்கு வரும் அழைப்புகளையும் இதில் மேற்கொள்ளலாம்.

பிரிண்டர்களும் புளுடூத் தொழில் நுட்பத்தில் இயங்கும் வகையில் இப்போது வடிவமைக்கப்படுகின்றன. உங்கள் மொபைல் போனில் போட்டோ ஒன்று எடுத்த பின்னர் அதனை அச்செடுக்க பிரிண்டருடன் இணைக்க வேண்டியதில்லை. பிரிண்டரையும் மொபைல் போனையும் புளுடூத் மூலம் இணைத்தால் போதும். கார்களை ஓட்டிச் செல்கையில் நம் மொபைல் போனுக்கு அழைப்பு வந்தால் யாரிடமிருந்து அழைப்பு வருகிறது என்பதனை எடுத்துக் காட்டி போனை எடுக்காமலேயே பேசச் செய்திடும் தொழில் நுட்பம் கொண்ட சாதனங்கள் இப்போது வந்துள்ளன.

உங்களுடைய மொபைல் போனை புளுடூத் மூலம் கணனியுடன் இணைத்து பைல்களை பதிவேற்றம் செய்திடலாம். புளுடூத் வசதி கொண்ட கீ போர்டுகளும் இப்போது வந்துவிட்டன. இவற்றையும் கணனி மற்றும் செயற்பாட்டிற்கு ஏற்ப மொபைல் போனுடனும் இணைக்கலாம்.

பொதுவாக நெட்வோர்க் என்றாலே கூடவே பாதுகாப்புப் பிரச்சினையும் ஏற்படுகிறது. இங்கும் அதே கதை தான்.

புளுடூத் மூலம் அடுத்த சாதனங்களைக் கைப்பற்றிக்



கெடுப்பதை "bluejacking", "bluebugging" என அழைக்கின்றனர். எனவே நம்பிக்கையான நபர் அல்லது மொபைல் போன் அல்லது சாதனம் என்று உறுதியாகத் தெரிந்தாலொழிய இத்தகைய புளுடூத் இணைப்பை அனுமதிக்கக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றையாட்சியின் கீழ் நிரந்தரத் தீர்வு காணமுடியாது என்ற எமது நிலைப்பாட்டில் மாற்றமில்லை

**இடைக்கால அறிக்கை கையளிப்பு நிகழ்வில்- வீ.ஆனந்தசங்கரி**

மேதகு ஜனாதிபதி, கௌரவ அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் அனைவருக்கும் வணக்கம்.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் திஸ்ஸவிதாரண அவர்கள் குழுவின் இடைக்கால அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளிக்கும் வைபவத்தில் நான் கலந்து கொள்வது உங்கள் அனைவருக்கும் ஆச்சரியமாக இருக்கலாம். இந்த நாட்டு மக்களுக்கும் சர்வதேச சமூகத்தினருக்கும், பிறநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கும் நான் ஏன் 13 ஆவது திருத்தச் சட்டத்தை, இறுதித்தீர்வுக்கு முன்பு, முன்னோடியாக இருந்து முற்றாக அமுல்படுத்துவதற்கு ஆதரவு வழங்குகிறேன் என்பதை விளக்க கடமைப்பட்டுள்ளேன். நாம் தமிழ் பேசும் சிறுபான்மையின மக்களுக்காக ஒன்றிணைந்து செயற்படும் கட்சியாகிய தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத் தலைவர் திரு.த.சித்தார்த்தன் சார்பிலும், பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் திரு தி.ஸ்ரீதரன் சார்பிலும் பேசக் கடமைப்பட்டுள்ளேன்.



நாம் சமஷ்டி அடிப்படையிலான தீர்வை விரும்பினாலும், சிலருக்கு சமஷ்டி என்ற வார்த்தை கசப்பாக இருப்பதால் சமஷ்டிக்கு மாற்றாக இந்திய முறையிலான தீர்வை வற்புறுத்தி வந்திருக்கிறோம். இந்த விடயத்திலும், வடக்கு-கிழக்கு இணைப்பு விடயத்திலும் எமது நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை. வன்முறையை வெறுத்து ஒதுக்கித் தள்ளுகின்ற நாம் சாத்வீக முறையிலும், நட்பு முறையிலும் ஒற்றையாட்சியின் கீழ் நிரந்தரத் தீர்வைக் காணமுடியாது என்ற கருத்தை எமது நாட்டு மக்களை ஏற்க வைப்போம்.

நாடு பிரியும் என்று அச்சப்படுவோருக்கு அவர்களின் அச்சத்தைப் போக்குவோம். நாட்டுப் பிரிவினை எண்ணத்தை எமது மக்கள் சிந்தனையில் இருந்து நீக்கி ஐக்கிய இலங்கைக் கொள்கையை வலுவாக ஆதரிக்க வைப்போம். இதை நாம் அடைய நாட்டின் ஒரு பகுதியினர் பெரியவர்கள் என்றோ, சிறியவர்கள் என்றோ முன்னிலைபடுத்தாது அரசும் ஊடகங்களும் அத்தகைய எண்ணத்தை வளரவிடாது தடுத்தல் வேண்டும்.

இன்று நாம் கலந்து கொள்ளும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று கூடும் இச்சபை இரத்தத்தில் தோய்ந்திருக்கும் நாட்டையும் அரை நூற்றாண்டுக்கு மேல், விசேடமாக கடந்த 25 ஆண்டு காலமாக சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துவரும் மக்களின் பிரச்சினைகளையும் தீர்க்கக்கூடிய அரசியல் நிர்ணயசபையின் முன்னோடியாக இதைக்கருதுகிறோம்.

சிங்கள,தமிழ், இஸ்லாமிய, மலாய, பறங்கிய மற்றும் ஏனைய சிறுபான்மைச் சமூகத்தவர்கள் அனைவரும் சகல விதத்திலும் ஒருவர் பெரிது, மற்றவர் சிறிது என்ற பாகுபாடின்றி சமமாக வாழக்கூடிய ஒரு தேசம் மறுபிறவி எடுக்கும் போது தமிழ் பேசும் மக்களின் பூரண ஒத்துழைப்பைக் காட்டுவதற்கு நாம் ஒன்று கூடியிருக்கின்றோம்.

ஒரு குழுவுக்கு மட்டும்தான் இந்த நாடு சொந்தமானது என உரிமை கொண்டாடுவதை நாம் மறுக்கிறோம். இந்தியாவிலிருந்து இலங்கையை 22 மைல் தூரம் கொண்ட பாக்குத் தொடுவாய் பிரிக்கிறது. தொடுவாய்க்கு அப்பால் வாழும் ஆறு கோடி மக்கள், எமது மக்களுக்கு அமைதியும், இயல்பு வாழ்வும், நல்ல எதிர்காலமும் அமைய தமது வாழ்த்துக்களையும் ஒத்துழைப்பையும் வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம். இரு பக்கத்திலுமுள்ள விடுதலைப்புலிகள் சார்பான தலைவர்களால் தமிழ்நாட்டு மக்கள் தப்பாக வழிநடத்தப்படக்கூடாது. கடலுக்கு அப்பால் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு நம் நாட்டுத் தமிழர்களை இனப்படுகொலை செய்ய எவரும் முயற்சிக்கவில்லை என்பதையும் தமிழ் மக்களின் அரைவாசிப் பேருக்கு மேல் தமது பூர்வீகக் குடியிருப்புக்களையும் விட்டு வெகு தூரத்திற்கு அப்பால் தென்னிலங்கையில் சிங்கள, முஸ்லிம் மக்களுடன் அவர்கள் மீது பெருநம்பிக்கை வைத்து சந்தோஷமாக வாழ்கின்றார்கள் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

கடந்த 20 ஆண்டுகாலமாக மீண்டும் பேச்சுவார்த்தைக்குத் திரும்புவதற்கு பல சந்தர்ப்பங்கள் விடுதலை புலிகளுக்கு அளிக்கப்பட்டன. வட.கிழக்கை நிர்வகிப்பதில் பெரும் பங்கினை அரசிடமிருந்து பெற்றுத்தருவேன் என விடுதலை புலிகளுக்கு பல தடவை கூறியிருக்கின்றேன். தலைவர்களுக்கும், போராளிகளுக்கும் பொது மன்னிப்புப் பெற்றுத்தருவதாகக் கூட கூறியிருக்கின்றேன். எனது கோரிக்கையை அவர்கள் பொருட்படுத்தவில்லை. மாறாகத் தினமும் இரு பகுதியினர் மத்தியிலும் உயிர்ப் பலிகளை மட்டுமே எடுத்து வருகின்றனர். எனது வேண்டுகோள் இன்று வரை நீடிக்கிறது. எமது மக்களைப் பெரும் ஆபத்துக்களை எதிர்நோக்க வைப்பது மட்டுமன்றி, அரசியலில் எதுவித அக்கறையுமின்றி தாமுண்டு தமது வேலை உண்டு என ஒதுங்கி வாழும் அப்பாவிச் சிங்களக் கிராமவாசிகளை விடுதலைப் புலிகள் மீண்டும் படுகொலை செய்வது வருத்தத்துக்குரியதாகும். எமது மக்கள் அதாவது இலங்கை மக்கள் போதியளவு துன்பப்பட்டும், பெருமளவு இழந்தும் தொடர்ந்து நிரந்தர பயத்துடனும், பதற்றத்துடனும் வாழ்கின்றார்கள். இவற்றிலிருந்து அவர்கள் விடுபட வேண்டும்.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் பணி தொடருமெனவும் 13 ஆவது திருத்தச்சட்டம் ஒரு தற்காலிக ஏற்பாடு எனவும் மேதகு ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். தமிழ் மக்களுடைய அபிலாசைகளைத் தீர்க்கக்கூடிய வகையில் அரசியல்கட்சிப் பிரதிநிதிகள் அதே உற்சாகத்தோடு செயற்பட்டு நல்ல தீர்வைக் காண்பார்கள் என நம்புகிறோம். சமாதானத்தையும் அமைதியையும் காண ஜனாதிபதி எடுக்கும் முயற்சிக்கு எமது பூரண ஆதரவு உண்டு.

நன்றி

**வீ.ஆனந்தசங்கரி**
தலைவர்,
தமிழர் விடுதலைக் கூட்டணி.

**தமிழர் விடுதலைக் கூட்டணி**

(சி/566308)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திக்கச் சில வரிகள்

* மற்றவர்கட்கு மகிழ்ச்சியைக் கொடுப்பது ஒரு பெரும் தர்மமாகும்.
* எல்லாச் சந்தர்ப்பத்திலும் சமநிலையுடன் இருப்பதுதான் மகிழ்ச்சியின் திறவு கோலாகும்.
* உண்மையான வெற்றி என்பது புலன் அங்கங்களின் மீதான பூரண கட்டுப்பாடு ஆகும்.
* ஒவ்வொருவருக்கும் மதிப்பு கொடுப்பது என்ற சாதகமான பதிவுகள் உங்களிடம் கட்டாயம் இருக்க வேண்டும்.
* அன்பாகவும், இனிமையாகவும், உண்மையாகவும் பேசுவதற்கு ஒரு சதம் கூடச் செலவழிக்க வேண்டியதில்லை.
* பெருந்தன்மையான இதயம் விரைவில் மிக மதிப்புள்ள இதயமாக உயரும்.
* பிரச்சினைகளைக் கையாளக்கூடிய வகையில் நாம் எமது ஆற்றலைப் பெருக்கிக் கொள்ள வேண்டும்.
* சோதனைக்குரியநேரமே மனிதரை மேன்மையாக்குகின்றது. வெற்றிக்குரிய நேரமல்ல.
* எண்ணங்களின் தராதரமே ஒருவரின் தனிப்பட்ட சந்தோசத்தினை நிச்சயிப்பது.
* பணிவும், கனிவும் ஒருவரை இறைவனுக்கு அருகாமையில் நிலைநிறுத்தும்.



சு.நர்மதன்
A/L வர்த்தக பிரிவு (2010)
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

# திரும்பவும் ஒரு முறை...



பசுமை நிறைந்த பள்ளி நினைவுகளை
புரட்டிப் பார்க்கின்றேன்
பனிக்கின்றன கண்கள்
பாதைகள் தெரியாத பயணங்கள்
பொறுப்புக்களற்ற இதயங்கள்
வலிகளற்ற வேதனைகள்
வீணாகிப் போன விதண்டாவாதங்கள்
துடிப்போடும் துடுக்குத்தனத்தோடும்
துள்ளித்திரிந்த பள்ளி வாழ்க்கை
நினைக்கும்போது நெஞ்சம் கனக்கிறது
பிரிந்து போன பள்ளி உறவுகளை
திரும்பவும் ஒரு முறை பள்ளிவாயிலில்.



ஸ்வாதி.

# அதிகம் சிரித்தால் உடலுக்கு நல்லது

அதிகம் சிரித்தால் 27 நிமிடம் உடற்பயிற்சி செய்தால் கிடைக்கும் அளவுக்கு ஆற்றல் கிடைக்கும் என்று ஆராய்ச்சியில் தெரிய வந்துள்ளது.

உடற்பயிற்சி, உணவுக் கட்டுப்பாட்டைவிட ஒரு மணி நேரம் சிரித்தால் 100 முதல் 120 வரையான கலோரி கிடைக்கின்றது. இது நடைப்பயிற்சி உடற்பயிற்சியின் மூலம் கிடைக்கும் ஆற்றலுக்குச் சமம். வாய்விட்டுச் சிரித்தால் அனைத்துப் பாகங்களுக்கும் இரத்த ஓட்டம் சீராகச் செல்கிறது. இது இதயத் துடிப்பு சமச்சீராக இயங்கத் துணைபுரிகிறது. தேவையான ஒட்சிசன் கிடைப்பதோடு உடல் பருமனையும் தடுக்கிறது.



# மாவீரன் அலெக்சாண்டர்

உலகின் தலை சிறந்த வீரர்களில் அலெக்சாண்டரும் ஒருவர். அவரைப்பற்றி அறியாதவர்களே இல்லை எனலாம். அஞ்சாத நெஞ்சம் படைத்த வீரன் அலெக்சாண்டர் வீரத்திற்கு மட்டுமல்ல நேர்மை, மனிதாபிமானம், போன்றவற்றிற்கு பெயர் பெற்றவர். உலகத்தையே தனது கைக்குள் கொண்டுவர நினைத்தார். தூக்கத்தில் கூட எதிரியை வெற்றி கொள்வது எப்படி என்றே நினைத்துக்கொண்டு தூங்குவார். என்று கூட கூறுவார்கள்.

போத்துக்கல் நாட்டினது அரசராக அலெக்சாண்டர் முதன் முதலில் அரசணையில் ஏறினார். ஒரே ஒரு நாட்டை முதன் முதலில் ஆண்ட அலெக்சாண்டர் படிப்படியாக பாரிய தேசங்களையும் கைப்பற்றி அரசு செலுத்தினார்.அலெக்சாண்டரிடம் இருந்த போர் வீரர்கள் அத்தனை பேரும் தீரர்கள். தமது மன்னவன் மீது அந்த பெருவீரர்கள் வைத்த விசுவாசம் தாய் தனது பிள்ளை மீது கொண்ட பாசத்திற்கு ஒப்பானது. தம் மன்னன் எங்கனும் வெற்றிவாகை சூட வேண்டும் என்று ஓய்வின்றி உழைத்தார்கள். அலெக்சாண்டர் தன் இராச்சியத்தை போத்துக்கல்லில் இருந்து படிப்படியாக விரிவாக்கி வந்தார். அலெக்சாண்டர் படையணி எங்கனும் வெற்றிவாகை சூடியது. தோல்வி என்பதை அவர்கள் அறியவில்லை.மாசிடோய வீரர்கள் ஓய்வு, உறக்கம் இன்றி போரிட்டு வந்தனர். தமது நாட்டைவிட்டு பல்லாயிரம் மைல்கள் தூரம் நடந்து சென்று போரிட்டுக் கொண்டு சென்றனர். இவ்வாறு செல்லும் போது இடையிடையே பலர் இறந்தனர். போரினாலும், நோய்களாலும் பல வீரர்கள் வழி வழியே மாண்டனர். வீரர்களை இழந்தாலும் அலெக்சாண்டரின் மனவுறுதியும் ஆர்வமும் குறையவில்லை. நாடுகளை கைப்பற்றி வெற்றித்தாகம் தணியுமட்டும் போரிட்டு வந்தனர். நீண்டகாலமாக போர்! ஓய்வின்றி போர்! வாழ்வை அனுபவிக்க வேண்டாமா! வீரர்களுக்கு சலிப்பு தட்டியது. நாட்டையும், வீட்டையும், மனைவி மக்களையும் விட்டு வந்து நீண்ட காலமாகி விட்டது. வீரர்களின் மனவுறுதி குலைந்தது. போரை வெறுத்தனர்.வீரர்கள் போரிடும் திறனும் குன்றியது இதுவரை தம் மன்னன் மீது விசுவாகமாக இருந்த வீரர்கள் பின்பு அவர் மீது வெறுப்படைந்தார்கள். இதன் காரணமாக படைகள் போரில் பலத்த இழப்புக்களைச் சந்திக்க வேண்டி ஏற்பட்டது. இறுதிக் கட்டத்தில் அலெக்சாண்டரையும் சந்தேகப் பேய் தொற்றிக் கொண்டது. தன்வீரர்களையும், விசுவாசிகளையும் சந்தேகப்பட்டார். இதன் விளைவு இக்கட்டான கட்டங்களில் அலெக்சாண்டருக்கு கைகொடுத்த விசுவாசிகளும். அவர் உயிரை காத்த பல வீரர்களும் அலெக்சாண்டரின் கையாலே கொல்லப்பட்டனர். இதனால் படைகளுக்குள்அதிருப்தி ஏற்பட்டது. எனவே தம் நாடு திரும்புவதே சிறந்தது என எண்ணி நாட்டை நோக்கிச் சென்றனர். இத்தருணத்திலேயே மாபெரும் வீரன் அலெக்சாண்டர் இறக்க வேண்டி ஏற்பட்டது. திரும்பும் வழியிலே கொடிய மாற்றமுடியாத நோய் அலெக்சாண்டரைப் பீடித்தது. எது செய்தும் அந்நோயைக் குணப்படுத்த முடியவில்லை. அவருக்கும் புரிந்துவிட்டது. தான் சாவை தழுவப்போகிறார் என்று இவ்வாறாக வரும்வழியிலேயே அந்த மாவீரன் அலெக்சாண்டர் இறக்க வேண்டி ஏற்பட்டது. அலெக்சாண்டர் சாவைத் தழுவும் போது அவருக்கு வெறும் 33 வயது தான் என்பது வியப்புக்குரியது.



க.மயூரன்
மாதகல்.

# இளவல்கள் வட்டம்

## கேள்விக்கென்ன பதில்?- 65 இன் சரியான விடை

முதலில் தாயும் தந்தையும் விளக்கை எடுத்துக்கொண்டு குகையைக் கடக்கிறார்கள். இதற்கு 2 நிமிடம் ஆகும். அடுத்து தந்தை குழந்தைகள் இருக்கும் இடத்துக்கு வருகிறார். இதற்கு ஒரு நிமிடமாகும். இப்போது குழந்தைகள் இருவரும் அம்மாவிடம் வருகிறார்கள். இதற்கு 5 நிமிடமாகும். அடுத்த அம்மா கணவன் இருக்கும் இடத்தை நோக்கிச் செல்கிறார். இதற்கு 2 நிமிடமாகும். இப்போது தாயும் தந்தையும் ஒன்றாக இணைந்து குகை யைக் கடக்கிறார்கள். இதற்கு 2 நிமிடமாகும். ஆகவே மொத்தக் குடும்பமும் 12 நிமிடங்களில் குகையைக் கடந்து செல்ல முடி யும்.

## கேள்விக்கென்ன பதில்?- 65இற்கு எவரும் சரியான பதில் அளிக்கவில்லை

## கேள்விக்கு என்ன பதில்?-67

உலகமகா ஆங்கிலக் கவிஞர் ஷேக்ஸ்பியர் பிறந்து, வளர்ந்து பின்னர் இறுதிக்காலத்தில் உயிர் துறந்த இடம் எது? அவர் எங்கே அடக்கம் செய்யப்பட்டார்? சரியான விடைகளை 08.04.2010இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

### இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பி வையுங்கள்.

பெயர் :-....................................
முகவரி :-....................................
:-....................................
.................... ....................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகளில் வாழ்தல்

நினைவுகள் மனிதனுக்கு மிகவும் முக்கியமானவை. ஒருநாளில் பல மணித்துளிகளை அவன் நினைவுகளில் வாழ்வதற்காகவே செலவழிக்கின்றான். இன்பமான நினைவுகள், துன்பமான நினைவுகள் எனப் பல நினைவுகள் தினமும் எமது மனதில் நிழலாடிச் செல்கின்றன. வாழ்க்கையில் சில முக்கியமான கணங்களின் நினைவுகளை உயிர்ப்போடு பேணுவதன் மூலம் அவன் வாழ்வில் ஒரு உந்துதலைப் பெற்றுக் கொள்கின்றான். அதனால்தான் அவற்றைப் புகைப்படங்களிலும், வீடியோக்களிலும் பதிவு செய்து மீளவும் மீளவும் அனுபவிக்க விரும்புகின்றான்.

இயேசுவும் தனது இறையாட்சிப் போதனையையும், செயற்பாட்டையும் தொடர் நினைவாகப் பேணுவதற்கு ஒரு சடங்கை ஏற்படுத்துகிறார். யூத மக்கள் தாம் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீண்டுவந்த வரலாற்று அனுபவத்தை நினைவு கூற கொண்டாடி வந்த பாஸ்கா உணவையே இயேசு ஒரு புதிய நினைவின் மையமாக மாற்றுகிறார். அப்பத்தை எடுத்து இது என் உடல் என்றும் இரசத்தை எடுத்து இது




என் இரத்தம் என்றும் கூறி ''இதை என் நினைவாகச் செய்யுங்கள்'' என்று பணிக்கின்றார். அது முதல் அப்பத்தை உண்டு கிண்ணத்தில் பருகும்போதெல்லாம் இயேசுவின் பாடுகள் மரணம் உயிர்ப்பை; அவர்தமது வாழ்வையே விளிம்புநிலை மக்களுக்காக தாரை வார்த்த வகையை நினைவு கூர அவருடைய சீடர்கள் தூண்டப்பட்டனர். இவ்வாறு இயேசு தமது நினைவுகளைப் பொதிந்து உருவாக்கிய நற்கருணை என்னும் அருட்சாதனம் உருவாக்கப்பட்ட நிகழ்வைத்தான் இப்பெரிய வியாழனில் கிறிஸ்தவர்கள் கொண்டாடுகிறார்கள்.

இவ்வாறு இயேசுவின் நினைவை நாம் மீட்டிக் கொள்கின்றபோது அந்த நினைவுகளில் இருந்து ஒரு சவால் பிறக்கிறது. அந்தச் சவாலில் ஒரு அழைப்பு உள்ளது. இயேசு எவ்வாறு தம்மையே மறுத்து விளிம்புநிலை மக்களுக்காக சிலுவையை ஏற்றாரோ அதுபோல நாமும் துன்புறும் எம் சகோதரருக்காக சிலுவை சுமக்க அழைக்கப்படுகின்றோம். செய்வோமா?

அருட்பணி.ம.வி.இரவிச்சந்திரன்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழக 25 ஆவது பட்டமளிப்பு விழாவில் நுண்கலைமாணிப் பட்டம் (சித்திரமும் வடிவமைப்பும்) பெற்ற

**திரு.புனிதநாதன் சுஜீப்குமார்**

[B.F.A(Hons)] அவர்களையும்

பொருளியல் சிறப்புக் கலைமாணிப் பட்டம் பெற்ற

**திருமதி வேணுகாராணி சுஜீப்குமார்**

[B.A(Hons)] 1st class

அவர்களையும் பாராட்டுவதுடன் நயினை நாகபூசணி அம்மன் அருளால் மேலும் பல பட்டங்கள் பெற்றுச் சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

பாலசுப்பிரமணியம் குடும்பத்தினர்,
நயினாதீவு - 07.

(96227)

புனிதநாதன் குடும்பத்தினர்,
நயினாதீவு 02.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**சிவஞானம் இதயதீபன்**
(கழகச் செயலாளர்)
B.A. (Hons)
(Sociology SPl)



**தங்கராசா கௌசியா**
B.A. (Hons)



**நடராசா லோகிதன்**
B.com (Mark.Spe)

விஷ்ணு வழிவந்து பல்கலைக்கழகம் சென்று பல்கலையும் கற்று இருபத்தைந்தாவது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்று எமது ஊருக்குப் பெருமை தேடித்தந்த செல்வங்களே! என்றும் உங்கள் பெருமை மேலும் உயர்வடைய எல்லாம்வல்ல கருகப்பை ஈஸ்வரனை வேண்டுகின்றோம்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

(96203)

ஸ்ரீ விக்னேஸ்வரா வி.கழகம், அறிவொளி ஐக்கிய சனசமூக நிலையம்,
மகாத்மா காந்தி ச.ச.நிலையம், மகாத்மா ஜீ.ச.ச.நிலையம்.

இலவச கருத்தரங்கும் அனுமதி வழங்கலும்

**Director, International Admission : Available Here**

A/L 3 பாடங்களில் சித்தி உள்ளதா???

இந்தியாவில் இருந்து வருகை தந்திருக்கும் கல்லூரியின் பிரதிநிதி பங்குபற்றுகிறார்

Spot Admission

Free Counselling

SONA COLLEGE OF TECHNOLOGY.
SALEM, INDIA.
Prof.M.A .MANIKANDAN B.Sc(Hons), MCA, M.Phil, Ph.D
The Director,
International Admissions & Relations.

வடமராட்சியில் (முடிவுற்றது)
Beacon Study Centre, Nelliady
30.03.2010 செவ்வாய்க்கிழமை 9.30am

தென்மராட்சியில்
Science Centre ,Chavakachcheri
மணியம்மாஸ்டர் (மயாகடை சந்தி)
31.03.2010 புதன்கிழமை 09.00am

யாழ்ப்பாணத்தில்
Science hall
01.04.2010 வியாழக்கிழமை, 11.00am

மாணவர்களையும் பெற்றோர்களையும் இந்நிகழ்வில் பங்குபற்றி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்

SONA COLLEGE OF TECHNOLOGY
Sona Nagar, Salem - 636005, Tamilnaadu, India
APPROVED BY AICTE. AFFILIATED TO ANNA UNIVERSITY & ISO CERTIFIED

V4 Educational Consultancy(Pvt)Ltd
"Catalyst for your higher studies"

நேரில் சந்திக்க விரும்புபவர்கள் முன் அனுமதியுடன் இன்றும் நாளையும் எமது அலுவலகத்தில் சந்திக்கலாம்.

Head Office-
#7-1/1, W.A.Silva mawatha, Wellawatte, Colombo-06,
Web: http:llwww.v4edu.com

T.P- 0773867257
0775936343
0217200999

Branch-
10, Palaly Road, Jaffna.
Email: mail@v4edu.com

## 400 மாணவர்களுக்கு காலணிகள், காலுறைகள்

மட்டுவில், சந்திபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் 400 மாணவர்களுக்கு நேற்று முன்தினம் பாதணிகளும், காலுறைகளும் வழங்கப்பட்டன.

மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி வித்தியாலயத்திற்கு அண்மையில் விஜயம் செய்தபோது மாணவர்களுக்கு காலணிகளும், காலுறைகளும் வழங்கப்படும் என்று உறுதியளித்திருந்தார்.

அதன்பிரகாரம் நேற்று முன்தினம் மாணவர்களுக்கு காலணிகளும், காலுறைகளும் வழங்கப்பட்டன. (ஓ-207)

## நூல்வெளியீட்டு நிகழ்வு

ஊரெழு மீனாட்சி அம்மன் ஆலய 'திருவூஞ்சலும் திருப்பதிகமும்' நூல் வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு அம்பாளுக்கு இடம்பெறும் மாலைநேரப் பூசை வழிபாட்டைத் தொடர்ந்து ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (50-201)

## மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி

★ இடம்: கொத்துக்கட்டி (கொத்தத்துறை), வட்டுக்கோட்டை.
★ காலம் : 04.04.2010 ஞாயிற்றுக்கிழமை.
★ நேரம் : பிற்பகல் 01 மணி.

பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அராலி மேற்கு.

விவசாயிகள்.

## வாழ்த்துகின்றோம்



சரசாலை வடக்கு இந்து மன்ற செயலாளரும், நித்திலா மகளிர் சங்கத் தலைவரும் யா/ஸ்ரீகணேச வித்தியாலய உப அதிபருமாகிய

திருமதி

**கமலேஸ்வரி ஞானச்சந்திரன்**

(SP.Tr. Maths, B.A., PGDE MERIT)

அவர்கள் 28.03.2010 இல் யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா பட்டம் பெற்றதையிட்டு வாழ்த்தி, மேலும் பல பட்டங்கள் பெற்று வாழ்வில் வளம் பெற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்தும்:
வே. நகுலன் (பழைய மாணவன்)
யாழ்.ரெக்ஸ்.

(சி/566311)

## சேவை நலன் பாராட்டு



எமது பாடசாலையில் கடந்த 9 வருடங்களாக சேவையாற்றி 16.09.2009 அன்று ஓய்வுபெற்ற ஆசிரியர்

**திரு.சோதிலிங்கம் இலட்சுமிகாந்தன்**

அவர்களின் சேவையைப் பாராட்டுவதோடு தொடர்ந்தும் அவர் நல்வாழ்வு வாழ இறைவனை வேண்டுகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/உடையாப்புலம் மெ.மி.த.க வித்தியாலயம், ஆனைக்கோட்டை.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழகத்தில் 25ஆவது பட்டமளிப்பு விழாவில் கலைமாணி B,A(Hons) பட்டம் பெற்ற

**வைரவநாதன் கிருபாகரன் (கிருபா)**

அவர்களை ஆழ்கடல் அலை போல என்றென்றும் ஓயாது கல்வி கேள்விகளில் மேன்மேலும் உயர்ந்து மேலும்பல பட்டங்கள் பதவிகள் பெற்று- பாரினில் பண்பாளனாய் பல்லாண்டு வாழ மனமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:

நாகேஸ்வரன் புஸ்பராணி குடும்பத்தினரான
கலின்,ஆசா,கமல்,கீதா ,விமல், கருணா குடும்பம்
(குடமியன் வரணி).

(96191)

யோகராசா விஜயலலிதா
குடும்பத்தினரான
அர்ச்சனா,அபிரா,அரவிந்தன்
(படித்த மகளிர் திட்டம்,மிருசுவில்).

பாராளுமன்றப் பொது தேர்தல் 2010

தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி



அழுத்தங்களுக்கு அடிபணியாது
சலுகைகளுக்கு விலை போகாது
வரித்துக்கொண்ட கொள்கைக்காக
தாயகத்திலும் புலத்திலும்
மக்களோடு மக்களாக நின்று உழைத்தவன்.

செல்வராசா கஜேந்திரன்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
முன்னாள் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர்



X 12

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்

மாபெரும் மலிவு விற்பனை

தரமான மாபிள்கள், குளியலறைச் சாதனங்கள் பிளாஸ்ரிக் கதவுகள் போன்றவற்றை 40% இற்கும் மேற்பட்ட விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ள இன்றே விரையுங்கள். இச்சலுகை 01.04.2010 தொடக்கம் 10.04.2010 வரை மட்டுமே.

TPS சர்வதேச நிறுவனம்
481, காலி வீதி,
மொறட்டுவ.

TPS சர்வதேச தனியார் நிறுவனம்
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(பஸ்நிலையம் முன்பாக)
தொடர்பு: 0777578277
0775702253

(96182)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் பிரதேச விளையாட்டுப் போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் சம்பியன்

வலி.வடக்கு,ஏப்.1

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் அரியாலை ஐக்கிய் விளையாட்டுக்கழகம் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

தடகளப் போட்டிகளில் சிறந்த தடகள வீரராகக் கொக்குவில் மத்திய் சனசமூக நிலைய விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த எ.ஸ்ரீநிவாசும் சிறந்த கள வீரராகக் கொக்குவில் தலையாழி இந்திரா விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த என்.ஆதித்தனும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

பெண்களுக்கான சிறந்த தடகள வீராங்கனையாக அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த எஸ்.பானுஷா தெரிவுசெய்யப்பட்டார்.

2010 ஆம் ஆண்டுக்கான நல்லூர் பிரதேச செயலக சிறந்த மெய்வல்லுநராக கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எ.ஸ்ரீநிவாஸ் தெரிவுசெய்யப்பட்டார்.

நடந்த மெய்வன்மைப் போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம் 122 புள்ளிகள், கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் 53 புள்ளிகளையும், தலையாழி இந்திரா விளையாட்டுக்கழகம் 18 புள்ளிகளையும் பெற்று முதல் மூன்று இடங்களையும் பெற்றுள்ளன.

மொத்த விளையாட்டுக்களிலும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம் 165 புள்ளிகளையும் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்ஒகழகம் 75 புள்ளிகளையும், நண்பர்கள் விளையாட்டுக்கழகம் 25 புள்ளிகளையும் பெற்று முதல் மூன்று இடங்களையும் பெற்றுக் கொண்டன. (6-86)

## நல்லூர் பிரதேச கபடிப் போட்டியில் பொற்பதி இந்து வி.க. சம்பியன்

நல்லூர், ஏப். 1

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான கபடிப் போட்டியில் பொற்பதி இந்து விளையாட்டுக்கழகம் சம்பியனாகியது.

கொக்குவில் தலையாழி இந்திரா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் பொற்பதி சிவ குரு விளையாட்டுக்கழகமும் பொற்பதி இந்து விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் இறுக்கமாக விளையாடிக் கொண்ட போதிலும் இரண்டாம் பாதி ஆட்டத்தில் பொற்பதி இந்து விளையாட்டுக்கழகம் முன்னிலையில் காணப்பட்டது.

முதல் பாதி ஆட்டத்தில் பொற்பதி இந்து விளையாட்டுக்கழகம் 17:12 புள்ளிகள் என்ற அடிப்படையில் காணப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் துடிப்புடன் களமிறங்கிய போதிலும் பொற்பதி இந்து விளையாட்டுக்கழகம் 15:07 புள்ளிகள் எனும் அடிப்படையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட இறுதியில் பொற்பதி இந்து விளையாட்டுக்கழகம் 32:19 புள்ளிகள் எனும் அடிப்படையில் பொற்பதி சிவ குரு விளையாட்டுக்கழகத்தை வெற்றிபெற்று சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது. (6-86)

## மாணவர்களுக்கு திங்கள் பரிசளிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.1

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மை, பெருவிளையாட்டு நிகழ்வுகளில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவும் சிறப்பு விருந்தினராக கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவனும் கலந்து கொள்வர்.

மேற்படி போட்டிகளில் பரிசுபெற்ற மாணவர்களையும் ஐந்து கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைப் பொறுப்பாசிரியர்களையும் தவறாது சமூகமளிக்குமாறு யாழ். மாவட்ட விளையாட்டுக் குழுத் தலைவர் அறிவித்துள்ளார். (201)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்



நல்லூர்ப் பிரதேச செயலாளர் பிரிவில் நடைபெற்ற தடகளப் போட்டியில் உயரம் பாய்தலில் சாதனை படைத்த காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஈ.ஜெயரூபன் உயரம் பாய்ந்து சாதனை புரிவதைப் படத்தில் காணலாம்.

## நல்லூர்ப் பிரதேச விளையாட்டுப் போட்டியில் உயரம் பாய்தல்,ஈட்டி எறிதலில் புதிய சாதனைகள்

வலி.வடக்கு,ஏப்.1

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடைபெற்ற தடகளப் போட்டிகளில் பல புதிய சாதனைகள் படைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டிகளில் ஆண்கள் பிரிவில் இரண்டும், பெண்கள் பிரிவில் ஒன்றுமாக மூன்று சாதனைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2008 ஆம் ஆண்டு பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த ஆ.சானுஜா 1.35 மீற்றர் உயரம் பாய்ந்தார். கொக்குவில் மத்திய விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த ஆர்.தரசுதா 1.38 மீற்றர் உயரம் பாய்ந்து புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

ஆண்களுக்கான போட்டியில் உயரம் பாய்தலில் 2009 ஆம் ஆண்டு அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த இ.பாலசங்கர் 1.76 மீற்றர் உயரம் பாய்ந்து ஏற்படுத்திய சாதனையை வண்ணார் பண்ணை காமாட்சி அம்பாள் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த ஈ.ஜெயரூபன் 1.85 மீற்றர் உயரம் பாய்ந்து புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

ஈட்டி எறிதல் போட்டியில் 2009ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் கொலிஸ்ரார் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த எஸ்.வாகீசன் 45.30 மீற்றர் தூரம் எறிந்து ஏற்படுத்திய சாதனையை நல்லூர் ராஜா விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த கே.ஹொசான் 47.11 மீற்றர் தூரம் எறிந்து புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளார். (6-86-23)

## 50 மைல் தூர சைக்கிள் ஓட்டப்போட்டி

யாழ்ப்பாணம், ஏப்.1

யாழ்ப்பாணம் கிறின் கிங்ஸ் சனசமூக நிலையத்தின் 45 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்படும் 50 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (6-23)

### மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

## 'கிறீன் கிங்ஸ்' கழகத்தை வீழ்த்தி சம்பியனானது கலைச்சுடர் வி.க.

யாழ்ப்பாணம்,ஏப்.1

மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கலைச்சுடர் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

'போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் அமைப்பின்' அனுசரணையுடன் அணிக்கு 6 பேர் பங்குபற்றும் 5 ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி நடத்தப்பட்டது.

இதன் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை கொய்யாத்தோட்ட விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் யாழ்ப்பாணம் 'கிறீன் கிங்ஸ்' விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ்ப்பாணம், இராசாவின்தோட்டம் கலைச்சுடர் விளையாட்டுக்கழக அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய 'கிறீன் கிங்ஸ்' விளையாட்டுக்கழக அணியினர் சகல விக்கெட்டினையும் இழந்து 35 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் நவநேசன் 20 ஓட்டங்களை தமது அணிக்காகப்பெற்றுக் கொடுத்தார்.

பந்து வீச்சில் கலைச் சுடர் விளையாட்டுக்கழக அணிவீரர்களை கங்கா, சாந்தன் ஆகியோர் முறையே இரண்டு விக்கெட்டுகளையும் டினேஸ் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

36 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி எனக் களமிறங்கிய கலைச்சுடர் விளையாட்டுக் கழக அணியினர் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 36 ஓட்டங்களைப் பெற்று சம்பியனானது.

கலைச் சுடர் விளையாட்டுக்கழக அணி வீரர்களான சாந்தன் 22 ஓட்டங்களையும் டினோஸ் ஆறு ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். (6-23)

### விளையாட்டு வீரர்களைக் கௌரவிக்க


## 'வர்ண இரவும் கலாசார நிகழ்வும்' திங்களன்று வீரசிங்கம் மண்டபத்தில்

யாழ்ப்பாணம், ஏப்.1

வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டு அமைச்சின்கீழ் உள்ள திணைக்களமும், காலசாரத் திணைக்களமும் இணைந்து நடத்தும் 2010 ஆம் ஆண்டுக்கான 'வர்ண இரவும் கலாசார நிகழ்வும்' எதிர்வரும் 5ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய மட்டப் போட்டிகளில் வெற்றிபெற்ற வீர, வீராங்கனைகள் மற்றும் விளையாட்டுத்துறைக்குத் தங்களை அர்ப்பணித்துச் செயற்பட்ட மூத்த விளையாட்டுத்துறை விற்பன்னர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். தொடர்ந்து கலை நிகழ்வுகளும் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (6-23-325)





யாழ்.மாவட்டத் தாச்சிச் சங்கம் நடத்திய தாச்சிச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் பண்டத்தரிப்பு சாந்த விநாயகர் விளையாட்டுக் கழகமும் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொள்வதையும்-
தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற வேட்பாளர்களான மாவை சேனாதிராஜா, 'உதயன்', 'சுடர் ஒளி' பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்டு உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

எனது ஆருயிர் நண்பனும் CDB யாழ். கிளையின் முகாமையாளருமாகிய திரு.பொ.அச்சுதம்பிள்ளை அவர்களின் மகள்



## கார்த்திகா அச்சுதம்பிள்ளை

அவர்கள் 27.03.2010 அன்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற 25 ஆவது பட்டமளிப்பு விழாவில் B.B.A(Hons) Special in Financial (1ST Class) பட்டம் பெற்றமையையிட்டு இவரைப் பாராட்டுவதுடன் மேலும் பல பட்டங்கள் பெற்று சகல செல்வங்களுடன் வாழ்வில் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

621,பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

வாழ்த்துவோர்:
S.நிற்கந்தா(காந்தி)குடும்பத்தினர்,
S. விஜயராணி.


## அச்சுவேலி மேற்கில் மக்கள் சேவை நிலையம்

பொதுநிர்வாக அமைச்சால் யாழ். மாவட்டத்தில் கிராமமட்டத்தில் மக்களுக்கு நிர்வாகத்தை வழங்குவதற்குரிய முதலாவது மாதிரி நிலையமான மக்கள் சேவை நிலையம் நேற்று புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு அச்சுவேலி மேற்கு, தோப்புக்கிராமத்தில் கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்ராஸ் தலைமையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷும், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்டமேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினிவரதலிங்கமும் கலந்து கொண்டனர். மேற்படி சேவை நிலையத்தினூடாக கிராம சேவகர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர், விவசாயப் போதனாசிரியர் ஆகியோர் தமது சேவைகளை வழங்கவுள்ளனர். (201-121)

## ஆசிரிய கலாசாலை பயிற்சிச் சான்றிதழ்

யாழ்ப்பாணம்.ஏப் 1

கடந்த 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற ஆசிரிய இறுதிப்பரீட்சைக்கு கோப்பாய் கலாசாலை மூலம் தோற்றி சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ்களை கலாசாலை கடமை நேரத்தில் குறித்த ஆசிரியர்கள் நேரில்வந்து பெற்றுக்கொள்ளுமாறு கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை அறிவித்துள்ளார். (ஒ)


# தமிழர் விடுதலைக் கூட்டணி
## நாடாளுமன்றத் தேர்தல் 08.04.2010



இல 01

பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள், வன்னி மக்கள், சிறையிலும் தடைமுகாம்களிலும் அனுபவிக்கின்ற துன்ப, துயரங்களுக்கு பரிகாரம் காண விழைவது தமிழர் விடுதலைக் கூட்டணி



த.தி.சம்பந்தர்JP
ஏழாலை
இல 03

எனவே உதயசூரியனுக்கு வாக்களித்து
இலக்கம் 1 க்கும் இலக்கம் 3 க்கும் விருப்பு வாக்குகளை அளித்து வெற்றிபெறச் செய்யுங்கள்.

(95924)



# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் -2010

தகைமை உடையவர்களையே எமது பிரதிநிதிகளாக்குவோம்





ஒறேற்றர்
சுப்பிரமணியத்தின்
ஸ்கந்தவரோதயா
ஆசிரியர் குழாத்தின்
தலைமகன் முன்னாள் ஆங்கில ஆசிரியர்
A.G.N. விஜயரத்தினம் B.A.(London)
(முன்னாள் ஆங்கில ஆசிரியர்-சுழிபுரம் விக்ரோறியா, காரை. இந்து)
அவர்களுடைய மகன் கலாநிதி.கென்னடி விஜயரத்தினம் அவர்களை
முற்போக்கான கல்விச் சமூகத்தைக் கட்டியெழுப்ப ஆதரிப்போம்.

ஸ்கந்தா பழைய மாணவர்கள், காரைநகர்.

எளிமை, தகைமை, அர்ப்பணிப்பு.

கலாநிதி. கென்னடி விஜயரத்தினம் M.A, Ph.D)

(முன்னாள் ஆங்கில விரிவுரையாளர்-கிழக்குப் பல்கலை)

(இ-4044)

தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி
(அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்)

X 7

இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்



# பாராளுமன்றப் பொதுத் தேர்தல் 2010

இறுதியாய் இடர்பட்ட அந்த நாள்களில்...
இடர் தணித்து இரணம் துடைத்து
உயிர்காக்க உம் அருகில்
நாம் இருந்தோம் அங்கு....
இனியும் இனிதாய் உம்பணி தொடர....
வாக்களிப்பீர் வழம்பெறுவீர்!

வைத்திய கலாநிதி
வீ.சண்முகராஜா
(ராஜா டொக்ரர்)



X 8

ஈழவர்ஜனநாயக முன்னணி
(ஈரோஸ்)



# ஒரு புதிய அரசியற் பண்பாடு நோக்கி.



பத்மினி சிதம்பரநாதன்
B.A(Hons),PGDip.in.ed

பத்மினி சிதம்பரநாதன்

2010 ஏப்ரல் 08
நாடாளுமன்றத் தேர்தலில்

தமிழர்களின் வாழ்வில் மீட்சி
தமிழ்ப் பெண்களின் வாழ்வில் பெரும் முன்னேற்றம்

இலங்கையில் சமாதானம் மலர இருதேசம் ஒருநாடு

உலக நாடுகளில் போருக்குப் பிந்திய சமூகங்களில் பண்பாடுகள் சீரழிந்துபோய்ச் சமூகங்கள் அழிவுக்குட்பட்ட வரலாறுகளை நாம் கண்டுள்ளோம். நமது தமிழ்ச் சமூகத்திற்கும் அந்தக்கதி ஏற்படாமல் பாதுகாக்கவும், தமிழ்ச்சமூகத்தை மீட்டெடுத்து விடுதலை காணவும் நாம் முயற்சி செய்யவேண்டும். அம்முயற்சியில்,

1. நீங்களும் நாங்களும் சேர்ந்து ஈடுபட உங்கள் ஒத்துழைப்பை நாடுகிறோம்.
2. இப்பணிக்கான அங்கீகாரத்தைப் பெற பத்மினி சிதம்பரநாதனுக்கு உங்கள் ஆதரவை நாடுகிறோம்.

தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி
அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்

X 5

கருத்துப் பகிர்வுக்கு :- 021 222 3940
www.spathmini.com
(படங்களைப் பார்வையிடலாம்)


# நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பிதழும்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 20 | 22 |
| 02 | 02 |
| 1937 | 2009 |

## அமரர் திருமதி புவனேஸ்வரி பரமேஸ்வரன்

அன்னாரின் பிரிவறிந்து நேரிலும், தொலைபேசி மூலமும் ஆறுதளித்தவர்களுக்கும், மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் பல வகைகளில் உதவி புரிந்தவர் களுக்கும், மற்றும் கரவெட்டி விக்னேஸ்வரக்கல்லூரி அதிபர், ஆசிரிய மாணவ, பழைய மாணவர்களுக்கும் எமது இதயங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டு 04-04-2010 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில், பம்பலப்பிட்டி இல. 75, லோரன்ஸ் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போஷனத்திலும் கலந்து கொள்ளுமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்: பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாயில் - யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி




(சென்றவாரத் தொடர்ச்சி)

எஸ்.கே.யோகராஜன் வவுனியா தேசியக் கல்வியியியற்கல்லூரியில் உப பீடாதிபதியாகக் கடமையாற்றிய பின்னர் மேலக பீடாதிபதியாக 2005.01.01இல் பதவியேற்று இன்று பீடாதிபதியாக இருந்து கல்லூரியை சிறந்த முகாமைத்துவத்துடன் வழிநடத்திச் செல்கின்றார்.

கல்லூரியில் 39கல்விசார் உத்தியோகத்தர்களும் 29கலாசார ஊழியர்களும் பணிபுரிகின்றனர். உபபீடாதிபதிகளாக மூன்று பெண் விரிவுரையாளர்கள் பணிபுரிகின்றனர். கல்லூரியின் வளர்ச்சியில் மாணவர்களும் விரிவுரையாளர்களும் கல்விசாரா ஊழியர்களும் ஒன்றிணைந்த நிலையில் பணிபுரியும் ஆரோக்கிய நிலையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. கல்லூரிக்கு முன்பாக விளையாட்டு மைதானத்துக்கு 18பரப்பு நிலம் 45லட்சம் ரூபா செலவில் கல்லூரிக்கு கல்விச் சமூகத்தால் கொள்வனவு செய்யப்பட்டிருப்பது நல்லதோர் எடுத்துக்காட்டாகும்.

கல்லூரி மாணவர்கள், ஊழியர்கள் மற்றும் கல்லூரிச் சமூகம் தொடர்பாக பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் கருத்துத் தெரிவிக்கையில், மாணவர்கள் தமது செலவில் பல லட்சம் ரூபாவைப் பயன்படுத்தி கணனிகளைத் திருத்திச் செயற்படவைப்பதையும் கட்டடங்களுக்கு மைபூசி புனரமைப்புச் செய்திருப்பதையும் எடுத்துக் கூறி பெருமைப்பட்டுக்கொண்டார்.

கல்லூரி வளாகத்துக்குள்ளே நுழையும்போது முகப்பு வளைவு கல்லூரியின் கட்டமைப்புக்குக் கட்டியம் கூறும் அதேவேளையில், கல்லூரியின் உள்ளே காணப்படும் சிற்பங்கள், சித்திரங்கள், பேசும் மொழி மெய்ம்மறக்கச் செய்கின்றது. நடைபாதையோரத்தில் தமிழ் நங்கைகளின் உருவம், தமிழ் போர்வீரர்களின் உருவம், மண்வெட்டி தோழில் சுமந்த விவசாயி வானத்தை உற்றுநோக்கும் முதியவர், மாட்டு வண்டில், மாட்டுத்தொட்டி, யானைப் பொம்மை, மனித முகத்தோற்றத்தில் மோட்டார் கார் போன்ற கலை வடிவங்கள் பிரமிக்கச் செய்கின்றன.

கல்லூரி வளாகத்தில் 250க்கு மேற்பட்ட மூங்கில் மரங்கள் ஓங்கி உயர்ந்து பச்சைப் பசேல் எனக் காட்சி அளிப்பது எல்லோரையும் கவருகின்றது. ஈரவலயத்திற்கு உரிய மூங்கில் உலர்வலயமான யாழ்ப்பாணத்தில் இப்படி வளருமா? என பிரமிக்கச் செய்வதோடு பல்வேறு சூழலில் இருந்து பயிற்சி பெற வருபவர்கள் பசுமையான ஆசிரியர்களாக வெளியேறுகின்றனர் என்பதை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.




கல்லூரி வளவில் வித்தகவிநாயகர் ஆலயம், கிறிஸ்தவ ஆலயம் ஆத்மீக ரீதியில் மாணவர்களை வழிப்படுத்துவதோடு பாடத்துறை ரீதியிலான மாணவர் மன்றங்கள் மாணவர்களை அந்தந்த பாடத்துறைகளில் மேலும் மெருகூட்டி வளர்த்துச் செல்கின்றன.

விஞ்ஞானப் பாடத்துறை மாணவர்களின் மூலிகைத் தோட்டம் மற்றும் பாடத்துறையினரின் கட்டமைப்புக் கல்வி வெளிப் பாட்டை துலாம்பரப்படுத்துகின்றது. 26வகுப்பறைகள் குமரி கோட்டம் (பெண்கள் விடுதி), குமரன் கோட்டம் (ஆண்கள்விடுதி), லயன் தியாகராசா படிப்பகம், நிர்வாக அலகு நூலகம், கலை அரங்கம், தருமலிங்கம் மண்டபம், கல்விக்கோட்டம், சித்திரக்கூடம், நடன கூடம், பொது மண்டபம் என்பன கல்லூரியின் செயற்பாடுகளுக்கு வளம் சேர்த்து ஓங்கி உயர்ந்து விளங்குகின்றன. (முற்றும்)

**ஞானஆதவன்**

# வலி.கிழக்கின் தரவை நிலப்பிரதேசம்



வலிகாமம் கிழக்கு பிரதேசத்தின் கிழக்கு, தெற்கு எல்லைப் பிரதேசத்தில் தரவை நிலப்பகுதி காணப்படுகின்றது. இதனையடுத்து தொண்டைமானாறு- செம்மணி கடல் நீரேரி காணப்படுகின்றது.

இவ் தரவை நிலப்பகுதி வண்டல் களி சார்ந்த் மண்ணைப் பெருமளவில் கொண்டுள்ளது. மிகச் சில இடங்களில் செம்மண் சார்ந்த களிமண் காணப்படுகின்றது.

இத்தரவை நிலப்பிரதேசம் ஆவரங்கால், புத்தூர், நீர்வேலி, கோப்பாய், இருபாலை பிரதேசத்தின் எல்லையாக பரந்து விரிந்து காணப்படுகின்றது.

இத்தரவை நிலப்பகுதிகளில் நெற்செய்கை, தெங்குச் செய்கை மற்றும் மரக்கறிப் பயிர்ச்செய்கை சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அத்துடன் இத்தரவைப் பகுதி கால்நடைகளில் மேய்ச்சல் நிலமாகவும் விளங்கி வருகிறது.

இவ்வளவு விவசாய அடிப்படைக் காரணிகளைக் கொண்ட இந்த நிலப்பகுதிக்கு அருகில் காணப்படும் உவர் நீர் பல்வேறு சந்தர்ப்பங்களில் இத் தரைப்பகுதிக்கு உட்புகுவதால் விவசாய நடவடிக்கைகள் பாதிப்படைவதாக விவசாயிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இப்பிரதேசத்தில் சிறந்த உவர் நீர்த் தடுப்பு அணையொன்று நிர்மாணிப்பதன் மூலம் நன்னீரைத் தேக்கி, இந்நிலப்பகுதியை உவர் நிலமாக மாறும் வீதத்தைக் குறைக்கலாம்.

இவ்வாறான உவர்நீர் தடுப்பு அணை பல்வேறு காலகட்டங்களில் நிர்மாணிக்கப்பட்டபோதும் அவையும் நீண்டகால பராமரிப்பு இன்றி பல இடங்களில் பாதிப்பு அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் உவர் நீர்த் தடுப்பு பல இடங்களில் சீரழிந்ததால் உவர்நீர் தரவை நிலப்பகுதிகளில் ஆங்காங்கே உட்புகுந்ததனால் இன்று அவை உவர்நீராக மாறிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக கடந்த சுனாமி ஆழிப்பேரலைத் தாக்கத்தினால் நீண்ட தூரத்திற்கு உவர்நீர் பரவியது. இதனால் மேலும் பலத்த பாதிப்பு ஏற்பட்டது.

அத்துடன் இப்பகுதியில் உள்ள கிணறுகள் பலவும் உவர்நீராக மாறிவிட்டது.

மேலும் கோப்பாய், நீர்வேலி, இருபாலை மற்றும் கைதடி மேற்கு, வடக்குப் பிரதேச எல்லைப்புற கிராமங்களில் உள்ள குடிநீர் கிணறுகள் பலவும் உவர் நீராகப் படிப்படியாக மாறிவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ் உவர் நீர்த் தடுப்பு அணை 1993-1994 ஆண்டு காலப்பகுதிகளில் பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினரால் ஓரழவு சீர்செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டதாகவும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட போர் அனர்த்த சூழலால் பின்பு கைவிடப்பட்டதாகவும் மக்கள் பலர் கூறுகின்றனர்.

எது எவ்வாறு இருந்தபோதிலும் தற்போதைய சூழ்நிலையில் இவ்விடயம் கவனத்தில் எடுக்கப்பட்டு சீர் செய்வதனால் விவசாய நடவடிக்கை மேலும் மேன்மையடைவதுடன் இப்பகுதி கிணறுகள் உவர் நீராக மாறும் வீதத்தைக் குறைக்கலாம் என்பது இப் பிரதேச மக்களின் பெரும் ஆவலென்பது குறிப்பிடத்தக்கது.

இத்தரவைப் பகுதியில் யாழ்.குடாநாட்டிற்கு நடு மையமாகச் சிறந்த விளையாட்டு மைதானம் அமைக்கக்கூடிய நில அம்சம் கோப்பாய் - நீர்வேலியை அண்டியதாகக் காணப்படுகின்றது. இதற்குச் சான்றாக தற்போது நீர்வேலி சவாரித்திடலில் வாரா வாரம் தமிழர்களின் பாரம்பரியப் பண்பாடுகளில் ஒன்றான மாட்டுவண்டில் சவாரிப்போட்டி சிறப்பாக நடத்தப்பட்டு வருவது சிறந்த சான்றாகும்.

இப்பகுதியை பிரதேச அபிவிருத்தியாளர்கள் பலர் சிறந்த விளையாட்டுத்திடல் ஒன்றை அமைப்பதன் மூலம் இலங்கையிலேயே முதல்தர விளையாட்டு மைதானமாக மாற்றலாம் என பலரும் கருத்துத் தெரிவிக்கின்றனர். ஏனெனில் யாழ்ப்பாணத்தில் இன்றுள்ள மைதானங்கள் பலவும் மிகவும் நகர்ப்புறம் சார்ந்த இடங்களிலேயே இருப்பதால் பல நெருக்கடிகள் ஏற்படுகின்றன.



(தொடரும்)

**கு.எழிலன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







தந்தை செல்வாவின் 112 ஆவது பிறந்ததின நிகழ்வு தந்தை செல்வா அறங்காவலர் சபையின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்றது. யாழ்.நகரிலுள்ள தந்தை செல்வாவின் நினைவு சதுக்கத்தில் நேற்று இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்நிகழ்வில் தந்தை செல்வா அறங்காவலர் சபையின் தலைவர் எஸ்.ஜெபநேசன், தமிழரசுக் கட்சியின் செயலாளர் மாவை சேனாதி ராஜா, அறங்காவலர் சபையின் பொருளாளரான சேவியர் குலநாயகம், அறங்காவலர் சபையின் செயலாளர் பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் ஆகியோர் தந்தை செல்வாவின் சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துவதை முறையே படங்களில் காணலாம். இரண்டாவது வரிசையில் நிகழ்விற்கு வந்திருந்த பிரமுகர்கள் மற்றும் பொது மக்களையும், நிகழ்வில் கலந்துகொள்ள வந்திருந்த தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். *(படங்கள்: சுகந்தன், தமிழினியன் )*

# காக்கைதீவு மீன்சந்தையை பழைய இடத்தில் நிறுவுக சாவற்காடு மீனவர் சங்கம் கோரிக்கை

காக்கைதீவுப் பகுதியில் அமைக்கப்படும் மீன்சந்தையை கடற்றொழிலாளர்களின் நலன் கருதி பழைய இடத்தில் காக்கைதீவு இறங்குதுறையில் அமைத்துத் தருமாறு சாவற்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் வலி.தென்மேற்குப் பிரதேச சபை செயலாளரைக் கோரியுள்ளார்.

காக்தைதீவில் அமைக்கபட்டுவரும் மீன் சந்தை குறித்து சங்கத் தலைவர் பிர தேசசபைச் செயலரிடம் மேலும் தெரிவித் திருப்பதாவது:

சாவற்கட்டு கடற்றொழிலாளர் காக்கை தீவுக் கடற்கரையிலுள்ள இறங்கு துறையிலிருந்து கடலுக்கச் சென்று மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருவது வழக்கம். இவர்களின் நன்மை கருதி இறங்குதுறைக்கு அருகிலேயே மீன்சந்தையும் பல வருடங்களாக இயங்கி வந்தது.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ் நிலையைத் தொடர்ந்து காக்கைதீவு இறங்க துறையில் இயங்கி வந்த மீன்சந்தை பாதுகாப்பு படையினரின் கட்டளையைத் தொடர்ந்து வேறு இடத்தில் இயங்கிவருகிறது.

தற்பொழுது நாட்டில் சமாதானச் சூழ் நிலை எற்பட்டதைத் தொடர்ந்து மீன்சந்தையை காக்கைதீவுப் பகுதியில் அமைப்பதற்குப் பாதுகாப்புப் படையினர் அனுமதி வழங்கியுள்ளனர். இதைத் தொடர்ந்து காக்கைதீவில் வேறு இடத்தில் சந்தை அமைக்கும் வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

தற்பொழுது அமைக்கப்படும் சந்தைப் பகுதி மீனவர்களுக்குப் பொருத்தமற்றதாக இருப்பதால் கடற்றொழிலாளரின் நன்மை கருதி, பழைய இடத்தில் இறங்கு துறைக்கு அருகில் இயங்குவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு செயலாளரை சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (ஒ-115)


## வகுப்புகள் ஆரம்பம்

சாவகச்சேரியில் பலரின் வேண்டுகோளுக் கிணங்க திருமதி எஸ்.கதிர்காமர், திருமதி எஸ். வி. ஜெபநேசன் ஆகியோரின் மேனாட்டிசை, ஆங் கிலப்பேச்சும் நாடகமும், ஆங்கில இலக்கியம் என்ற வெகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. நாடாளு மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை களுக்கு மாணவர்கள் அனுப்பப்படுவர்.

இடம்: கனகமனை, ஸ்ரேஷன் றோட், சாவகச்சேரி.

(வாகன சுத்திகரிப்பு நிலையத்திற்கு அருகில்)

பதிவு: 04.04.2010 மு.ப. 10 முதல் நண்பகல் 12 வரை

ஆரம்பம்: 09.04.2010 மு.ப. 10 முதல் பி.ப. 4 மணி வரை

தொ.இ: 077 9338203, 077 8057308, 021 222 2029 (9624)


## மரண அறிவித்தல்

### கந்தையா பவசிங்கம்



(ஓய்வுபெற்ற காசாளர், காப்புறுதிக் கூட்டுத்தாபனம் )

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிட மாகவும் கொண்ட கந்தையா பவசிங்கம் கடந்த 26.03.2010 வெள்ளிக் கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் சின் னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், நுணாவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற வல்லிபுரம் மற்றும் பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், கிருபா (முன் னாள் ஆசிரியை - உடுவில் மகளிர் கல்லூரி, (முன்னாள் உப அதிபர், மானிப்பாய் இந்துக் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும், சர்மிலி (சென்னை), கோசலி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோசுவா (பிரான்ஸ்), விக்ரர் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், சினேகா, நிகிற்றா ஆகியோரின் பாசமிகு பேரனும், ராஜசிங்கம், பாலசிங்கம், காலஞ்சென்றவர்களான குணசிங்கம், வீரசிங்கம் மற்றும் பரமேஸ்வரி (லண்டன்), தவ மேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதர னும், சாந்தி, திரு (கனடா), தயா (கனடா), அருளி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க வழிபாடு நாளை (02.04.2010) வெள்ளிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அவரது பூதவுடல் நல்லடக்கத்திற்காக உடுவில் கல்லறைத் தோட்டத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், மாணவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொ.பே.இல: 0213213532
டச்சுவீதி, உடுவில்.

தகவல்:
கிருபாபவசிங்கம் (மனைவி)


வடமராட்சி மண்ணின் மைந்தன்
தமிழ்ப் பிரதேசத்தின் முன்னவன்



எஸ். எக்ஸ். குலநாயகம்

அதிதீவிர, தீவிர, ஜனநாயக அரசியல் வழிமுறைகளில்
புடம் போட்டு எடுக்கப்பெற்ற
இலங்கைத் தமிழரசுக் கட்சியின்
( தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு )
இன்றைய முன்னவன், எங்கள் மூத்தவன். எங்கள் வாக்கு
எஸ். எக்ஸ். குலநாயகம் அவர்களுக்கே.
வடமராட்சி வாக்காளர்கள்

இலங்கைத் தமிழரசுக் கட்சி
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)
எஸ். எக்ஸ். குலநாயகம் 12


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர்ந்த உறவுகளின் பங்களிப்பு இன்றி தமிழர்களின் பிரச்சினைகளை நோக்க முடியாது

## பிரசாரக் கூட்டத்தில் வேட்பாளர் ஈ.சரவணபவன் கருத்து



யாழ்ப்பாணம்,ஏப்.1

வெளி நாடுகளில் வாழ்கின்ற புலம் பெயர்ந்த மக்களைத் தவிர்த்து, தமிழர் வரலாறு போராட்ட வரலாறு, எதிர்காலத் திட்டம் என்பவற்றை நோக்க முடியாது. ஈழத் தமிழர்களின் உரிமைகளுக்காகப் பாரியள வில் உதவிபுரிந்தும் உலக அரங்குகளில் குரல் கொடுத்தும் வருபவர்கள் புலம் பெயர் வாழ் தமிழர்களே! அவர்களின் ஒத்தாசை எமக்கு என்றும் அவசியமாகும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளர் ஈ.சரவணபவன்.

அண்மையில் வல்வெட்டித்துறையில் நடைபெற்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வன்னி மக்கள் யுத்தத்தின் கோரத் தாண்டவத்தால் பெருமளவில் கொலை செய்யப்பட்டும், சொத்துடைமைகள் அழிக்கப்பட்டும் பேரவலங்களைச் சந்தித்தபோது அந்தக் கொடூரங்கள் அனைத்திற்கும் எதிராகப் புலம்பெயர்வாழ் தமிழர்கள், தாம் வாழ்கின்ற நாடுகளில் உள்ள தூதரகங்களின் முன்பும் வீதிகளின் முன்பும் தமது நாளாந்தத் தொழில்களைக் கைவிட்டு - தமது அன்றாடச் செயற்பாடுகளைத் தவிர்த்து - தமிழர்களின் அவலங்களை உலகுக்குணர்த்தும் வகையில் சத்தியாக்கிரகப் போராட்டங்களையும் சாலைமறிப்புப் போராட்டங்களையும் நடத்தினர்.

இன்றும் புலம்பெயர்வாழ் தமிழர்களின் பங்களிப்பையே - ஆதரவையே - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் எதிர்பார்த்து நிற்கின்றது. அவர்களின் ஆலோசனைகளோடு தான் கூட்டமைப்பின் எதிர்காலச் செயற்பாடுகளும் இடம்பெறும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு புலம்பெயர்வாழ் தமிழர்கள் பேராதரவு வழங்குவார்கள் என நான் நம்புகின்றேன்.

உலக அஹிம்சைக்கே வரைவிலக்கணமாக வாழ்ந்தவர் தியாகி திலீபன். உயிர் நீத்த புனிதர்களின் கல்லறைகளுக்கு மரியாதை வழங்குவது உலகளாவிய பொதுப் பண்பு. ஆனால், தமிழர் தாயகமாகிய இங்கு தமிழர்களுக்காக குரல் கொடுத்து, காந்தீய வழியில் - அஹிம்சை வழியில் - போராடிய திலீப னின் நினைவுத்தூபி நாசகாரச் சக்திகளால் காட்டுமிராண்டித்தனமாக உடைக்கப்பட்டுள்ளது. மாவீரர்களின் கல்லறைகள் அனைத்தும் நாசம் செய்யப்பட்டுள்ளன. இந்தக் காட்டுமிராண்டிச் சக்திகளால் கல்லறைகளைத்தான் உடைக்க இயலுமே தவிர, மக்கள் மனங்களில் ஆழ ஊடுருவி வேரூன்றிய நினைவுகளை எவராலும் அழிக்கவோ, ஒழிக்கவோ முடியாது.

கூட்டமைப்பு கடந்த காலப் போராட்ட வரலாறுகளை மறந்து இந்தத் தேர்தலில் போட்டியிடவில்லை. புலம்பெயர்ந்த உறவுகளினதும் ஈழத்தமிழர்களினதும் தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்பவற்றை மனதில் நிறுத்தியே கூட்டமைப்பினராகிய நாம் எமது தேர்தல் கோட்பாடுகளை முன்வைத்துள்ளோம். நாம் எந்தச் சக்திகளுக்கும் என்றும் அடிபணியோம். தமிழர்களின் உரிமைகளுக்காகத் துணிந்து குரல் கொடுப்போம்.

ஆகவே, தமிழ் மக்களாகிய நீங்கள் கூட்டமைப்பின் கரங்களைப் பலப்படுத்தி, இந்தத் தேர்தலிலும் உங்களது வாக்குகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்குவதன் மூலம் நாடாளுமன்றத்தில் எமது பலத்தை அதிகரிக்க முடியும் - என்று தெரிவித்தார். (ஒ-3)

# நேர்மையற்ற தலைமை கொண்ட கூட்டமைப்புடன் 6 ஆண்டுகள் கஜேந்திரன் ஏன் காலம் கடத்தினார்?

## இப்படிக் கேள்வி எழுப்புகிறார் பிறேமச்சந்திரன்



தமிழ்மக்களின் விடுதலைக்காக நேர்மையாகச் செயற்படாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமையுடன் ஆறு ஆண்டுகளை கஜேந்திரன் ஏன் செலவழித்தார் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர் சுரேஷ் பிறேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகிய நாளிதழ் ஒன்றிற்கு கஜேந்திரன் தனது தேர்தல் பரப்புரை விளம்பரம் ஒன்றின் ஊடாக வழங்கியுள்ள கருத்துத் தொடர்பிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

கஜேந்திரனின் அந்த விளம்பரத்தில் -

''கடந்த 30 வருட கால தமிழ் தேசிய அரசியலில் தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைமை ஒரு நாள் கூட தமிழ் மக்களின் விடுதலைக்காக நேர்மையாகச் செயற்படவில்லை.

2001ஆம் ஆண்டு பாவமன்னிப்புக் கொடுத்து கூட்டாக அமைக்கப்பட்டதன் பின்னரும் கூட இவர்கள் மனச்சாட்சியுடன் செயற்படவில்லை.

நேர்மையாகச் செயற்பட்டிருந்தால் இன்று நாம் சந்தித்த மாபெரும் அழிவு தடுக்கப்பட்டிருக்கும். எமக்கு நல்லதொரு தீர்வு நிச்சயம் கிடைத்திருக்கும்.

இவர்களே இன்று உன்னத தமிழ் தலைவர்களாக எமக்கு சித்திரித்துக் காட்டப்படுகின்றார்கள்.'' - என்று விவரிக்கப்பட்டிருந்தது.

மேற்குறித்த கருத்துக்களை பார்க்கின்ற போது அவரது உண்மையான நிலைப்பாடு வெளிப்படுகின்றது. அவரது பேச்சும் செயலும் வேறு வேறாகவே உள்ளதை மேற்குறிப்பட்ட அவரது கருத்துக்களின் ஊடாகவே மக்களால் விளங்கிக் கொள்ள முடியும்.

அவர் குறிப்படுவது போன்று நேர்மையற்ற தலைமையைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் கடந்த ஆறு ஆண்டுகளாக அவர் ஏன் காலத்தைக் கடத்தினார்.

**மீண்டும் வருவதற்கு பிரயத்தனம் ஏன்?**

கூட்டமைப்பில் அங்கத்துவம் பெற்று ஒரு சில நாள்களிலேயே கூட்டமைப்பினை இனங்கண்டு அதில் இருந்து உடனடியாவே அவரால் வெளியேறியிருக்க முடியும். அவ்வாறான இதயசுத்தியுடன் கூடிய, மக்களுக்காகவும் தேசியத்திற்காகவும் தன்னையே அர்ப்பணித்த ஒரு புனிதரான அவர் மீண்டும் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கத்துவம் பெறுவதற்கு ஏன் மிகவும் பிரயத்தனப்பட்டார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கத்துவம் பெற்றுக்கொள்வதற்காக அவர் மீண்டும் மீண்டும் முயன்று அது பயனற்று போகவே வேறு குழுவாகப் பயணிக்க முடிவெடுத்தார் என்பது உலகம் அறிந்த விடயம்.

தமிழ் தேசியத்திற்காக வெவ்வேறு வழிகளில் உழைத்தவர்களே இன்று கூட்டமைப்பில் ஒன்று சேர்ந்து பயணிக்கிறார்கள். கூட்டமைப் பின் தலைமைக்கு பாவமன்னிப்புக் கொடுக்கும் அளவிற்கு 'இரட்சகர்'பட்டம் அவருக்கு யார் கொடுத்தது?

கூட்டமைப்பினை இழிவுபடுத்தும் வகையில் கூட்டமைப்பின் தலைமைக்கு பாவமன்னிப்புக் கொடுத்ததாக திமிர்த்தனமான சொற்பிரயோகத்தைப் பயன்படுத்துவதன் மூலம் அவரது அரசியல் முதிர்ச்சியின்மை வெளிப்படுகின்றது.

நேர்மையாகச் செயற்பட்டிருந்தால் இன்று நாம் சந்தித்த மாபெரும் அழிவு தடுக்கப்பட்டிருக்கும், எமக்கு நல்லதொரு தீர்வு நிச்சயம் கிடைத்திருக்கும் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

உண்மையில் சம்பந்தன், சுரேஷ் பிறேமச்சந்திரன், செல்வம் அடைக்கல நாதன், மாவை சேனாதிராசா ஆகியோரும் இவர்களைப் போலவே நாடாளுமன்ற உறுப்பினர்கள் தான்.

ஆனாலும் நாங்கள் மேற்குலக நாடுகள், இந்தியா, ஐக்கியநாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம் ஏன் இலங்கை அரசுடன் கூட வன்னிப் போரை நிறுத்தும்படி முடிந்தவரையில் பேச்சுக்களை நடத்தியிருந்தோம்.

ஆனாலும் அவை எதுவும் கைகூடவில்லை என்பதனை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம்.

இந்த இடத்தில் எங்கள் மீதான குற்றச்சாட்டுக்களை முன்வைத்தவர்களும் எங்களைப் போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் தான்,

இவர்கள் போரை நிறுத்துவதற்கு என்ன நடவடிக்கைகளை முன்வைத்தார்கள்?

இவர்கள் வெளிநாட்டு சக்திகளுடன் பேச்சுக்களில் ஈடுபட என்ன தடை இருந்தது?

இவர்கள் போரை நிறுத்துவதற்கான எத்தனை ஆலோசனைகளை ஏனைய அங்கத்தவர்களுக்கு வழங்கியிருந்தார்கள்?

இந்தக் கேள்விகளுக்கான பதில் என்பது ஒன்றுமே இல்லை என்பது மட்டும் தான்.

கஜேந்திரன் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வெளிவிவகாரக் குழுவின் தலைவராகவும் பத்மினி சிதம்பரநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் வெளிவிவகாரக் குழுவின் அங்கத்தவர்களாகவும் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இந்த நிலையில் வெளிவிவகாரக் குழு தானே வெளிவிவகாரங்களைக் கையாண்டு அவர்கள் பாணியில் சொல்வதனால் வன்னி மக்களை காப்பாற்றி, போரை நிறுத்தி நிச்சயமான இறுதித் தீர்வை எட்டியிருக்க வேண்டும்.

எமது அரசியல் பயணம் இழக்கப்பட்ட ஒவ்வொரு உயிர்களது அர்ப்பணிப்புக்களையும் மக்கள் கொடுத்த விலைகளையும் கருத்திலெடுத்தே நேர்மையுடன் பயணிக்கும் எமது பயணத்திற்கு இவ்வாறான அரசியல் வங்குரோத்துக்கள் எதுவும் தடைபோடப்போவதில்லை என்றும் சுரேஷ் பிறேமச்சந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)




# புதிய ஆட்சிக்கு ஆணை வழங்குவதற்கு குடாநாட்டு மக்கள் தயாராகிவிட்டனர்

## புதுயுகம் படைப்போம் என்கிறார் விஜயகலா மகேஸ்வரன்



யாழ்ப்பாணம், ஏப்.1

குடாநாட்டின் மக்களை அச்சுறுத்தும் சம்பவங்கள் தொடர்ந்து வருகின்றமை மிகவும் கவலையளிக்கும் விடயமாக உள்ளன. சாவகச்சேரியில் கப்பம் கோரிக் கடத்தப்பட்ட மாணவன் கபிலநாத் படுகொலை செய்யப்பட்டமை குடாநாட்டு மக்கள் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய பீதிகளை இல்லாதொழிக்க நாம் நடவடிக்கை எடும்போம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

நவாலியில் திங்கள்கிழமை மாலை இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது :-

யுத்தத்தின்போதும் யுத்தத்தின் பின்னரும் தமிழ் மக்கள் தொடர்ந்தும் துன்பங்களையே அனுபவித்து வருகின்றனர். யுத்தம் முடிவடைந்து 10 மாதங்களுக்கு மேலாகிவிட்டபோதிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னமும் உரிய நிவாரணங்கள் வழங்கப்படவில்லை.

நாம் ஆட்சி அமைத்ததும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் ஒவ்வொருவருக்கும் நிவாரணங்கள் வழங்கப்படும். வலிகாமம் வடக்கு உட்பட அதிஉயர் பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்படும். தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவர். புனர்வாழ்வு என்ற பெயரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர், யுவதிகள் விடுவிக்கப்படுவர்.

இதற்கெல்லாம் மேலாக அவசரகாலச் சட்டம் நீக்கப்படும். இதற்கான உறுதிமொழிகளையெல்லாம் எமது கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க வழங்கியுள்ளார்.

எனவே இவற்றையெல்லாம் செய்வதற்குக் குடாநாட்டு மக்கள் எமக்கு ஆணை வழங்க வேண்டும். என்னையும் எனது அணியில் போட்டியிடும் வேட்பாளர்களில் பலரையும் நீங்கள் தெரிவு செய்து நாடாளுமன்றம் அனுப்பினால் தென்பகுதியில் ஆட்சிமாற்றம் என்பது நிச்சயம்.

குடாநாட்டு மக்களை எவரும் ஏமாற்றி விட முடியாது. அவர்கள் இம்முறை ஆட்சி மாற்றத்துக்கான ஆணையை வழங்க முடிவு செய்துவிட்டனர். எனவே எதிர் வரும் 9ஆம் திகதி புதிய ஆட்சியில் நாம் புதுயுகம் படைப்பது உறுதி - என்றார். (ஒ)

# திகாமடுல்ல ஐ.தே. கட்சி வேட்பாளரின் வீட்டுக்கு 3ஆவது முறையாகக் கல்வீச்சு

தமண,ஏப்.1

திகாமடுல்ல மாவட்டத்தில், ஐக்கிய தேசிய முன்னணியில் போட்டியிடும் வேட்பாளர் எம்.ஏ.ஹஸனலியின் வீட்டிற்கு மூன்றாவது முறையாகக் கல்வீச்சு நடத்தப்பட்டிருக்கிறது. இச்சம்பவம் கடந்த சனியன்று இடம்பெற்றுள்ளது.

சம்மாந்துறை பஸார் வீதியில் அமைந்துள்ள இவரின் வீட்டிற்குத் தொடர்ந்து கல்வீச்சு வீசப்பட்டு வருகின்றது. ஏற்கனவே இரண்டு முறைகள் கல் வீசப்பட்டுள்ளது. கடந்த சனியன்று 2.00 மணியளவில் மூன்றாவது முறையாகக் கல் வீசப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஹஸனலி தெரிவிக்கையில், எனது ஆதரவு அதிகரித்துச் செல்வதை பொறுக்க முடியாத சிலரே இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். பல முறை சம்மாந்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இருந்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனக்கு பாதுகாப்பு அச்சுறுத்தலும் அதிகரித்துள்ளது. எனவே, மேற்படி சம்பவத்திற்கு பொறுப்பானவர்களைக் கைதுசெய்வதுடன், எனக்கு பாதுகாப்பு வழங்குமாறும் கேட்டுள்ளேன் - என்றார். (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைத்தீவு, வவுனியா வடக்கு வலயங்களின்

# ஆசிரியர்கள் நாளையும் மறுதினமும் சம்பளப் பட்டியலில் கையொப்பமிடலாம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 01

யாழ்.மாவட்டத்தில் தற்காலிக இணைப்பில் கடமையாற்றும் முல்லைத்தீவு, வவுனியா வடக்கு வலயங்களின் ஆசிரியர்கள் தங்களின் ஏப்ரல் மாதச் சம்பளப்பட்டியலில் கையொப்பம் இடுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிப்பாளர் மா.தேவேந்திரன் அறிவித்துள்ளார்.

அதன்படி பிரஸ்தாப ஆசிரியர்கள் நாளை வெள்ளிக் கிழமையும், மறுதினம் சனிக்கிழமையும் யாழ்.மேலதிக மாகாணக் கல்வி அலுவலகத்திற்கு சென்று கையொப்பமிடுமாறு பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஒ)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 25ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் முதுகலை மாணிப்பட்டம் பெற்ற

செல்வி தியாகராசா தர்சினி

B.A, HNDA, M.A in Population Studies

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புடன் பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றோம்.

கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.


வாழ்த்துவோர்: அழகப்பப்பா, கௌரி அம்மம்மா, புவி (96257)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். பல்கலைக்கழகத்தில் 28.03.2010 அன்று இடம்பெற்ற 25 ஆவது பட்டமளிப்பு விழாவில் நுண்கலை மாணிப் பட்டம் பெற்ற



திருமதி அஜேந்திரன் ஷோபா [B.F.A. (Music)]



இராசதுரை உதயராஜ் [B.F.A. (Art and Design)]

ஆகியோர் மேலும் பல பட்டங்களைப் பெற்று பல்லாண்டு காலம் வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

13/2. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

இராசதுரை (அப்பா P.H.F.O), அம்மா, அண்ணா (பாபு), தங்கை, தம்பி-உதயன், மைச்சாள்-ஹேமலதா, கணவர்-அஜேந்திரன், மகன்-கெவின். (96217)

## உதவி முகாமையாளர் தேவை

தகைமை: க.பொ.த (உ/த) சித்தி உயிரியல் (Biology) க.பொ.த (சா/த) விசேட சித்தி கணிதம்

சம்பளம்: பேசித்தீர்மானிக்கப்படும்.

சான்றிதழ்களுடன் நாளை (02.04.2010) வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணிக்கு நேரில் சமுகம் தரவும்.

Bio Tec, 131/2, Palaly Road, Thirunelvely. T.P No. 0214590907 (ஓ/96259)

## St.PATRICK'S COLLEGE O.B.A. JAFFNA

Results of Patrician Raffle held on 21.03.2010 Winning Nos. 1st 6313, 2nd 4018, 3rd 5103 Consolation: 2646, 4132, 9014, 0385, 0344, 2763, 6501, 1097, 0463. (96229)

# வலை முடித்தல், கடலுணவு பதனிடல் பயிற்சி நெறிகள்

வண்ணை, ஏப். 01

யாழ். அரச அதிபரின் ஏற்பாட்டில் 'சைல்பண்ட்' நிறுவன அனுசரணையுடன் யாழ். கடலோட்டு மற்றும் இயந்திரவியல் கல்லூரி கீழ்க்காணும் பயிற்சிகளை வழங்க இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வலை முடித்தல் மற்றும் கடலுணவு பதனிடல் ஆகிய பயிற்சி நெறிகளை மற்றுமொரு தடவை ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் இரு தினங்கள் நடத்தவிருக்கின்றது.

எதிர்வரும் 5ஆம் திகதி திங்கட் கிழமையும், 6ஆம் திகதி செவ்வாய்க் கிழமையும் மேற்படி பயிற்சி நெறிகள் மீளவும் இடம்பெறவிருப்பதாக உதவிப் பணிப்பாளர் இ. செபஸ்தியாம்பிள்ளை தெரிவித்துள்ளார். (ஒ-160)

# 'உதிரத்து இராகங்கள்' இறுவட்டு வெளியீடு

வண்ணை, ஏப். 01

'குருநகர் நாட்டுக்கூத்து மன்றம் வெளியிடும் கலைமாணி, கிரகரி கிறிஸ்தோப்பர் பாடிய 'உதிரத்து இராகங்கள்' இறுவட்டின் வெளியீடு இன்று வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு புனித யாகப்பர் ஆலய மண்டபத்தில் மன்றத் தலைவர் சி.தாா்சீசியஸ் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக அருட்தந்தை ஜே.எக்ஸ். பீ. றெக்னோ அடிகள் கலந்து கொள்வார். பங்குத் தந்தை அருட்பணி ஆர். நேசராசா அடிகள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளவதுடன் இறுவட்டின் முதல் இறுவட்டையும் பெற்றுக்கொள்வார். (ஒ-160)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழகத்தில் கடந்த 27.03.2010 வெள்ளிக்கிழமை நடைபெற்ற 25ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் கலைமாணி B.A பட்டம் பெற்ற

செல்வன் கனகசிங்கம் சசீதரன்

அவர்களை மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று அகிலமெங்கும் சீரும் சிறப்புடனும் வாழ்கவென மனமார வாழ்த்துகின்றோம்.

கரகத்தாம்புலம், பொலிகண்டி, வல்வெட்டித்துறை.

வாழ்த்துவோர்: அப்பா, அம்மா, அக்காமார்-நிமலா, சகிலா, அத்தான்மார்-சிவானந்தமூர்த்தி, பிறேமரஞ்சித், மாமா-வரதன். (ஓ/566331)

## TEC Education Programs (April Intake)

★ **Scholarship - 2010**

Free Computer & IT Training For

- Students (9-16 Age Group)
- GCE O/L ICT Students

★ **TEC Diploma & Certificate Level**

Programs in Computer & IT Education

★ **English Programs**

- TEC Certificate in Professional English
- Spoken English with Grammar
- IELTS
- Elocution Class.

விபரங்களுக்கு: **TEC Srilanka**

(An ISO 9001 Certified Company)

மானிப்பாய் வீதி, கோப்பாய் சந்தி அருகாமை, கோப்பாய்.

தொ.பே. 0770417744/ 0712782178 (ஓ/566332)

## கண்ணீர் அஞ்சலி

அளவெட்டி மகாஜன சபையின் பொருளாளர் இ.இடாகுரனின் அன்புத் தாயார்

திருமதி அன்னலட்சுமி இராசநாயகம்

காலமான செய்தி கண்டு துயருறுவதுடன் அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

அளவெட்டி. (96266) அளவெட்டி மகாஜன சபையும், மகாஜனசபை கலைஞர் வட்டமும்.

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் 2010

டாக்டர் கந்தசாமி திருலோகமூர்த்தி (J.P)





அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர்

தேசத்தின் சேவையாளனைத் தெரிந்து வாக்களித்து வெற்றி பெறச் செய்வோம். (96264)

## கண்ணீர் அஞ்சலி



திருமதி புஸ்பராணி செயந்திரராசா

எமது பாடசாலை காவலாளியாகக் கடமையாற்றும் செயந்திரராசா அவர்களின் துணைவியாரின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள், மாணவர்கள், யா/மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலயம். (C/566327)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.பு.கஜநாத் [B.B.A. (Hons) Special in H.R.M.]



செல்வி லோ.சாயிசுதா [B.B.A. (Hons) Special in H.R.M.]



திரு.க.றமேஸ்நேசன் [M.A. in Development Studies]



திருமதி வி.பிரியகாந்தினி [B.A. Diploma in Banking and Finance]

மக்கள் வங்கி யாழ்.பல்கலைக்கழக குடும்ப உறுப்பினர்களாகிய இவர்கள் மேற்படி கல்வித்துறையில் பட்டம்பெற்று உயர்வு கண்டதனை மனமகிழ்வுடன் பாராட்டுவதுடன் மேலும் பட்டங்கள் பலபெற்று வாழ்வில் உயர்வுற வாழ்த்துகின்றோம்.

மக்கள் வங்கி யாழ்.பல்கலைக்கழக குடும்பத்தினர். (96262)

## மரண அறிவித்தல்



நல்லையா சிறிஸ்கந்தராசா

கொக்குவில் மேற்கு, மஞ்சவனப்பதி வீதியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ், எத்திறாம்பியை கொமினை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா சிறிஸ்கந்தராசா அவர்கள் 26.03.2010 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் நல்லையா (பிரான்ஸ்) காலஞ்சென்ற அன்னலட்சுமி ஆகியோரின் அன்பு மகனும், சிறிகாந்தா (சுவிஸ்), சிறிதரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைச் சகோதரனும், அம்பிகாவதி (பாமா-சுவிஸ்), நளாயினி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், சுஜீவன், றஜீவன், அரவிந், கௌசலியா, தர்சிகா, கௌசிகன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், காலஞ்சென்ற விநாசித்தம்பி-நல்லமுத்துவின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.04.2010) வெள்ளிக்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னாரின் துக்க அனுஷ்டிப்பு நாளை (02.04.2010) வெள்ளிக்கிழமை இராமுப்பிள்ளை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில் இல்லத்தில் நடைபெறும்.

இராமுப்பிள்ளை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். தொ.பே: 0213211890 (96263)

தகவல்: வி.சந்திரதேவா (மாமா), (வன்னியசிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நளினியின் விவகாரத்தில் தமிழக அரசின் முடிவை எதிர்த்து மன்றில் மேல்முறையீடு



வேலூர், ஏப். 01

நளினியை விடுதலை செய்ய முடியாது என்கிற தமிழக அரசின் முடிவை எதிர்த்து மேல் முறையீடு செய்வோம் - என்று வேலூர் சிறையில் நளினியை நேற்றுமுன்தினம் சந்தித்த பின்னர் சட்டத்தரணி புகழேந்தி தெரிவித்தார்.

ராஜீவ் கொலை வழக்கில் நளினி கைதுசெய்யப்பட்டார். இந்த வழக்கில் அவருக்கு தூக்குத்தண்டனை வழங்கப் பட்டது. பின்னர் அது ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது. கைது செய்யப் பட்ட 1991 ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரை அவர் சிறையில் இருக்கிறார்.

தம்மை முன்கூட்டியே விடுதலை செய்யவேண்டும் என்று நளினி வைத்த கோரிக்கையை தமிழக அரசு ஏற்க மறுத்துவிட்டது. அதற்கான 8 காரணங்களை தமிழக அரசு உயர்நீதிமன்றில் கூறியுள்ளது.

இந்த நிலையில் நளினியின் சட்டத்தரணி புகழேந்தி நேற்றுமுன்தினம் வேலூர் பெண்கள் சிறையில் நளினியைச் சந்தித்து வழக்கு விவரங்களைத் தெரிவித்தார். நளினியை விடுதலை செய்யாமல் இருப்பதற்கு அரசு கூறிய 8 காரணங்களை நளினியிடம், சட்டத்தரணி புகழேந்தி எடுத்துரைத்தார்.



பென்னாகரத்தில் தி.மு.க.அமோக வெற்றி பெற்றதைக் கொண்டாடும் வகையில் தொண்டர்களுக்கு கருணாநிதி இனிப்பு வழங்கிய போது......

# பென்னாகரம் தேர்தலில் அ.தி.மு.க. தோற்றதால் தொண்டர் தீக்குளிப்பு!



ஈரோடு, ஏப். 01

பென்னாகரம் இடைத்தேர்தலில் அ.தி.மு.க. தோல்வியடைந்தமையால் அக்கட்சித் தொண்டர் ஒருவர் தீக்குளித்தார்.

ஈரோடு பிராமண பெரிய அக்ரஹாரத்தை சேர்ந்தவர் தங்கவேல் (வயது - 55). டீ மாஸ்டர். இவர் அ.தி.மு.க. செயற்குழு உறுப்பினராக உள்ளார்.

பென்னாகரத்தில் அ.தி.மு.க. தோல்வி டைந்தால் தீக்குளிப்பேன் என்று அக்கம் பக்கத்தில். உள்ளவர்களிடம் கூறி வந்துள்ளார். குடிபோதையில் அவர் உளறுகிறார் எனக் கருதிய அவரது உறவினர்கள், அசட்டையாக இருந்துள்ளனர். நேற்றுமுன்தினம் பென்னாகரம் தேர்தல் முடிவை கேட்டு, விரக்தியடைந்த தங்கவேல், மதியம் 12 மணியளவில் ஒரு லீற்றர் பெற்றோல் வாங்கி வந்தார்.

இதை பார்த்த அவரது உறவினர் சுப்பிரமணி, அந்தப் போத்தலை பறித்து வீட்டில் ஒளித்து வைத்தார். மீண்டும் வீட்டுக்குச் சென்ற தங்கவேல், பெற்றோல் போத்தலை எடுத்துக் கொண்டு கனிராவுத் தர்குளம் பகுதியில் யாரும் எதிர்பார்க்காத நேரத்தில் தலை மீது பெற்றோலை ஊற்றித் தீப்பற்ற வைத்துக் கெண்டார்.

தீ மளமளவென உடல் முழுவதும் பரவியது. அருகிலிருந்தவர்கள், தண்ணீரை அவர் மீது ஊற்றி தீயை அணைத்தனர்.

பின்னர் அம்புலன்ஸ் மூலம், ஈரோடு அரச வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்ட அவர், 60 சதவீதம் தீக்காயங்களுடன் கவலைக்கிடமாக உள்ளார்.

# இராமேஸ்வரம் மீனவர் மீது மீண்டும் இலங்கைப்படை கடலில் தாக்குதல்

## கியூ பிரிவுப் பொலிஸார் விசாரணை

இராமேஸ்வரம், ஏப். 01

இராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் மீண்டும் தாக்குதல் நடத்தி அவர்கள் பிடித்து வைத்திருந்த மீன்களைக் கொள்ளையடித்துச் சென்றனர்.

கடந்த திங்களன்று இரவு இராமேஸ்வரத்தில் இருந்து மீனவர்கள் 500 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்றனர். அவர்கள் கச்சதீவு அருகே நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந் தனர்.

அப்போது ஒரு கப்பலிலும், 3 ரோந்து படகுகளிலும் இலங்கைக் கடற்படையினர் அங்கு வந்தனர். அவர்களைக் கண்டதும் மீனவர்கள் பயந்து போய் கரைக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். ஆனால் அதற்குள் இலங்கைக் கடற்படையினர் சுமார் 25 படகுகளைச் சுற்றி வளைத்தனர்.

பின்னர் இலங்கைக் கடற்படையினர் ஒவ்வொரு படகாகச் சென்று மீனவர்களை கட்டையாலும் பைப்பாலும் அடித்தனர். கைகளை தூக்கச்சொல்லி சித்திரவதை செய்தனர். சில படகுகளில் இருந்த மீன்பிடி சாதனங்களை. கடலுக்குள் வீசி எறிந்தனர். பின்னர் அவர்கள் பிடித்து வைத்திருந்த விலை உயர்ந்த மீன்களைக் கொள்ளையடித்தனர். இப்படி 10 படகுகளில் மீன்களைக் கொள்ளையடித்து விட்டு சென்றுவிட்டனர்

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் ராஜசேகர் (வயது - 40) என்ற மீனவரின் கால் முறிந்தது. இந்தச் சம்பவத்தால் பெரும்பாலான மீனவர்கள் மீன்பிடிப்பதை நிறுத்திவிட்டு கரைக்குத் திரும்பினர்.

இதுபற்றி கியூ பிரிவுப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு சடலங்களை விற்கும் பொலிஸார்!

## ராஜஸ்தானில் சம்பவம்

ஜெய்ப்பூர், மார்ச் 01

மருத்துவக் கல்லூரிகளில் உடற்கூறு பற்றி பாடம் நடத்த சடலங்களைப் பயன்படுத்துவது உண்டு. இந்நிலையில், ராஜஸ்தான் மாநிலம் ஸ்ரீகங்காநகரில், கேட்பார் இல்லாத பிணங்களை தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு பொலிஸார் விற்று வருகின்றமை தெரிய வந்துள்ளது.

இதுகுறித்து ராஜ்குமார் சோனி என்பவர் கூறியவை வருமாறு -

என் மகன் ராகுல் (வயது - 19) கடந்த ஆண்டு மே மாதம் கொலை செய்யப்பட்டான். அவனை அடையாளம் தெரியாத சடலமாகக் கருதி, அவனின் சடலத்தை தனியார் மருத்துவக் கல்லூரிக்கு பொலிஸார் விற்று விட்டனர். அந்த கல்லூரிக்கு நான் சென்றபோது, என் மகனின் சடலம் உட்பட 38 சடலங்கள் இருந்தன. இதையடுத்து, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் நான் விண்ணப்பித்தபோது, ஸ்ரீகங்காநகரில் கடந்த 4 ஆண்டுகளில், 29 சடலங்களை விற்றுள்ளமை தெரிய வந்தது - என்றார்.

இதையடுத்து, இவ்விவகாரம் தொடர்பாக, மாநில அரசு விசாரணைக்கு உத்தர விட்டுள்ளது. 4 இன்ஸ்பெக்டர்கள், 3 துணை இன்ஸ்பெக்டர்கள் ஆகியோர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் 6 பேருக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

# சென்னையில் நில நடுக்கம்; வீதிகளுக்கு மக்கள் ஓட்டம்!

சென்னை, ஏப். 01

சென்னையில் நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் தியாகராய நகர், நுங்கம்பாக்கம், கொட்டிவாக்கம், புரசைவாக்கம் உட்பட பல்வேறு இடங்களில் லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது.

சென்னையில் நேற்றுமுன்தினம் இரவு நுங்கம்பாக்கம், புரசைவாக்கம், கொட்டிவாக்கம், ராயப்பேட்டை உள்ளிட்ட பல இடங்களில் நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணி அளவில் லேசான நிலநடுக்கம் ஏற்பட்டதை மக்கள் உணர்ந்தனர். இதனால் தூங்கிக் கொண்டிருந்த பலர் வீட்டைவிட்டு அவசரமாக வெளியே ஓடிவந்தார்கள். நிலநடுக்கத்திற்கு பயந்து போய் வீதியில் வந்து அமர்ந்து கொண்டனர். வீட்டிலிருந்த பாத்திரங்கள் அதிர்ந்ததை உணர்ந்தனர் என நுங்கம்பாக்கத்தைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

சென்னை மண்டல வானிலை ஆய்வு மைய அதிகாரி ஒருவர், சென்னையில் பூமி அதிர்ந்ததை உறுதி செய்தார்.

அவர் கூறுகையில், அந்தமான் தீவில் நேற்றுமுன்தினம் அரவு 10.30 மணிக்கு பூகம்பம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவில் 6.9 ஆக பதிவாகியுள்ளது. இதன் தாக்கம் சென்னையில் உணரப்பட்டது. நிலநடுக்கம் 3 முதல் 4 வினாடிகள்வரை நீடித்தது. இதுபோல சென்னை தியாகராய நகர், புரசைவாக்கம், கொட்டிவாக்கம், ராஜா அண்ணாமலைபுரம் உட்பட பல இடங்களில் நிலநடுக்கம் ஏற்பட்டது என அந்தப் பகுதி மக்கள் தொலைபேசியில் தெரிவித்தனர். இந்த லேசான நில அதிர்வால் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை - என்று தெரிவித்தார்.

# ரஷ்யாவில் இரண்டாவது தடவையாகவும் குண்டுவெடிப்பு; 9பொலிஸார் உட்பட 12 பேர் பலி!

மொஸ்கோ, ஏப். 01

ரஷ்யாவின் வடக்கு காகசஸ் பகுதியிலுள்ள தாகீஸ்தான் குடியரசில் நேற்று புதன்



கிழமை இடம்பெற்ற இரு குண்டுத் தாக்குதல்களில் 12 பேர் கொல்லப்பட்டனர். இவை தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களாகும் என உள்ளூர் உயர்மட்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கிஸ்லியர் நகரிலுள்ள உள்துறை அமைச்சக அலுவலகத்துக்கும், எவ்.எஸ்.பி. பாதுகாப்பு நிறுவனத்துக்குமிடையே உள்ளூர் நேரப்படி காலை 8.30 மணியளவில் முதல் தற் கொலைக் கார்க்குண்டு வெடித்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இக்குண்டுத் தாக்குதலை அடுத்து, இவ்விடத்துக்கு மக்கள் வந்து கூடினார்கள். மக்கள் கூடியதும் 20 நிமிடங்களுக்குப் பின்னர் அங்கு பிறிதொரு தற்கொலைக் குண்டுதாரி இரண் டாவது குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளார் என்றும் உயர்மட்ட பொலிஸ் அதிகாரி விளக்கினார்.

முதல் தற்கொலைக் குண்டுதாரி தான் செலுத்திவந்த காரை கிஸ்லியர் நகர மத்திய பகுதியை நோக்கி செலுத்த முற்பட்டுள்ளார். அப்போது பொலிஸார் அதை நிறுத்த முயன்றுள்ளனர். அச்சமயம், குண்டுதாரி குண்டை வெடிக்க வைத்துள்ளார் என தாகீஸ்தான் உள்துறை அமைச்சர் ராஷீட் நுர்கலிவ் தெரிவித்தார்.

''இக்குண்டு வெடித்த இடத்தில் பொலிஸார், அவசரகாலச் சேவையாளர்கள், பகுதி குடியிருப்பாளர்கள் ஆகியோர் வந்து கூடியுள்ளனர். அச்சமயம், பொலிஸ் சீருடையில் வந்த பிறிதொரு தற்கொலைக் குண்டுதாரி தான் மறைத்து வைத்திருந்த குண்டை வெடிக்க வைத்துள்ளார்'' என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

''இக்குண்டுத் தாக்குதல்களில் பலியானோரில் நகர பிரதம பொலிஸ் அதிகாரி கேணல் விட்டலி வெடிர் நிக்கோவும் அடங் குவார். இவருடன் ஒன்பது பொலிஸார் கொல்லப் பட்டுள்ளனர். 18 பேர் காயமடைந்துள்ளனர்'' என்றும் நூர்கலிவ் மேலும் தெரிவித்தார்.

நேற்று புதன்கிழமை இடம்பெற்ற இக்குண்டுத் தாக்குதல்களை அடுத்து, ரஷ்ய உள்துறை அமைச்சரும் பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஏற்கனவே மொஸ்கோ ரயில் நிலையத்தில் நடந்த தாக்குதல்களுக்கு வடக்கு காகசஸ் பிராந்திய தீவிரவாதிகள் தான் காரணம் என ரஷ்ய பொலிஸ் கருதியது. இப்போது வடக்கு காகசஸிலேயே தாக்குதல் நடந்துள்ளது. எனவே, இப்போதைய தாக்குதலையும் வடக்கு காகசஸ் தீவிரவாதிகளே நடத்தி இருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது.


## ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி விழா



விரோதி வருஷம் பங்குனி மாதம் 19ஆம் நாள்
(02.04.2010) வெள்ளிக்கிழமை ஷஷ்டியப்த
பூர்த்தி விழா (மணி விழா) காணும்
புன்னாலைக்கட்டுவன் - ஈவினை ஸ்ரீ கற்பக
விநாயகர் தேவஸ்தானம்
பிரம்மஸ்ரீ தியாக. கெங்காதரக்குருக்கள்
- விஜயலக்ஷ்மி தம்பதிகளை
பல்லாயிரம் பிறைகள் காண எல்லாம் வல்ல
இறைவனை வேண்டுகிறோம்.
இப்பெருஞ்சாந்தி விழாவில்
சிவாச்சாரியார்களுக்குரிய த்ரிசதி நாம கதம்பம்
(கிரந்த லிபி) நூலை இலவசமாக
வெளியடுவதில் பேருவகையடைகிறோம்.
இங்ஙனம் ஆசிகளை வேண்டி நிற்கும்:
சர்வேஸ் - சரண்யா, கமலேஸ், பாலேஸ் (பிள்ளைகள்)
ஈவினை, புன்னாலைக்கட்டுவன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிப்போரில் காணாமல்போனோரின் விவரங்களைத் திரட்டுகிறது வட, கிழக்கு மனித உரிமைச் செயலகம்

கொழும்பு, ஏப். 01

விடுதலைப் புலிகளுக்கும், படையினருக்கும் இடையில் முள்ளிவாய்க்கால் பகுதியில் நடைபெற்ற இறுதிக்கட்டப்போரின் போது படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போனோரின் விவரங்களைத் திரட்டும் முயற்சியில் வடக்கு, கிழக்கு மனித உரிமைச் செயலகம் ஈடுபட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமது இந்நடவடிக்கை குறித்து அவ்வமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற இறுதிக்கட்டப் போரைத் தொடர்ந்து மக்களும், போராளிகளும் பெரும்திரளாக வெளியேறிய போது பல்லாயிரக் கணக்கானோர் இராணுவத்தால் கைது செய்யப் பட்டனர். இவர்களில் பலர் காணாமல் போயுள்ளனர் என எமக்குக் கிடைத்த தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

இவ்வகையாகக் கைது செய்யப்பட்டு காணாமல் போனவர்களில் விடுதலைப் புலிகள் அங்கத்தவர்கள் அல்லாதவர்கள் பலரும் அடங்கியிருக்கிறார்கள். பல குடும்பங்கள் தாய், தந்தை, குழந்தைகள் உட்பட்ட பலரும் இவ்வகையாக காணாமல் போயுள்ளனர். இவர்களில் மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளும் அடங்குவர். கைது செய்யப்பட்டவர்களில் பெண்கள் சிலர் கர்ப்பிணிகளாக இருந்தமையும் தெரியவந்துள்ளது.

வெளியுலகத் தொடர்பேதுமின்றி இரகசியத் தடுப்பு முகாம்களில் அடைக்கப்பட்டிருப்போரின் நிலைமை ஆபத்தாகவே உள்ளது. இதனுள் மிகமோசமான வதைகள் இடம்பெற்று வருகின்றன எனச் செய்திகள் வருகின்றன. முக்கியமாக பெண்களின் நிலை கவலைக்கிடமானது.

எனவே உங்கள் உறவினர், தெரிந்தவர்கள் இவ்வகையாக காணாமல் போயிருந்தால் அதுதொடர்பான தகவல்களைத் தந்துதவுமாறு வடக்கு, கிழக்கு மனித உரிமைச் செயலகம் மக்களைக் கேட்டுள்ளது.

இத்தகவல்களை மின்னஞ்சல் மூலம் அனுப்ப முடியும். அத்துடன், புலம் பெயர் வாழ் தமிழ்மக்கள் தங்களுக்குத் தெரிந்த, தாயகத்தில் வாழும் மின்னஞ்சல் வசதியற்ற உறவுகளிடமிருந்தும் விவரங்களைப் பெற்று தமக்கு அனுப்பி வைக்கும்படியும் மனித உரிமைச் செயலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. விவரம் தருபவர்களின் பெயர், விவரங்கள் வெளியிடப்படமாட்டாது - என்றுள்ளது.

## புனர்வாழ்வுக்கழக உறுப்பினர் நேற்று நீதிமன்றில் ஆஜர்

கொழும்பு,ஏப்.1

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உறுப்பினர்கள் பலர் நேற்று நீதிமன்றத்தில் முன்நிறுத்தப்பட்டனர்.

இவர்களை இம்மாதம் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் உத்தரவிட்டார்.

விடுதலைப் புலிகளுக்கு நிதி சேகரித்து வழங்கினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, விடுதலைப் புலிகளுக்கு நிதியுதவி வழங்கினார் என்ற குற்றச்சாட்டின் பேரில், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைவர் காந்தலிங்கம் பிரேம் (ரெஜி) ஐக் கைதுசெய்வதற்கான பிடியாணை உத்தரவு சர்வதேசப் பொலிஸாரால் பிறப்பிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே. (அ-10)

## சகலரையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த வாரம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கு முன்னதாக டேவிட் மில்லிபாண்ட் இவ்வாறான அறிக்கையை ஏன் வெளியிடவேண்டும் எனக் கேள்வி எழுப்பியுள்ளார் இலங்கை அரச பாதுகாப்புப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல.

பிரிட்டனின் இந்த அறிக்கை இலங்கை அரசு விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் பெற்ற வெற்றிகளை மழுங்கடிக்கும் நோக்கத்திலானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் பக்கச்சார்பாக நடந்துகொள்கிறது. அறிக்கை வெளியான தருணத்தைக் கருத்தில் கொள்ளும்போது பலத்த சந்தேகம் ஏற்படுகின்றது எனத் தெரிவித்துள்ள அவர், பிரிட்டிஷ் நீண்டகாலமாகவே இலங்கையின் மனித உரிமை நிலைவரம் குறித்துக் குரலெழுப்பி வருகின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, டேவிட் மில்லிபாண்ட் தனது வீடியோ உரையில் தெரிவித்திருப்பவை வருமாறு:-

இலங்கை தொடர்பாக பிரிட்டன் மூன்று விடயங்கள் குறித்துக் கரிசனை கொண்டுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரைக்கும் இவை முன்னுரிமைக்குரிய விடயங்களாகும்.

✱ வன்முறைகளுக்கு முடிவு காணுதலே முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டிய முதலாவது விடயமாகும்.

✱ வன்முறைகளால் நாட்டின் எந்த சமூகத்திற்கும் பலன்கள் கிட்டப்போவதில்லை.

✱ இரண்டாவதாக இலங்கையைச் சேர்ந்த அனைவருக்கும் சமூக, பொருளாதார மனித உரிமைகள் சமமாகக் கிடைக்க வேண்டும்.

✱ ஜனாதிபதித் தேர்தல் வேளையிலும், அதற்குப் பின்னரும் காணப்பட்ட வன்முறையின் அளவு குறித்தும் ஊடக சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடுகள் குறித்தும் நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம்.

✱ தேர்தல்களை நடத்துவதால் மாத்திரம் ஜனநாயகம் வளர்ச்சியடைவதில்லை. அவை குறித்து சுதந்திரமாகச் செய்தி வெளியிடுதல், சுதந்திரமான நீதித்துறை மற்றும் வெளிப்படைத்தன்மை மிக்க சமூகம் என்பனவும் ஜனநாயகம் தழைத்தோங்குவதற்கு அவசியமானவையாகும்.

✱ இலங்கையின் அனைத்துப் பிரஜைகளினது உரிமைகளையும் சமமாக மதிக்கும் அரசமைப்பு நடைமுறையொன்றை உருவாக்க வேண்டும்.

எந்த நாட்டிற்கும் இது சவாலான விடயம்.

✱ எனினும், சிறுபான்மை சமூகத்தவரும் மதிக்கப்படுகின்றமை நாகரிக சமூகமொன்றிற்கு அவசியமான விடயம்.

✱ ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையுடன் வெளிப்படையான தொடர்புகளுடன் கூடிய வர்த்தக உறவைப் பேணுவதற்கு விரும்புகின்றது.

- எனினும் இலங்கை அரசு மனித உரிமைகள் குறித்த முக்கிய பிரகடனங்களைப் பின்பற்றாததால் 'ஜி.எஸ்.பி. பிளஸ்' வரிச்சலுகையை இடைநிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

✱ இலங்கை அரசு நாம் முன்வைத்துள்ள கரிசனைகளுக்கு விரைவில் தீர்வு காணும் எனக் கருதுகிறோம். - எனத் தெரிவித்துள்ளார். (அ-சி)

## கூட்டமைப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று அரசு மேலும் கூறியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற கட்சிகள் தடைசெய்யப்பட வேண்டும் என்று கோத்தபாய ராஜபக்ஷ அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்தார் என்று சுட்டிக்காட்டி செய்தியாளர் ஒருவர் நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவே மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

முப்பது வருடங்களாக இருந்துவந்த பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்பட்டுப் பிளவுபடாத நாட்டில் அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக வாழ்வதற்கான சூழலை எமது ஜனாதிபதி ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் இந்த நாட்டில் இனி எவரும் பிரிவினைவாதம் பற்றிப் பேசக்கூடாது. இன உறவு, சமாதானம் மற்றும் அபிவிருத்தி போன்றவை பற்றியே பேசவேண்டும்.

நாட்டைப் பிளவுபடுத்தும் வகையில் இனியும் கருத்துக்களை முன்வைப்பது பாரதூரமான ஒன்றாகும். இதற்கு இந்த நாட்டு மக்கள் இடங்கொடுக்கக் கூடாது. இந்த நாட்டு மக்களின் ஒரே தெரிவு இன ஐக்கியம்தான். இதற்கு எதிராக எவரும் செயற்பட முடியாது.

நாட்டைப் பிளவுபடுத்தும் வகையில் கருத்துகளை வெளியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற கட்சிகள் தடைசெய்யப்பட வேண்டும் என்று அண்மைக் காலத்தில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருந்தமை சரியான ஒன்றே.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனியும் பிரிவினைவாதம் பற்றிப் பேசாது இன ஐக்கியத்தைப் பற்றிச் சிந்தித்து மிகப் பொறுப்புடன் செயற்பட வேண்டும் - என்றார்.

## தேடப்படும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்து மன்றில் ஆஜர் செய்தனர். இவர்களை எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் ரி.ஜே. பிரபாகரன் முன்னிலையில் நேற்றுக்காலை இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கொலை செய்யப்பட்ட மாணவனின் தந்தையாரான எஸ்.திருச்செல்வம் சகோதரிகளான தி.தனுசியா, தி.கௌசிகா ஆகியோர் நீதிமன்றுக்கு சமுகமளித்திருந்தனர்.

சந்தேகநபர்கள் தரப்பில் இந்த வழக்கின் முதலாவது சந்தேகநபரான குமாரசிங்கம் கேசவன் அல்லது ஜீவன் என்பவரின் தாயாரான குமாரசிங்கம் திருப்பதி அம்மா, சகோதரியான குமாரசிங்கம் சுகன்ஜா மற்றும் இரண்டாம் எதிரியான யோகேஸ்வரன் சாந்தீபன், கணேஸ்வரன் தயாராஜ், திவாகரசர்மா துஷாந்தன், ரவின் ரங்க ஆகியோரை சாவகச்சேரிப் பொலிஸார் மன்றில் ஆஜர் செய்தனர்.

கொலைசெய்யப்பட்ட மாணவரின் சகோதரியான திருச்செல்வம் தனுசியா, திருச்செல்வம் கௌசிகா ஆகியோர் பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலம் மன்றில் வாசிக்கப்பட்டது. அதில் தனது சகோதரனைக் கடத்தியவர்கள் அவரது கைத்தொலைபேசி இலக்கத்திலிருந்து தமது வீட்டுக்குத் தொடர்புகொண்டு பேசினார்கள் என்று திருச்செல்வம் தனுசியா தனது வாக்கு மூலத்தில் தெரிவித்திருந்தார்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சனத்குமாரவின் வாக்குமூலமும் நீதிமன்றத்தில் நேற்றுப் பதிவு செய்யப்பட்டது.

கொலைசெய்யப்பட்ட மாணவரின் கைத்தொலைபேசி இரண்டாவது சந்தேகநபரான சாந்தீபனிடம் இருந்து மீட்கப்பட்டதாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனது வாக்குமூலத்தில் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து இந்த வழக்கின் சந்தேகநபர்களில் திவாகரசர்மா துஷாந்தன், ரவின் ரங்க ஆகியோர் விடுதலை செய்யப்பட்டனர். ஏனைய சந்தேகநபர்களான யோகேஸ்வரன் சாந்தீபன், கணேஸ்வரன் தயாராஜ், குமாரசிங்கம் திருப்பதி அம்மா, குமாரசிங்கம் சுகன்ஜா ஆகியோரை எதிர்வரும் 7ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த வழக்கு மீண்டும் எதிர்வரும் 7ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.


கருத்தரங்கு
பொருளியல்
திரு.P.சண்
தேசிய வருமானக் க/கு
02.04.2010 வெள்ளி
8.00am - 12.30pm
யூனிவேர்சல்
1.30pm - 6.00pm
திரு ஜியூசன் சென்ரர்

தமிழ்க் காங்கிரஸ்

X 10
S.வரதராஜன்
(முதன்மை வேட்பாளர்)

பொறியியல் துறை சார்ந்த மாணவர்களுக்கான !!!
Advanced Diploma in Architecture CAD
(With 3D Max Modeling)
- Online Class (One Month & Full Time) -
இக் கற்கை நெறியானது பொறியியல் துறைசார்ந்த மாணவர்களுக்கும் மற்றும் கட்டட நிர்மாணத்துறை சார்ந்த வரைகலை தொழில்நுட்பவியலாளர்களுக்கும் மிகவும் பயனுள்ள கற்கை நெறி.
திங்கள் தொடக்கம் வெள்ளி வரை காலை 9 - 2 மணிவரை பிரிவு - 01
திங்கள் தொடக்கம் வெள்ளி வரை மாலை 4 - 8 மணிவரை பிரிவு - 02
வகுப்பு ஆரம்பம் - 05/04/2010
விபரங்களுக்கு : UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road, Kantharmadam, Jaffna.
T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862

புதிய பிரிவுகள் ஆரம்பம்
ICT - (A/L) 2011 / 2012
R.Kumaran - B.Sc.
100% practical
Tamil / English Medium
# 74, Sabapathy Lane, Jaffna. TPNO: 0213216083

The Science Corner
Clock Tower Lane, Jaffna
PHYSICS = K.Selvan B.Sc. (Hons)
A/L - 2012 Mechanics

| தமிழ் மொழி மூலம் | English Medium |
|---|---|
| Batch - I Sat, Sun - 7-8am Batch - II Sat, Sun - 4.30-5.30pm | Sat, Sun 3.30-4.30pm |

ஆரம்பம்:- 03.04.2010 (சனி)

பாராளுமன்றப் பொதுத் தேர்தல் - 2010 யாழ் மாவட்டம்
நெஞ்சில் உரமும் நேர்மைத்திறனும் கொண்டு ஒற்றுமைக்காக...
அப்பாத்துரை விநாயகமூர்த்தி LL.B
சிரேஷ்ட சட்டத்தரணி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களை ஆதரிப்போம்

X 1
தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு
(இலங்கை தமிழரசுக்கட்சி)

சுரேஷ் க. பிறேமச்சந்திரன்

நிலையானதும் வலுவானதுமான தீர்வை நோக்கி..
X 3
இலங்கை தமிழரசுக் கட்சி
தமிழ் தேசியக் கூட்டமைப்பு


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.04.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org